Registered as a News Paper in Sri lanka

விலை : ரூபா 10 .00

தினப்பதிப்பு
தினமுரசு
THINAMURASU

அற்புதன் அச்சகம்
அனைத்து விதமான Printing வேலைகளையும்
உயர்தரத்துடனும்
குறைந்த செலவுடனும்
குறித்த நேரத்தில் பெற்றுக்கொள்ளலாம்.
T.P:- 021 222 3628
Fax:- 021 222 1811
373, பிரதான வீதி,
பஸ்ரியன் சந்தி,
யாழ்ப்பாணம்.

முரசு – 05 | திருவள்ளுவர் ஆண்டு 2046 தை 05 திங்கட்கிழமை (19.01.2015) பக்கங்கள் 20 | ஓசை – 111



# ஐ.நா.வுடன் ஒத்துழைக்க எப்போதும் தயார்

## பிரதமர் ரணில் சொல்கிறார்

(கொழும்பு)

**எல்லா வகையிலும் ஐக்கிய நாடுகள் சபையுடன் ஒத்துழைக்க புதிய அரசு எப்போதும் தயாராக உள்ளதாக பிரதமர் ரணில் விக்ரமசிங்க தெரிவித்துள்ளார்.**

குறிப்பாக வடக்கில் நடைபெற்ற போர்க்குற்றங்கள் தொடர்பான விசாரணைகளில் ஐக்கிய நாடுகள் சபைக்கு ஒத்துழைப்பு வழங்கத் தயாராக உள்ளதாக பிரதமர் ரணில் விக்ரமசிங்க தெரிவித்துள்ளார்.

இது குறித்து இந்திய ஊடகம் ஒன்று வினவியபோது, ஐக்கிய நாடுகள் சபை தனது அறிக்கையை சமர்ப்பிக்க முடியும் எனவும் இந்த விடயத்தில் ஐ.நா.வுக்கு ஒத்துழைப்பு வழங்கத் தயாராக உள்ளதாகவும் கூறினார்.

மேலும் சீனாவை இந்தியாவிற்கு எதிராகவும், இந்தியாவை சீனாவிற்கு எதிராகவும் வைத்து முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ விளையாட முயற்சித்ததாகவும், அதுவே அவருக்கு தடையாக வந்து விட்டது எனவும் ரணில் குறிப்பிட்டார்.

நாம் இந்தியாவுடன் பாரம்பரிய நட்புறவைப் பேணும் அதே வேளை, சீனா, ஜப்பான் போன்ற பிற நாடுகளுடனும் நட்புறவைப் பேணுவோம் எனவும் அவர் சுட்டிக்காட்டினார்.

மகிந்த ராஜபக்ஷவின் ஆட்சிக்காலத்தில் சீனா இலங்கையில் 6 பில்லியன் அமெரிக்க டொலர் மதிப்பீட்டிலான முதலீடுகளை மேற்கொண்டுள்ளதாகவும், அவற்றில் துறைமுகங்கள் மற்றும் விமான நிலையங்கள், போட் சிட்டி காம்லெக்ஸ் ஆகிய மூலோபாய உள்கட்டமைப்பு திட்டங்களும் அடங்குவதாக ரணில் விக்ரமசிங்க குறிப்பிட்டார்.

மேலும் சீனா உடனான சில ஒப்பந்தங்களை மறுபரிசீலனை செய்யப் போவதாகவும் அவர் இதன்போது தெரிவித்தார்.

அவரிடம் தமிழர் பகுதிகளுக்கு சுயாட்சி வழங்குவது தொடர்பில் வினவியபோது, கொள்கை அளவில் 13 ஆவது திருத்தச் சட்டத்தை அமுல்படுத்துவது ஏற்றுக்கொள்ளப்பட்டுள்ளதாக குறிப்பிட்டார்.

# தேர்தல் கால வாக்குறுதிகளை நிறைவேற்ற தவறக்கூடாது

## இணைந்து செயற்படவும் தயார்



(கொழும்பு)

புதிய அரசாங்கம் மேற்கொண்டுவரும் நடவடிக்கைகளைப் பாராட்டியுள்ள அமெரிக்கா, மைத்திரிபால அரசாங்கத்துடன் இணைந்து பணியாற்ற ஆர்வமாகவுள்ளதாக தெரிவித்துள்ளது. அமெரிக்காவின் தெற்கு மற்றும் மத்திய ஆசியாவிற்கான வெளிவிவகார உதவிச் செயலாளர் நிஷா பிஸ்வால் இதனைத் தெரிவித்துள்ளார்.

இதுகுறித்து அவர் மேலும் தெரிவித்துள்ளவை வருமாறு, இலங்கை மக்கள் புதிய அரசாங்கத்திடமிருந்து எதனை எதிர்பார்க்கிறார்களோ அதனையே நாங்களும் எதிர்பார்க்கிறோம்.

இலங்கை மக்களுக்கு அளித்த தேர்தல் வாக்குறுதிகளை புதிய அரசு நிறைவேற்றுவதற்கு நாங்கள் ஆதரவளிக்க விரும்புகின்றோம். புதிய அரசாங்கம் ஆரம்ப நாட்களில் எடுத்துள்ள

(19) ஆம் பக்கம் பார்க்க

# சுஷ்மாவுடன் மங்கள புதுடில்லியில் பேச்சு

## மோடியுடன் இன்று சந்திப்பு



(கொழும்பு)

வெளிவிவகார அமைச்சர் மங்கள சமரவீர இன்று இந்தியப் பிரதமர் நரேந்திர மோடியைச் சந்தித்து பேச்சுவார்த்தை நடாத்தவுள்ளார்.

ஏற்கனவே இந்திய வெளியுறவுத்துறை அமைச்சர் சுஷ்மா சுவராஜ் மற்றும் இலங்கை வெளியுறவுத்துறை அமைச்சர் மங்கள சமரவீர ஆகியோர் கலந்து கொண்ட உயர்மட்டக்குழுவின் கூட்டம் நேற்று புதுடில்லியில் நடைபெற்றது.

இந்தியாவுக்கு மூன்று நாள் பயணமாக புதுடில்லி சென்றுள்ள வெளியுறவுத்துறை அமைச்சர்

(19) ஆம் பக்கம் பார்க்க

# நீரில் மூழ்கி இளைஞன் பலி


(யாழ்ப்பாணம்)

நாவற்குழி பாலத்துக்கு அருகிலுள்ள கடல்நீரேரியில் நேற்று குளிக்கச் சென்ற இளைஞன் ஒருவன் நீரில் மூழ்கி உயிரிழந்துள்ளதாக சாவகச்சேரி பொலிஸார் தெரிவித்தனர்.

யாழ். அரியாலைப் பகுதியைச் சேர்ந்த வி.விஜேந்திரராஜ் (வயது - 23) என்பவரே உயிரிழந்தவராவார். நண்பர்களுடன் குளிக்கச் சென்ற இவர், நீர்த் தடுப்பு அணையின் மீது ஏறி நின்று டைவ் அடித்து பாய்ந்த போது, நீருக்கடியிலிருந்த சேற்றுக்குள் சிக்குண்டு வெளியில் வரமுடியாமல் உயிரிழந்துள்ளார்.

இவரது சடலம் மீட்கப்பட்டு யாழ்.போதனா வைத்தியசாலையில் வைக்கப்பட்டுள்ளதாக பொலிஸார் மேலும் தெரிவித்தனர். (25)

# பொன்சேகா எம்.பி. ஆகிறார்



(கொழும்பு)

ஜயந்த கெடகொடவின் நாடாளுமன்ற உறுப்பினர் பதவியை சரத் பொன்சேகாவுக்கு வழங்க இணக்கப்பாடு எட்டப்பட்டுள்ளதாக தெரியவந்துள்ளது. பொன்சேகா விடுத்த வேண்டுகோளுக்கு அமைய இந்தத்

(19) ஆம் பக்கம் பார்க்க

# இடைக்கால "பட்ஜெட்" அடுத்த வாரம்

(கொழும்பு)

புதிய அரசாங்கத்தின் இடைக்கால வரவு செலவுத் திட்டம் அடுத்த வாரம் அமைச்சரவையின் அனுமதிக்காக சமர்ப்பிக்கப்படவுள்ளது.

குறிப்பாக அரசின் 100 நாள் திட்டங்களுக்காக 20 ஆயிரம் கோடி ரூபாவுக்கான இடைக்கால பட்ஜெட் சமர்ப்பிக்கப்படவுள்ளது என நிதி அமைச்சின் வட்டாரங்களில் இருந்து தகவல்கள் கிடைக்கின்றன.

இந்த இடைக்கால பட்ஜெட் அமைச்சரவையின் அனுமதிக்காக வரும் 29 ஆம் திகதி

(19) ஆம் பக்கம் பார்க்க

# படை விலகல் நடக்காது

## பாதுகாப்பு இராஜாங்க அமைச்சர் தெரிவிப்பு

(கொழும்பு)


வடக்கிலிருந்து இராணுவத்தினரை அகற்றிக் கொள்ளவோ அல்லது குறைத்துக்கொள்ளவோ அரசு இப்போதைக்கு எந்த நடவடிக்கையும் எடுக்கப் போவதில்லை என்று பாதுகாப்பு இராஜாங்க அமைச்சர் ருவான் விஜயவர்தன தெரிவித்துள்ளார்.

மல்வத்த பீடத்தின் மகாநாயக்கரை கண்டியில் நேற்று சந்தித்து கலந்துரையாடிய பின்னர் கருத்து வெளியிடும்போதே அவர் மேற்படி தகவலை வெளியிட்டார்.

தேசிய பாதுகாப்பு கருதி வடக்கில் இருந்து படையினரை இப்போதைக்கு விலக்கிக் கொள்ளப் போவதில்லை என்றும், ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவும் இது தொடர்பில் தெளிவான அறிவித்தலை விடுத்துள்ளதாக பாதுகாப்பு இராஜாங்க அமைச்சர் ருவான் விஜயவர்தன மேலும் குறிப்பிட்டுள்ளார்.

ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன பதவியேற்ற பின்னர்,

(19) ஆம் பக்கம் பார்க்க



# அதிபருக்கு மணிவிழா

(யாழ் நிருபர்)

வவுனியா தமிழ் மத்திய மகா வித்தியாலய அதிபர் எம்.எஸ்.பத்மநாதன் சேவையில் இருந்து ஓய்வு பெறுவதை முன்னிட்டு கல்லூரி சமூகம் மணிவிழா நடத்துவதற்கு முன்வந்துள்ளது.

மணிவிழா நாளை மறுதினம் புதன்கிழமை பிரதி அதிபர் சி.மரியநாயகம் தலைமையில், வித்தியாலயத்தின் ஐயாத்துரை மண்டபத்தில் காலை 10.00 மணிக்கு நடைபெறவுள்ளது.

வவுனியாவைச் சேர்ந்த கல்விமான்கள், அரசியல் பிரமுகர்கள், பெறறோர்கள், சமூக ஆர்வலர்கள் இந்நிகழ்வில் பங்குகொள்ளவுள்ளனர்.(10)

## DDTV யின் இன்றைய நிகழ்ச்சிகள்

| நேரம் | திங்கட்கிழமை |
|---|---|
| AM 05.00 | ஆலய தரிசனம் (பக்தி பாடல்கள்) |
| AM 07.00 | காலை கதிர் |
| AM 08.00 | நாளிதழ் நேரம் |
| AM 09.00 | SMS Time (Live) |
| AM 09.58 | காலை செய்தி |
| AM 10.00 | HELLO DD |
| AM 10.30 | புதுயுகம் |
| AM 11.00 | சிரிக்க சிரிக்க |
| AM 11.30 | சிரிக்க சிரிக்க |
| PM 12.00 | வரலாற்று நாயகர்கள் |
| PM 12.30 | தமிழ் பேசு தமிழா |
| PM 01.20 | பாடல்கள் |
| PM 01.30 | நகைச்சுவை திரைப்படம் |
| PM 03.58 | மாலை செய்தி |
| PM 04.00 | மழலைகள் |
| PM 05.00 | சிரிக்க சிரிக்க |
| PM 06.00 | நாளிதழ் நேரம் |
| PM 07.00 | அதிர்வுகள் |
| PM 07.30 | அதிர்வுகள் |
| PM 08.00 | பிரதான செய்தி |
| PM 08.20 | பாடல்கள் |
| PM 08.30 | HELLO DD |
| PM 09.00 | திரைப்படம் |
| PM 11.30 | நீங்காத நினைவுகள் |


சனிக்கிழமை அதிர்ஷ்டம்

உத்தியோகபூர்வ முடிவுகள்

சீட்டிழுப்பு இல. 2599 திகதி 17-01-2015

ஆங்கில எழுத்து: L

வெற்றி எண்கள் 10 28 45 62

போனஸ் இல: 54

ஜக்பொட் பரிசு ரூ.28,026,650/- வெல்லப்படவில்லை

| இணையும் இலக்கங்கள் | வெற்றியாளர் தொகை | பரிசுத் தொகை | மொத்த பரிசுத் தொகை |
|---|---|---|---|
| 1 இல | 199530 | 20/- | 3,990,600/- |
| 2 இல | 14240 | 100/- | 1,424,000/- |
| 3 இல | 308 | 1,000/- | 308,000/- |
| 4 இல | 01 | 1,000,000/- | 1,000,000/- |
| 1 இல + ஆங்கில எழுத்திற்கும் | 8208 | 40/- | 328,320/- |
| 2 இல + ஆங்கில எழுத்திற்கும் | 569 | 1,000/- | 569,000/- |
| 3 இல + ஆங்கில எழுத்திற்கும் | 08 | 10,000/- | 80,000/- |
| 4 இல + ஆங்கில எழுத்திற்கும் | - | 28,026,650/- | - |
| 1 இல + போனஸ் இல | 9571 | 100/- | 957,100/- |
| 2 இல + போனஸ் இல | .455 | 500/- | 227,500/- |
| 3 இல + போனஸ் இல | 07 | 100,000/- | 700,000/- |
| 1 இல + ஆங்கில எழுத்திற்கும் + போனஸ் இல | 364 | 200/- | 72,800/- |
| 2 இல + ஆங்கில எழுத்திற்கும் + போனஸ் இல | 11 | 1,500/- | 16,500/- |
| 3 இல + ஆங்கில எழுத்திற்கும் + போனஸ் இல | - | 150,000/- | - |
| வெல்லப்பட்ட மொத்த பரிசுத் தொகை | 233272 | | 9,673,820/- |

ஊதா நிற டிக்கட்டுகள் 2015.01.21 ஆம் திகதி புதன்கிழமை சீட்டிழுப்புக்கு செல்லுபடியாகும்.
வெற்றி பெறும் டிக்கட்டுகள் 6 மாதங்களுக்கு செல்லுபடியாகும்.

இந்த புதன்கிழமை சுப்பர் ஜக்பொட் பரிசு ரூ. 28,571,925/-

வளமான வாழ்விற்கு

அபிவிருத்தி லொத்தர் சபை

356, கலாநிதி கொல்வின் ஆர் டி சில்வா மாவத்தை, யூனியன் பிளேஸ், கொழும்பு - 02
தொ.பே: 2333546/7

(C/3978)


# மானிப்பாய் பிரதேச சபைக்குட்பட்ட எட்டு வீதிகள் மீள் புனரமைப்பு

வலிகாமம் தென்மேற்கு மானிப்பாய் பிரதேச சபையில் இரு கட்டங்களாக பிரதேச சபையின் 8 வீதிகள் மீள்புனரமைப்புச் செய்யப்படவுள்ளன.

சபை நிதியின் ஊடாக மேற்படி வீதிகளின் மீள்புனரமைப்பு பணி இம்மாத இறுதியில் இருந்து இடம்பெறும் என சபையின் தவிசாளர் சி.சி.மகேந்திரன் தெரிவித்துள்ளார்.

மக்கள் பங்கேற்பு திட்டத்தில் முன்னுரிமைப்படுத்தப்பட்டு சபையினால் அங்கீகரிக்கப்பட்ட வீதி புனரமைப்புக் குறித்து சபையின் தவிசாளர் மேலும் தெரிவிக்கையில்,

வலி.தென்மேற்கில் 2015 ஆம் ஆண்டு வரவு-செலவுத் திட்டத்தில் 8 வீதிகள் மீள்புனரமைப்புச் செய்ய அங்கீகாரம் கிடைத்துள்ளன.

முதலாம் கட்டத்தில் நான்கு வீதிகள் முதல் புனரமைப்புச் செய்யப்படும். அதன் விபரம் வருமாறு,

உயரப்புலம் அடைக்கல நாயகி வீதி, சில்லாலை கொட்டைக்காடு வீதி, சண்டிலிப்பாய் லீலா பேக்கரி முன் வீதி, வடலியடைப்பு பிள்ளையார் வீதியும் புனரமைக்கப்படவுள்ளன.

இரண்டாம் கட்டத்தில் மீள் புனரமைப்புச் செய்யவுள்ள வீதிகளின் விபரம் வருமாறு.

மாதகல் மேற்கு பற்றிமா வீதி, சண்டிலிப்பாய் மத்தி சங்கப்புலவு வீதி, நவாலி கிழக்கு சந்தை வீதி என்பவை இவ்வாறு துரிதமாக மீள்புனரமைப்புச் செய்யப்படவுள்ளன.

மேற்படி வீதி புனரமைப்பின் போது அவ்வப் பிரதேசங்களில் சமூக கண்காணிப்புக்குழு உருவாக்கப்பட்டு கண்காணிக்கப்பட வசதியேற்படுத்திக் கொடுக்கப்படும் என தவிசாளர் மேலும் தெரிவித்தார். (92)

# சுழிபுரம் பகுதியில் அதிகாலைவேளை திருட்டு



(மானிப்பாய்)

சுழிபுரம், மெய்கண்டான் பாடசாலை வீதிப் பகுதியிலுள்ள வீடொன்றில் பெறுமதியான நகை, பணம் என்பன களவாடப்பட்டுள்ளன.

நேற்று முன்தினம் அதிகாலை 2.15 மணியளவில் இடம்பெற்ற இச்சம்பவம் தொடர்பாக மேலும் தெரியவருவதாவது,

குறித்த வீட்டில் மூன்று பேரே வசித்து வருகின்ற நிலையில், அதிகாலை வேளையில் வீட்டினுள் நுழைந்த திருடர்கள் சாதுரியமாக 6 பவுண் நகை மற்றும் 15 ஆயிரம் ரூபா பணம் என்பவற்றைக் களவாடியதுடன், உறங்கிக்கொண்டிருந்த பெண்ணின் கழுத்திலிருந்த சங்கிலியையும் அறுத்துக் கொண்டு சென்றுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

சங்கிலி அறுத்ததில் பெண்ணுக்கு சிறுகாயம் ஏற்பட்டுள்ளதாகவும் தெரிவிக்கப்படுவதுடன், இத்திருட்டுச் சம்பவம் தொடர்பில் வீட்டு உரிமையாளர் கோப்பாய் பொலிஸில் முறைப்பாடு செய்த நிலையில் பொலிஸார் சம்பவ இடத்திற்கு வந்து மோப்ப நாய்களின் உதவியுடன் திருடர்களைத் தேடி வருவதாகத் தெரிவிக்கப்படுகிறது.

இதேவேளை, குறித்த தினத்தில் இப்பகுதியில் சற்றுத் தூரத்திலுள்ள ஒரு வீட்டிலும் 11.30 மணியளவில் திருட்டுச் சம்பவம் இடம்பெற்று, அங்கும் நகைகள் கொள்ளையடிக்கப்பட்டுள்ளதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

# யாழ்.வந்த 'கரிக்கோச்சி'

(யாழ்ப்பாணம்)



இலங்கைத் தீவு பிரித்தானியாவின் ஆளுகைக்குட்பட்டிருந்த போது இலங்கையின் முதலாவது ஆளுநராக இருந்த பிரட்றிக் நோர்த்தின் பெயரில் சேவையில் ஈடுபட்ட கரியினால் இயங்கும் ரயில், யாழ்ப்பாணம் ரயில் நிலையத்துக்கு நேற்று முன்தினம் வந்தது. இந்த ரயில், நேற்றுக் காலை மடு நோக்கிப் புறப்பட்டது வடக்குக்கான ரயில் பாதை அமைக்கப்பட்டுள்ள நிலையில், பழைய ரயிலை ஞாபகப்படுத்தும் வகையில் இந்தக் கரி இயந்திர ரயில் யாழ்ப்பாணத்துக்கான பயணத்தை மேற்கொண்டது.

இந்தக் கரி இயந்திர ரயில், அநுராதபுரம் ரயில் நிலையத்தில் தரித்து நிற்கின்றமை குறிப்பிடத்தக்கது.

# அரசடிப் பிள்ளையார் கோயில் குடமுழுக்குப் பெருவிழா

வட்டுக்கோட்டை துணைவி அரசடிப் பிள்ளையார் கோயில் குடமுழுக்கு விழா எதிர்வரும் 22 ஆம் திகதி வியாழக்கிழமை காலை 8.32 மணி முதல் 9.42 மணி வரையுள்ள சுபமுகூர்த்த வேளையில் நடைபெறவுள்ளது.

குடமுழுக்கு விழாவை முன்னிட்டு ஆரம்பக் கிரியைகள் இன்று தொடக்கம் நடைபெறுவதோடு, நாளை மறுதினம் புதன்கிழமை காலை 9.30 மணி முதல் மாலை 5.00 மணி வரை எண்ணெய்க் காப்பு நிகழ்வும் இடம்பெறும்.

குடமுழுக்கு விழாவில் நல்லை ஆதீன குருமுதல்வர் சோமசுந்தர தேசிக ஞானசம்பந்த பரமாச்சாரிய சுவாமிகள் ஆசியுரை வழங்க, செஞ்சொற்செல்வர் கலாநிதி ஆறு.திருமுருகன் சிறப்புச் சொற்பொழிவாற்றவுள்ளார். (10)

# இலங்கை ஊடகவியல் கல்லூரியில் ஒரு வருட ஊடகத்துறை டிப்ளோமா

(யாழ்நிருபர்)

இலங்கை ஊடகவியல் கல்லூரியில் ஒருவருட முழுநேர ஊடகத்துறை டிப்ளோமா-2015 கற்கைநெறிக்கான விண்ணப்பங்கள் கோரப்பட்டுள்ளன.

க.பொ.த. உயர்தரத்தில் மூன்று பாடங்களில் சித்திபெற்ற 18-25 வயதிற்குட்பட்ட ஆண், பெண் இருபாலரும் இக்கற்கை நெறிக்கு விண்ணப்பிக்க முடியும்.

ஊடகவியல் கல்லூரியில் கற்கை நெறியைத் தொடர்வதன் மூலம் மரபார்ந்த நவீன ஊடகத்துறைசார் திறன்களை விருத்தி செய்யவும், தொழில்வாண்மை மிக்க பயிற்சிகள், பிரசித்தமான ஊடக நிறுவனங்களில் உள்ளகப் பயிற்சிகள், தொழில்வாய்ப்பைப் பெறுவதற்கான சந்தர்ப்பம், துறைசார் நிபுணர்களிடமிருந்து பயிற்சிகள் என்பனவற்றைப் பெற்றுக் கொள்ள முடியும்.

விண்ணப்பதாரிகள் தமது விண்ணப்பங்களை இலங்கை ஊடகவியல் கல்லூரி, இல.96, பேனார்ட் சொய்சா மாவத்தை, கொழும்பு-5 என்ற முகவரிக்கு எதிர்வரும் 31 ஆம் திகதி சனிக்கிழமைக்கு முன்னர் கிடைக்கும் வண்ணம் அனுப்பி வைக்க வேண்டும். (10)

# தரம் ஒன்று மாணவர்களுக்கு பாடசாலைகளில் பணம் அறவீடு

## விசனம் தெரிவிக்கின்றனர் பெற்றோர்

(யாழ்ப்பாணம்)

மன்னார் மாவட்டத்தில் உள்ள பிரபல பாடசாலைகள் சிலவற்றில் தரம் 1 இற்கு மாணவர்களை அனுமதிப்பதற்கு பணம் அறவிடப்படுவதாக பெற்றோர் விசனம் தெரிவித்துள்ளனர்.

மாணவர்களை அனுமதிப்பதற்கு 10 ஆயிரம் ரூபா முதல் 30 ஆயிரம் ரூபா வரை பணம் கேட்பதாக பெற்றோர் கவலை தெரிவித்துள்ளனர். அதேவேளை பிரபல பாடசாலை ஒன்றில் தரம் 1 இற்கு மாணவர்களை அனுமதிப்பதற்கு குறைந்த கட்டணமாக 10 ஆயிரம் ரூபா பணமும் மாணவர்களுக்கான கதிரை, மேசை போன்ற தளபாடங்களையும் கொண்டு வருமாறும் தெரிவிக்கப்பட்டுள்ளதாக பெற்றோர் கவலை தெரிவித்துள்ளனர்.

மன்னாரிலுள்ள பிரபல அரச பாடசாலைகளில் இவ்வாறான அதிகூடிய பணம் நன்கொடை என்ற பெயரில் இலஞ்சமாக அறவீடு செய்யப்படுவது குறித்து எந்த அதிகாரிகளும் நடவடிக்கைகள் எதனையும் மேற்கொள்வதில்லை என பாதிக்கப்பட்ட மக்கள் விசனம் தெரிவித்துள்ளனர்.

பணம் அறவீடு செய்வதற்காக குழு ஒன்று அமைக்கப்பட்டு அவர்களினூடாகவே நிதி அறவீடு செய்யப்பட்டு வருகின்றது. குறித்த பாடசாலைகளுக்கு அரசின் அபிவிருத்தி வேலைத்திட்டங்கள் பலவும் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

எனவே அரச பாடசாலைகளில் இவ்வாறு பணம் அறவீடு செய்யப்படுகின்றமையினால் வறிய பெற்றோர் தமது பிள்ளைகளை பாடசாலைகளில் சேர்ப்பதற்கு பல்வேறு அசௌகரியங்களுக்கு முகம் கொடுத்து வருகின்றனர்.

எனவே வடமாகாண கல்வி அமைச்சர் மன்னார் வலயக் கல்விப் பணிப்பாளர் ஆகியோர் இவ்விடயத்தில் அக்கறை செலுத்தி பணம் அறவீடு செய்பவர்களுக்கு எதிராக சட்ட நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டும் என பாதிக்கப்பட்ட பெற்றோர் கோரிக்கை விடுத்துள்ளனர்.

இவ் விடயம் தொடர்பாக மன்னார் வலயக்கல்வி பணிப்பாளர் எம்.எம்.சியான் தெரிவிக்கையில்,

பணம் அறவீடு தொடர்பில் எனக்கு பல முறைப்பாடுகள் கிடைக்கப்பெற்றுள்ளன. இவ் விடயம் தொடர்பில் பாட-சாலை அதிபர்களுக்கு தெரியப் படுத்தியுள்ளேன்.

மாணவர்களிடம் ஒரு சதம் கூட பெற்றுக்கொள்ள முடியாது இவ்வாறு பணம் அறவீடு தொடர்பில் உரிய முறையில் ஆதாரங்களுடன் சமர்ப்பித்தால் குறித்த பாடசாலை அதிபர்களுக்கு எதிராக உடனடியாக தகுந்த நடவடிக்கை எடுக்கப்படும்.

அவர்கள் தமது பதவியை இழக்க வேண்டிய நிலையும் ஏற்படும். இப்பிரச்சினை தொடர்பில் நான் வடமாகாண கல்வி அமைச்சரின் கவனத்திற்கு கொண்டு வந்துள்ளேன் என அவர் தெரிவித்துள்ளார்.

## நிதி அன்பளிப்பு

(கிளிநொச்சி)

கிளிநொச்சியில் இயங்கும் "உயிரிழை" முள்ளந்தண்டு வடம் பாதிப்புற்றோர் அமைப்பிற்கு செயற்பாடுகளை முன்னெடுத்து செல்வதற்காக கடந்த 10 ஆம் திகதி ஈலிங் கனக அம்மன் ஆலயம் லண்டன் நிர்வாகத்தினர் ஒரு லட்சத்து பத்தாயிரம் (110000) ரூபாவினை வழங்கியுள்ளன.

இந்த உதவியினை ஒழுங்கு படுத்தித் தந்த அனைவருக்கும் "உயிரிழை" முள்ளந்தண்டு வடம் பாதிப்புற்றோர் அமைப்பு நன்றியினைத் தெரிவித்துள்ளது.

இதே போல் முள்ளந்தண்டு வடம் பாதிக்கப்பட்டு சக்கர நாற்காலியினை பயன்படுத்தி வரும் உறவுகளுக்காக எல்லோரது ஆதரவினையும் உயிரிழை அமைப்பு எதிர் பார்த்து நிற்பதாகவும் தெரிவித்துள்ளது. (90)

## இரதோற்ஷவம்

(யாழ்ப்பாணம்)

அராலி தெற்கு சிந்தாமணி பிள்ளையார் ஆலய வருடாந்த மகோற்சவத்தின் இரதோற்ஷவம் இன்று முற்பகல் 11 மணிக்கு இடம்பெறவுள்ளது. இதில் நாளை காலை தீர்த்தோற்சவமும் மாலை கொடியிறக்கமும் இடம்பெறவுள்ளன.

## ஆங்கில மொழி மூல முன்னோடிப் பரீட்சை



(யாழ்ப்பாணம்)

தரம் 1 இலிருந்து தரம் 4 வரையான மாணவர்களுக்கு ஆங்கில மொழி முன்னோடிப் பரீட்சை நேற்றுமுன்தினம் காலை வல்வை மகளிர் கல்லூரியில் இடம்பெற்றது.

இப் பரீட்சையில் வல்வெட்டித் துறையில் அமைந்துள்ள வல்வை மகளிர் மகா வித்தியாலயம், வல்வை சிவகுரு வித்தியாசாலை, அ.மி.த.க பாடசாலை, ரோமன் கத்தோலிக்க தமிழ்க் கலவன் பாடசாலை மற்றும் வல்வை சிதம்பரா கல்லூரியைச் சேர்ந்த மாணவ மாணவிகள் பங்கு பற்றியிருந்தமை குறிப்பிடத்தக்கது.


## பொதுக்கூட்டம்

(யாழ்ப்பாணம்)

நாகர்கோவில் வடக்கு கௌத்தந்துறை பிள்ளையார் ஆலய பொதுக்கூட்டம் எதிர்வரும் 23 ஆம் திகதி வெள்ளிக்கிழமை மு.ப 10.30 மணிக்கு ஆலய முன்றிலில் நடைபெறவுள்ளது.

இப்பொதுக்கூட்டத்தில் புதிய நிர்வாகத்தெரிவு இடம்பெறவுள்ளதால் அடியவர்கள் அனைவரையும் தவறாது கலந்துகொள்ளுமாறு அறிவிக்கப்பட்டுள்ளது.

## நூலகம் திறப்பு



ஈழமக்கள் ஜனநாயககட்சியின் நாடாளுமன்ற உறுப்பினர்களின் பன்முகப்படுத்தப்பட்ட வரவு செலவுத்திட்டம் 2014 நிதியிலிருந்து வலி.தென்மேற்கு பிரதேச சபை எதிர்க்கட்சித் தலைவரும் மானிப்பாய் பிரதேச அமைப்பாளருமான வெலிச்சோர் அன்ரன் ஜோன்சன் (ஜீவா) சிபாரிசுக்கு அமைய பண்டத்தரிப்பு சாந்தை விநாயகர் சன சமூக நிலைய நிலம் செப்பனிடல் மற்றும் நூலகம் அமைத்தல் என்பவற்றுக்காக ஒன்றரை இலட்சம் ரூபா நிதி வழங்கப்பட்டது.

இந்த நிதியில் அமைக்கப்பட்ட நூலகம் கடந்த பொங்கல் தினத்தன்று ஈ.பி.டி.யின் பிரதேச அமைப்பாளர் அன்ரன் ஜோன்சன் ஜீவாவினால் திறந்து வைக்கப்பட்டது.(54)

# சார்ளி ஹெப்டோ தாக்குதலும் கருத்துச் சுதந்திர காய்நகர்த்தலும்

பிரான்சின் நையாண்டிப் பத்திரிகையான சார்ளி ஹெப்டோ (Charlie Hebdo) மீதான தாக்குதலில் பத்திரிகை ஆசிரியர் ஊடகவியலாளர்கள் ஐவர் உட்பட 12 பேர் துப்பாக்கிதாரிகளால் கொல்லப்பட்டு அதன் தொடர்ச்சியாக ஹொலிவூட் திரைப்பட பாணியில் துப்பாக்கி சூடுகள், பணயக்கைதிகள், தப்பிஓடுதல், துரத்துதல் போன்ற கிளைமாக்ஸ் காட்சிகளின் முடிவில் சந்தேகிக்கப்பட்ட (துரத்தப்பட்ட) மூவர் கொல்லப்பட்டு மேலும் 17பேர் பலியானதான அறிவிப்பு வெளியாகி இருந்தது.

பிரான்ஸில் மட்டுமல்ல சர்வ உலகத்திலும் மற்றொரு அதிர்வை ஏற்படுத்திய இந்த பயங்கரம் தொடர்பில் வழமை போல சந்தேகப் பார்வைகளும் அதனூடான நியாயமான கேள்விகளும் எழுப்பப்படுகிறது.

தனது ஏகாதிபத்திய அண்ணனுடன் இணைந்து அதே அண்ணனால் வளர்க்கப்பட்ட ஐ.எஸ்(ISIS) பயங்கரவாதிகளுக்கு எதிராக வான் தாக்குல்களை நடாத்துவதுடன் பாதிக்கப்பட்டுக் கொண்டிருக்கும் அப்பாவி குர்திஸ் மற்றும் ஜியா பிரிவு போன்றவற்றிற்கு நிவாரணம் என்ற போர்வையில் பயங்கர ஆயுதங்களை வழங்கி அந்த இளைஞர் யுவதிகளையும் ஆயுததாரிகள் ஆக்கும் பிரான்ஸ் அரசுக்கும் அதன் உளவுத் துறைக்கும் எந்த ரூபத்திலும் தாம் பழிவாங்கப்படுவோம் தமது நாட்டு மக்கள் பலிக்கடாக்கள் ஆக்கப்படுவார்கள் என்பது தெரியாமல் இருந்ததா...? என்கின்ற கேள்வி எழுவது நியாயமானதாகவே பார்க்கப்படுகிறது.

அகன்ற இஸ்லாமிய தேசம் என்கின்ற கோட்பாட்டு வெறியுடன் செயற்படும் ஒரு பயங்கரவாத அமைப்பு அதே இஸ்லாத்திற்கு எதிராக அவர்கள் இறைதூதராக வணங்கும் முஹம்மது நபியை சித்திரித்து கேலிச் சித்திரங்களைத் தொடர்ந்து வெளி யிடும் சார்ளி ஹெப்டோ பத்திரிகை குறிவைக்கப் படலாம் என்கின்ற முன் எச்சரிக்கை பிரான்ஸ் உளவுத்துறைக்கு இல்லாமல் இருந்ததா...? என்கின்ற கேள்வியும் எழுப்பப்படுகிறது.

இந்த சார்ளி ஹெப்டோ 2006ம் ஆண்டிலும் பின்னர் 2011ஆம் ஆண்டும் இஸ்லாத்துக்கு எதிரான கேலிச்சித்திரங்களை வெளியிட்டு சர்ச்சையில் சிக்கியதுடன் அதன் அலுவலகம் முன்னர் ஒரு தடவையும் குண்டுத் தாக்குதலுக்கு உள்ளாகி இருந்ததும் வரலாறு.

சார்ளி ஹெப்டோ போன்ற ஊடகங்கள் இஸ்லாத்தையும் அதனைக் கடைப்பிடிக்கும் மக்களையும் அவமதிப்பதில் மட்டுமே கருத்துச் சுதந்திரத்தை தாராளமாக கடைப்பிடிக்கின்றன போலும். செய்திகளையும் நிகழ்வுகளையும் மேற்குலகின் ஏகாதிபத்திய சிந்தனா நலன் சார்ந்த பாணியிலேயே விடயதானங்களாக்குவது இவர்களது பாணி.

பலத்த பாதுகாப்பு கட்டமைப்புகளுடன் பரபரப்பாக இருக்கும் பிரான்சின் தலைநகர் பரிசில் சனசந்தடி மிக்க தெருவில் அமைந்திருக்கும் ஒரு பத்திரிகை அலுவலகத்தினுள் பகல் நேர அலுவலக வேளையில் ஆயுதங்களுடன் நுழைந்த ஒரு கும்பல் படுகொலைகளை செய்து விட்டு இலகுவாக தப்பிச்சென்றதுடன் அடுத்த மூன்று நாட்களாக ஒரு வல்லரசின் பாதுகாப்புத் துறைக்கு பூச்சாண்டி காட்டியுள்ளது என்றால் அது பேச்சுக்கும் திரைப் படங்களுக்கும் வேண்டுமானால் சாத்தியமானதாக இருக்கலாம்.

ஆக ஏகாதிபத்திய மர்மங்கள் பலவற்றுடனான இந்தத் தாக்குதல்கள் தொடர்பில், குறிப்பாக சார்ளி ஹெப்டோ படுகொலைகளை கண்டித்து கருத்து சுதந்திர குரல்கள் மட்டும் ஓங்கி ஒலிக்கத் தொடங்கியுள்ளன.

கருத்துச் சுதந்திரம் பற்றி கூக்குரலிடும் மேற்குலகமும், விபரமற்று அதற்கு தாளம் போடும் நம்மவர் உட்பட சக்திகளும் இதே கருத்துச் சுதந்திரத்திற்காக சிரியாவிலும் ஈராக்கிலும் நாளாந்தம் கொல்லப்படும் அப்பாவி மக்கள் பற்றி எந்த கோணத்தில் பார்க்கப் போகின்றன.

குறைந்தது இந்த மக்களுக்காக தெருவில் இறங்கி தமது தார்மீக ஆதரவையாவது வழங்க தயாரசக இருக்கின்றனவா...?

இது போன்ற பல கேள்விகளுக்கு பதிலின்றியே சுற்றிக் கொண்டிருக்கிறது பாவம் இந்தப் பூமிப்பந்து.

– கோவை நந்தன் –

நேரம் என்பது செலுத்தப்பட்ட அம்பைப் போன்றது; அது திரும்பி வராது. - ஜேஷி

தினப்பதிப்பு
தினமுரசு
THINAMURASU

இல:373, பிரதான வீதி, யாழ்ப்பாணம்.
தொலைபேசி : 0212223628, கைத்தொலைபேசி : 0777193264
தொலைநகல் : 0212221811, thinamurasu@live.com
Online : www.emurasu.com

## என்னங்க இங்கே நடக்குது?

சுன்னாகம் மின்சார நிலையத்திலிருந்து வெளியேறும் கழிவு ஒயில் அப்பகுதியில் குடிநீரைப் பாழாக்குவதாகத் தெரிவித்து, உடன் நடவடிக்கை எடுக்கும்படியும், அப்பகுதி மக்களுக்கு நல்ல குடிநீர் கிடைக்க வேண்டும் என்றும் கோரி தமிழ்த் தேசியக் கூட்டமைப்பினர் நேற்றுமுன்தினம் ஆர்ப்பாட்டம் நடத்தியிருந்தனர்.

மாகாணத்திலும் மத்தியிலும் தமிழ் மக்களினுடைய பெரும்பான்மை வாக்குகளைப் பெற்று தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு அமைத்திருக்கும் ஆட்சிகளே நடைபெறும் நிலையில், அதே கூட்டமைப்பின் உறுப்பினர்கள் இங்கு யாருக்கெதிராக ஆர்ப்பாட்டம் நடத்திக் கொண்டிருக்கிறார்கள் என்பது புதிராயிருக்கிறது.

சூழல் மாசுப் பிரச்சினையாகட்டும், மக்களுக்கான குடிநீர்ப் பிரச்சினையாகட்டும் மாகாண அரசோ மத்திய அரசோ தான் தீர்வைச் சொல்ல வேண்டும் பிரச்சினைகளைத் தீர்ப்பதற்கான நடவடிக்கைகளையும் எடுக்க வேண்டும்.

அதைவிடுத்து, அவர்களே "உடனே நிறுத்து", "விரைவில் நடத்து" என்று யாரையோ பார்த்து (முன்னால் யாராவது கண்ணாடியைப் பிடித்துக் கொண்டிருந்தார்களா தெரியவில்லை...) முழக்கங்களை எழுப்பி ஆர்ப்பாட்டங்களை நடத்திக் கொண்டிருப்பது என்னமாதிரியான கூத்து?

மாகாணத்தில் இவர்களது "மலர்ந்தது தமிழரசு" அரசாங்கத்தைக் கொண்டுவந்து ஒரு வருடத்திற்கு மேலாகிறது. மத்தியில் இவர்களது அரசாங்கத்தை (அவர்களே சொல்லிக்கொள்வது இது!) கொண்டுவந்து ஒரு வாரத்திற்கு மேலாகிறது.

அதற்கிடையில், பழைய நினைப்பில் மறந்துபோய் வந்துவிட்டது போல றோட்டில் நின்று எதிர்ப்பு முழக்கமிடுவது என்ன மாதிரியான ஒரு விண்ணாணம்! எல்லாருக்கும் முன்னால் ஓடிக் கொண்டிருக்கும் திருடனே, "திருடன் ஓடுறான்... பிடி... பிடி..." என்று கத்திக்கொண்டே ஓடுவது போலல்லவா இருக்கிறது!

பின்னே என்னவாம்! எதிர்ப்பு ஆர்ப்பாட்டத்தில் நின்றவர்கள் மத்திய அரசில் பங்காளிகளாக உள்ள தமிழ் நாடாளுமன்ற உறுப்பினர்களும், மாகாண அரசுக்குப் பொறுப்பாளிகளாக உள்ள மாகாண சபை உறுப்பினர்களும்தான் என்றால் என்ன சொல்வது?

பதினொரு பேரைக் கொண்ட அரசின் தேசிய நிறைவேற்று ஆலோசனைச் சபையில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பும் உள்ளது. அதாவது அரசாங்கத்தின் அதி உயர்மட்டக் குழு இதுவே. இதன் ஆலோசனைகளே அரசின் செயற்பாடுகளாய் இருக்கப் போகிறது.

அமைச்சராக இருந்து அரசில் வகிக்கும் பாத்திரத்தை விட இந்தப் பதினொரு பேர் குழுவில் தானும் அரசின் அங்கமாக இருந்து தமிழ்த் தேசியக் கூட்டன்மப்பு வகிக்கின்ற பாத்திரம் பல்மடங்கு அழுத்தமானதும் காத்திரமானதும் ஆகும்.

அதாவது, மத்திய அரசாங்கத்தின் உயர்குழுவில் இணைந்து, இணக்க அரசியலின் உச்ச பாத்திரத்திற்குச் சென்றிருக்கிறது தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு. இனியும் "அரசே! அதைச் செய்... இதைச் செய்..." என்று றோட்டில் நின்று கூவிக் கொண்டிருப்பது மக்களை ஏமாற்றும் கூச்சலாகத்தான் இருக்க முடியும்.

இவர்கள் இப்போது கூச்சல் போட்டுக்கொண்டு இருக்க வேண்டியவர்களல்ல; செய்ய வேண்டியவர்களும் தீர்வு காண வேண்டியவர்களும் ஆவர்.

அடுத்த தேர்தலில் "சீற்" பிடிக்கவும், தமிழ் மக்களிடம் வாக்கு களை அள்ளவும் உங்களிடமிருக்கும் ஒரே சுலபமான வழி எதிர்ப்பு முழக்கங்களையும் ஆர்ப்பாட்டங்களையும் நடத்துவது தான் என்றால், இன்றுள்ள நிலையில் தமிழ்த் தேசியக் கூட் டமைப்பை விட்டு வெளியேறி வந்துதான் அதை நீங்கள் செய்ய வேண்டும்.

அதையாவது புரிந்துகொள்ளுங்கள்! - ஆசிரியர்

# வடக்கில் அழிவடைந்த ஆலயங்களை விரைவில் புனரமைக்க நடவடிக்கை

## அமைச்சர் சுவாமிநாதன் தெரிவிப்பு

(கொழும்பு)

யுத்தத்தின் போது அழிவுக்குள்ளான வட, கிழக்கு மாகாணங்களிலுள்ள கோவில்களை விரைவாக புனர்நிர்மாணம் செய்ய நடவடிக்கை எடுக்கவுள்ளதாகவும் ஏனைய சமூகங்களின் புனித யாத்திரைகளுக்கு வழங்கப்படுகின்ற கௌரவம் போன்று சபரிமலை செல்லும் யாத்திரிகர்களுக்கும் விமான நிலையங்களில் உரிய கௌரவம் அளிக்க நடவடிக்கை எடுக்கப்படும் எனவும் மீள் குடியேற்றம் புனர்நிர்மாணம் மற்றும் இந்து கலாசார அலுவல்கள் அமைச்சர் டி.எம்.சுவாமிநாதன் தெரிவித்தார்.

மீள்குடியேற்றம் செய்யப்பட்ட வட, கிழக்கு மாகாண மக்களின் வாழ்வாதாரம் மற்றும் அடிப்படை வசதிகளை ஏற்படுத்திக் கொடுக்க முன்னைய அரசாங்கம் தவறியுள்ளதாகவும் அவர் தெரிவித்தார்.

பெரும்பாலான மக்களை குடியேற்றிவிட்டு அவர்களுக்கான வாழ்வாதாரம் மற்றும் அடிப்படை வசதிகளை செய்து கொடுக்கத் தவறியதன் காரணமாக இன்று அந்த மக்கள் அன்றாட ஜீவியத்திற்கு போராட வேண்டிய நிலைக்குத் தள்ளப்பட்டுள்ளார்கள்.

அடுத்ததாக கையகப்படுத்தப்பட்டிருக்கும் மக்களின் விவசாயக் காணிகளை உரிய மக்களுக்கு பெற்று கொடுத்து அவர்களுக்கான வாழ்வாதார வசதிகள் செய்து கொடுக்க நடவடிக்கை எடுக்கப்படும். கடந்த அரசாங்கம் கடந்த காலங்களில் மீள் குடியேற்றத்திற்கு மிகக் குறைந்தளவான நிதியினையே ஒதுக்கீடு செய்துள்ளார்கள்.

அந்த நிதியினால் அவர்களுக்கான எந்த வேலைத்திட்டத்தினையும் முன்னெடுக்க முடியாது எனவே வருங்காலங்களில் இது தொடர்பாக புதிய ஜனாதிபதி மற்றும் பிரதமரிடம் கலந்தாலோசித்து கூடுதல் நிதியினை பெற்று மக்களின் அடிப்படை வசதிகள் மற்றும் வாழ்வாதாரத்தைக் கட்டியெழுப்ப தன்னாலான முழுப் பங்களிப்பையும் செய்யவுள்ளதாக இதன் போது அவர் கருத்துத் தெரிவித்தார்.

# ஸ்ரீலங்கா கிரிக்கெட் ஊழல் காகிதாதிகளை இடம்மாற்றாதீர்

## ஜே.வி.பி.கோரிக்கை

(கொழும்பு)

ஸ்ரீலங்கா கிரிக்கெட் நிறுவனத்தில் இடம்பெற்ற மோசடிகள் தொடர்பான காகிதாதிகளை இடம்மாற்ற வேண்டாம் என்று ஜே.வி.பி. கோரிக்கை விடுத்துள்ளது.

அந்தக் கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினர் சுனில் ஹந்துன்நெத்தி இந்தக் கோரிக்கையை முன்வைத்துள்ளார்.

ஸ்ரீலங்கா கிரிக்கெட் நிறுவனத்தின் தலைவருக்கு இது தொடர்பான கடிதம் ஒன்றும் அனுப்பி வைக்கப்பட்டுள்ளது.

இவ்வாறான காகிதாதிகளை இடம்மாற்ற யாரேனும் முயற்சித்தால், அவர்களுக்கு எதிராக சட்ட நடவடிக்கை எடுக்கப்படும் என்றும் அந்தக் கடிதத்தில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

# மைத்திரிக்கு ஆதரவு தெரிவித்தால் சுத்தமானவர்களாக வரமுடியுமா?

## கேட்கிறது ஜே.வி.பி.

(கொழும்பு)

மைத்திரிக்கு ஆதரவு தெரிவித்தவர்கள் சுத்தமானவர்கள். தெரிவிக்காதவர்கள் திருடர்கள் என்ற நிலைமை உருவாகக் கூடாது. நாம் தனித்துவமான கட்சியாக இருந்து மக்களுக்கு சேவையாற்றவுள்ளோம் என மக்கள் விடுதலை முன்னணியின் தலைவர் அனுர குமார திஸாநாயக்க தெரிவித்துள்ளார்.

பல்வேறு ஊழல் குற்றச் செயல்களுடன் சம்பந்தப்பட்ட முன்னாள் அமைச்சர்கள் பலர் இந்த அரசாங்கத்துக்கு ஆதரவைத் தெரிவித்து வருகினறனர். இதனால், குற்றம் செய்தவர்கள் தப்பிக்க வழியாக இது அமையுமா? என நேற்றைய சிங்கள ஞாயிறு ஊடகமொன்று இவரிடம் வினவிய போதே இவ்வாறு கூறியுள்ளார்.

கடந்த அரசாங்கத்தில் மகிந்தவுக்கு ஆதரவு வழங்கியவர்கள் நாட்டுப் பற்றுள்ளவர்களாகவும், எதிரானவர்க்ள் தேசத் துரோகிகளாகவும் பார்க்கப்பட்டனர்.

ராஜபக்ஷ நிருவாகம், ராஜபக்ஷ குடும்பம் அரசாங்கத்திலிருந்து நீக்கப்பட வேண்டும் என நாம் ஆரம்பம் முதலே சொன்னோம். இது போன்ற காரணங்களினால் தான் இந்த அரசாங்கத்துக்கு எம்மால் உத்தரவாதமொன்றை வழங்க முடியாதுள்ளது. தற்பொழுது நடைபெறும் கட்சி மாற்றல்களைப் பார்க்கும் போது நாம் ஏற்கனவே கூறியது உண்மையாகி வருகின்றது.

மைத்திரிக்கு ஆதரவை வழங்காமல் திருடனாவதற்கோ அல்லது ஆதரவு தெரிவித்து திருடனாகாதிருப்பதற்கோ எந்தவிதமான அவசியமும் எமக்கு இல்லை. நாம் மக்களுக்கு செய்ய வேண்டிய விடயங்களை முன்னெடுப்பதற்கு எதிர்பார்க்கின்றோம் எனவும் மக்கள் விடுதலை முன்னணியின் தலைவர் மேலும் கூறியுள்ளார்.

# ஹெரோயின் வழக்குகளை தூசி தட்டும் புதிய அமைச்சர்

கடந்த இரண்டு வருடங்களில் நடைபெற்ற ஹெரோயின் போதைப் பொருள் வழக்குகள் குறித்து மீண்டும் ஆராயுமாறு சட்டம் ஒழுங்கு அமைச்சர் ஜோன் அமரதுங்க பொலிஸ் மா அதிபருக்கு உத்தரவிட்டுள்ளார்.

2012 ஆம் ஆண்டு கைப்பற்றப்பட்ட 260 கிலோ கிராம் ஹெரோயின் போதைப் பொருள் தொடர்பில் நடத்தப்பட்ட விசாரணைகள் குறித்து திருப்தியடைய முடியாது எனவும் அமைச்சர் கூறியுள்ளார். 260 கிலோ கிராம் ஹெரோயின் அடங்கிய கொள்கலனை விடுவிக்குமாறு முன்னாள் பிரதமர் டி.எம்.ஜயரத்னவின் இணைப்புச் செயலாளர் சுங்க அதிகாரிகளுக்கு கடிதம் அனுப்பியிருந்தமை குறிப்பிடத்தக்கது. மேற்படி ஹெரோயின் தொகை பற்றி அப்போது பரபரப்பாக பேசப்பட்ட போதிலும் விசாரணைகள் பற்றிய தகவல்கள் எதுவும் வெளியாகவில்லை.

# இடைக்கால அறிக்கை இவ்வாரம் ஜனாதிபதியிடம்

காணாமற்போனோரை கண்டறியும் ஜனாதிபதி ஆணைக்குழுவின் இடைக்கால அறிக்கை இந்த வாரம் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவிடம் ஒப்படைக்கப்படும் என்று ஆணைக் குழுவின் ஒருங்கிணைப்பாளர் கேரி கெலி தெரிவித்தார். இடைக்கால அறிக்கை சமர்ப்பிக்கப்பட்டதுடன் காணாமற்போனோரை கண்டறியும் ஜனாதிபதி ஆணைக்குழுவின் எதிர்கால நடவடிக்கைகள் குறித்தும் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவுடன் பேச்சு நடத்தப்படும்.

காணாமற்போனோரை கண்டறியும் ஜனாதிபதி ஆணைக்குழுவின் இடைக்கால அறிக்கை இந்த வாரம் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவிடம் ஒப்படைக்கப்படும் என்று ஆணைக் குழுவின் ஒருங்கிணைப்பாளர் கேரி கெலி தெரிவித்தார்.

இடைக கால அறிக்கை சமர்ப்பிக்கப்பட்டதுடன் காணாமற்போனோரை கண்டறியும் ஜனாதிபதி ஆணைகுழுவின் எதிர்கால நடவடிக்கைகள் குறித்தும் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவுடன் பேச்சு நடத்தப்படும்.

இதேவேளை இவ்வாரம் கிளிநொச்சியில் நடைபெறவிருந்த சாட்சியங்களை பதிவு செய்யும் நடவடிக்கை ஒத்தி வைக்கப்பட்டுள்ளது.

# நாட்டிற்கு ஜனநாயகம் கோரும் தமிழரசுக் கட்சி அனந்திக்கு அதனை மறுப்பது ஏன்?

**த ஜெயபாலன்**

கட்சியின் தீர்மானத்துக்கு முரணான கருத்து வெளியிட்டமை தொடர்பான குற்றச்சாட்டின் பேரில், தமிழரசுக்கட்சி உறுப்பினர் அனந்தி சசிதரன் கட்சி உறுப்புரிமையில் இருந்தும் பதவியில் இருந்தும் இடைநீக்கம் செய்யப்பட்டுள்ளதாக கட்சியின் பொதுச் செயலாளர் கி.துரைராஜசிங்கம், ஜனவரி 10, 2015இல் தெரிவித்தார்.

அனந்தி சசிதரனை இடை நீக்கம் செய்தது பற்றி மாவை சேனாதி ராஜாவிடம் கேட்ட போது கட்சியின் ஒழுக்காற்று நடவடிக்கையின் முதற்கட்ட நடவடிக்கையாக பதவியில் இருந்தும் கட்சி உறுப்புரிமையில் இருந்தும் இடைநீக்கியுள்ளதாக அறிவிக்கவுள்ளோம் எனத் தெரிவித்து இருந்தார்.

**22-12-2014 :** இற்கு நீண்டகாலத்துக்கு முன்பாகவே எம்.ஏ. சுமந்திரன் பொது எதிரணியுடன் இணைந்து பணியாற்றி வந்தார். இத்தகவல் தமிழரசுக் கட்சியின் உயர் பீடத்தைத் தவிர வேறு எவருக்கும் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பில் உள்ள ஏனைய கட்சிகளுக்கும் தெரிந்திருக்கவில்லை.

**அனந்தியைப் போலவே எம்.கே. சிவாஜிலிங்கம் தானும் இரு பிரதான ஜனாதிபதி வேட்பாளர்களை நிராகரிப்பதாகவும் ஐக்கிய சோசலிசக் கட்சியின் வேட்பாளரான சிறிதுங்க ஜெயசூரியவுக்கு வாக்களிப்பதாகவும் தெரிவித்து இருந்தார். அவரும் தன்னுடைய கருத்தை யாழ். ஊடக மையத்தில் மிக வெளிப்படையாகவே தெரிவித்தும் இருந்தார். ஆனால் ரெலோ தலைமை எம்.கே. சிவாஜிலிங்கத்தை திட்டவில்லை, அவருடைய வீட்டுக்கு கல்லெறியவில்லை, அவருக்கு துரோகிப்பட்டத்தையும் வழங்கவில்லை.**



**22-12-2014 :** எம்.ஏ. சுமந்திரன் த.தே.கூ.-வில் அங்கம் வகிக்கும் கட்சித் தலைவர்களை தனது வீட்டுக்கு வரவழைத்து முன்னறிவித்தல் எதுவுமின்றி பொது எதிரணி வேட்பாளரான மைத்திரிபால சிறிசேனவையும் சந்திரிகா குமாரதுங்கவையும் ரணில் விக்கிரமசிங்கவையும் சந்தித்து தங்கள் ஆதரவை வழங்கினார்.

**28-12-2014 :** இந்தியாவில் இருந்து நாடு திரும்பிய இரா சம்பந்தன் தலைமையில் கூடிய த.தே.கூ. ஒருங்கிணைப்புக் குழு ஜனாதிபதி வேட்பாளர்களில் யாருக்கு வாக்களிப்பது என்ற முடிவை அன்று தான் எடுக்கப்போவதாக தெரிவிக்கப்பட்டது.

**30-12-2014 :** பொது எதிரணி வேட்பாளர் மைத்திரிபால சிறிசேனவை ஆதரிப்பதாக தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு முதற் தடவையாக வெளிப்படையாக அறிவித்தது.

**30-12-2014 :** பொது எதிரணி தேர்தல் பிரசாரத்திற்காக யாழ்ப்பாணம் வந்தது. எவ்வித பொதுமக்களின் உயிரிழப்பும் இன்றி எல்.ரீ.ரீ.ஈ பயங்கரவாதத்தை வெற்றிகொண்டதாக சரத்பொன்சேகா தெரிவித்தார்.

**31-12-2014 :** ஜனாதிபதித் தேர்தலைப் புறக்கணிக்கப் போவதாக அறிவித்த அனந்தி சசிதரன், தான் தேர்தலில் வாக்களிப்பது தனது மனச்சாட்சிக்கு விரோதமானது எனத் தெரிவித்தார்.

**02-01-2015 :** தமிழரசுக் கட்சித் தலைவர் மாவை சேனாதிராஜா அனந்தியை தொலைபேசியில் மோசமாகத் திட்டியதால் அவர் திட்டிக்கொண்டிருக்கும போதே அனந்தி மயக்கமாகி வீழ்ந்து வைத்தியசாலைக்கு கொண்டு செல்லப்பட்டார்.

**02-01-2015 :** "நான் தொலைபேசி அழைப்பெடுத்து அனந்தியிடம் பேசியது உண்மைதான். ஆனால் நான் அவரை திட்டவில்லை. நாட்டு நிலை குறித்தே பேசியிருந்தேன். நான் ஒரு வயது முதிர்ந்த அரசியல்வாதி. ஒருபோதும் அப்படி பேசுபவன் அல்ல. நான் கதைத்ததால் தான் அனந்திக்கு இவ்வாறு ஏற்பட்டதென்றால் நான் அதற்கு மனம் வருந்துகின்றேன்" எனத் தெரிவித்தார் மாவை சேனாதிராஜா.

**04-01-2015 :** இறுதி யுத்தத்தின் போது, பாதுகாப்பு அமைச்சின் பிரதி அமைச்சராக மைத்திரிபால சிறிசேன இருந்துள்ளார். அப்போது, முள்ளிவாய்க்கால் யுத்தத்தில் தமிழ் மக்களைக் கொல்லும் போது எந்த கருத்துக்களையும் அவர் கூறவில்லை.

அந்த அடிப்படையில், மக்களிடம் சென்று இவருக்கு வாக்களிக்குமாறு கேட்க முடியாது என அனந்தி சசிதரன் யாழ். ஊடக மையத்தில், தேர்தலைப் புறக்கணிப்பது என்ற தனது நிலைப்பாட்டை ஊடகவியலாளர்களுக்கு வெளியிட்டார்.

**06-01-2015 :** அதிகாலை 1.30 மணியளவில் யாழ். தொல்புரத்தில் உள்ள, அனந்தி சசிதரன் வீட்டின் மீது இனந்தெரியாத நபர்கள் கல் வீசி தாக்குதல் நடத்தியுள்ளனர்.

**08-01-2015 :** தேர்தல் நடைபெற்றது. இந்தியாவில் இருந்து இலங்கை வந்திருந்த த.தே.கூ தலைவர் இரா சம்பந்தன் சுகயீனம் காரணமாக தேர்தலில் வாக்களிக்கவில்லை. அனந்தி தனது கொள்கைக்காக தேர்தலைப் புறக்கணித்தார்.

**09-01-2015 :** பொது எதிரணி வேட்பாளர் மைத்திரிபால சிறிசேன தமிழ், முஸ்லிம் மக்களின் தொகையான வாக்குகளால் வெற்றி பெற்றார்.

**10-01-2015 :** அனந்தி சசிதரன் மற்றும் வி.எஸ்.சிவகரன் கட்சி உறுப்புரிமையில் இருந்தும் பதவியில் இருந்தும் இடைநீக்கம் செய்யப்பட்டுள்ளதாக கட்சியின் பொதுச் செயலாளர் கி.துரைராஜசிங்கம், 10-01-2015 சனிக்கிழமை தெரிவித்தார்.

தன்னுடைய கருத்தைத் தெரிவிக்கின்ற சுதந்திரம் என்பது ஒவ்வொரு தனி மனிதனுக்கும் மிக அடிப்படையானது. தன்னுடைய சமூகத்துக்கு சுயநிர்ணய உரிமையை பெயரளவிலாவது கோருகின்ற தமிழரசுக் கட்சி தன்னுடைய கருத்தை வெளிப்படுத்திய வட மாகாண சபை உறுப்பினர் அனந்தி சசிதரனுக்கு திட்டும் கல்வீச்சும் துரோகிப்பட்டமும் கொடுத்தது.

தமிழரசுக் கட்சியின் உயர்பீடத்தின் ஜனநாயக மறுப்பு என்பது கட்சியின் நாளாந்த நடவடிக்கைகளிலேயே மிக வெளிப்படையானது. ஆயிரத்துதொளாயிரத்து எழுபதுகளில் எவ்வாறு கட்சியின் தலைமை செயற்பட்டதோ அதே சிந்தனைப் போக்கிலேயே கட்சித் தலைமை இன்னமும் செயற்படுகின்றது.

தமிழரசுக் கட்சித் தலைவர்களிடம் நேர்மையை எதிர்பார்க்க முடியாது; அதிகாரத்தை பகிருவதற்கு அவர்கள் ஒருபோதும் தயாராக இருப்பதில்லை, மாறாக எங்கே தங்கள் கையை விட்டு போய்விடுமோ என்பதற்காக அதிகாரத்தை கெட்டியாக வைத்திருப்பார்கள்; தாங்கள் சொல்வதையே மற்றையவர்கள் கேட்க வேண்டும் என்பதில் விடாப்பிடியாக இருப்பார்கள்; சிக்கலான கேள்விகளைக் கேட்டால் பதில் கேள்விகளைக் கேட்டு, கேட்பவரை மட்டம் தட்டி, மிகக்குறுகிய நேரத்தில் கோபத்திற்கு உள்ளாகி விடுவார்கள்; நேர்மையும் வினைத்திறனும் இல்லாததால் இவர்கள் எப்பொழுதும் மனவுறுதி குன்றியும் தாழ்வுமனப் பான்மையுடனும் இருப்பார்கள், இவர்கள் சுயநலன் கொண்டவர்களாக இருப்பதால் அர்ப்பணிப்பு இவர்களிடம் இருப்பதில்லை; இவற்றின் காரணமாக இவர்கள் யாருக்கும் முன்மாதிரியானவர்களாக இல்லை; இவர்கள் தங்கள் அரசியல் வாழ்வில் எதையும் சாதித்த ஆக்கத்திறனை உடையவர்களாக இல்லை; இவர்கள் அரசியலை எதிர்வு கூறும் ஆற்றலுடையவர்களாக அதற்கேற்ப தங்கள் நகர்வுகளை முன்கூட்டியே திட்டமிட்டவர்களாக இல்லை.

மேலுள்ள பண்புகளால் தமிழரசுக் கட்சித் தலைமை எப்போதும் தன்னுடைய தலைமைத்துவத்தை தக்கவைப்பதற்காக இரகசியத் தன்மையை பேண வேண்டியிருக்கும்; தலைமைத்துவம் மற்றையவர்களுடன் ஒரு இடைவெளியைக் கொண்டிருக்க வேண்டியிருக்கும்; அதிகாரத்தை ஒரு சிறுகுழுவிற்குள் இறுக்கமாக வைத்திருக்க வேண்டியிருக்கும்; தங்களை கேள்விக்கு உட்படுத்த அனுமதிக்கமாட்டார்கள்; விமர்சனத்துக்கு அப்பாற்பட்டவர்களாகவும், தங்களை எல்லாம் தெரிந்தவர்களாகவும், தாங்கள் எடுக்கின்ற முடிவுகள் எப்போதும் சரியானது, தவிர்க்க முடியாதது என்ற விம்பத்தை கொடுப்பார்கள்; தங்களுடைய கருத்துக்களுக்கு முடிவுகளுக்கு மாற்றுக் கருத்துக்களை அவர்கள் ஒரு போதும் அனுமதிப்பதில்லை.

இந்தத் தலைமைத்துவப் பண்பில் இருந்து தான் வட மாகாணசபை உறுப்பினர் அனந்தி சசிதரனை தமிழரசுக் கட்சி நடத்தியதைப் பார்க்க வேண்டும். அனந்தி சசிதரன் ஒரு பெண்ணாகவும் இருப்பதால் யாழ். சைவ வேளாள ஆண் ஆதிக்கத் தலைமைத்துவத்தையுடைய தமிழரசுக் கட்சிக்கு ஒரு பெண்ணாண அனந்தி சசிதரன் தன்னுடைய கருத்தைத் தெரிவிப்பதையே தாங்கிக் கொள்ள முடியவில்லை.

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பில் இருந்த கட்சிகளில் தமிழரசுக் கட்சிக்கு அடுத்ததாக தமிழீழ விடுதலை இயக்கம் - ரெலோ ஒரு கட்சிக் கட்டமைப்புடன் இயங்குகின்றது. அதன் வட மாகாண சபை உறுப்பினர் எம்.கே. சிவாஜிலிங்கம் தானும் இரு பிரதான ஜனாதிபதி வேட்பாளர்களை நிராகரிப்பதாகவும் ஐக்கிய சோசலிசக் கட்சியின் வேட்பாளரான சிறிதுங்க ஜெயசூரியவுக்கு வாக்களிப்பதாகவும் தெரிவித்து இருந்தார். அவரும் தன்னுடைய கருத்தை யாழ். ஊடக மையத்தில் மிக வெளிப்படையாகவே தெரிவித்தும் இருந்தார். ஆனால் ரெலோ தலைமை எம்.கே. சிவாஜிலிங்கத்தை திட்டவில்லை, அவருடைய வீட்டுக்கு கல்லெறியவில்லை, அவருக்கு துரோகிப்பட்டத்தையும் வழங்கவில்லை.

ஏன் ரெலோவினுடைய அரசியல் நிலைப்பாட்டிற்கு எதிரான கருத்தை வெளிப்படையாக முன்வைக்கும் எம்.கே. சிவாஜிலிங்கத்துக்கு எதிராக ஒழுங்காற்று நடவடிக்கை எடுக்கப்படவில்லை என ரெலோ வை வினவிய போது, தாங்கள் ஒரு ஜனநாயக அமைப்பு என்றும் எம்.கே. சிவாஜிலிங்கம் ஜனாதிபதித் தேர்தல் தொடர்பில் தன்னுடைய சொந்தக் கருத்தை வெளியிடுவதற்கு அவருக்கு உரிமையுண்டு என்றும் தெரிவித்தனர்.

ஆயுதத்தை கைவிட்டு ஜனநாயக அரசியலுக்கு வந்துள்ள ரெலோ அமைப்பு கடைப்பிடிக்க முயல்கின்ற ஜனநாயகத்தை, தாங்கள் கறைபடியாத கரங்கள் என்று புளகாங்கிதம் கொள்ளும் தமிழரசுக் கட்சியால் கடைப்பிடிக்க முடியவில்லை.

ஒரு கட்சி உறுப்பினர் முழுமையான ஜனநாயத்தை எதிர்பார்க்க முடியாது; அவர் கட்சியின் முடிவுகளுக்கு கட்டுப்பட வேண்டும் அதுவே மத்தியத்துவப் படுத்தப்பட்ட ஜனநாயகம் என்ற வாதம் எழுகிறது. அப்படியானால் கட்சி முடிவுகளை எடுக்கின்ற போது அதன் உறுப்பினர்களோடு கலந்துரையாடி, விவாதித்து ஒரு முடிவுக்கு வரவேண்டும். இவ்வாறான அம்சங்களே கட்சிக்குரிய கலாசாரத்தை ஏற்படுத்தும். உறுப்பினர்கள் கட்சியின் பங்காளிகள் என்று உணர்வார்கள்.

ஆனால் தமிழரசுக் கட்சியில் உள்ள அனந்தி சசிதரன், சிறிதரன் போன்ற பல உறுப்பினர்கள் தமிழரசுக் கட்சியை ஏற்றுக்கொண்டு அதனுடன் இணைந்தவர்கள் அல்ல. அவர்களது தமிழீழ விடுதலைப் புலிகளுடனான பின்னணி தமிழரசுக் கட்சியின் வாக்குப்பலத்தை அதிகரிக்க உதவும் என்பதால் தமிழரசுக் கட்சிக்குள் உள்வாங்கப்பட்டனர். ஆனால் அவர்களால் தமிழரசுக் கட்சியின் சந்தர்ப்பவாத கலாசாரத்திற்குள் ஒட்ட முடியாத ஒரு சூழல் இன்னமும் உள்ளது.

நாட்டின் எதிர்காலத்தை தீர்மானிக்கின்ற, ஜனாதிபதித் தேர்தலில் யாரை ஆதரிப்பது என்ற முடிவை எடுப்பதற்கான த.தே.கூ. கூட்டம் டிசம்பர் 28இல் நடைபெற்றது. ஆனால் டிசம்பர் 29இல் தேசம்நெற் தமிழரசுக் கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினர் சிறீதரனுடன் தொடர்புகொண்ட போது அவ்வாறான ஒரு சந்திப்பு தொடர்பாக தனக்கு எவ்வித அழைப்பும் விடப்படவில்லை என்றும் அவ்வாறான ஒரு சந்திப்பு நடைபெறுவதை தான் இப்போது தான் அறிவதாகவும் தெரிவித்தார். தாங்கள் யாருக்கு ஆதரவளிக்க வேண்டும் என்பதும் இதுவரை அறிவுறுத்தப்படவில்லை எனவும் தெரிவித்தார்.

(18ஆம் பக்கம் பார்க்க)


# நிறைவேற்று அதிகாரங்களை வரையறுக்கும் சட்டமூலம் 21 இல்

(கொழும்பு)

நிறைவேற்று அதிகார ஜனாதிபதியின் அதிகாரங்களை வரையறுக்கும் சட்டமூலமொன்று எதிர்வரும் 21ஆம் திகதி நாடாளுமன்றில் சமர்ப்பிக்கப்பட உள்ளது.

17ஆவது திருத்தச் சட்டத்தை மீள அமுல்படுத்தவும் 18ஆவது திருத்தச் சட்டத்தை இரத்து செய்யவும் நாடாளுமன்றில் பிரேரணைகள் முன்வைக்கப்பட உள்ளன.

நிறைவேற்று அதிகார ஜனாதிபதி முறைமையை இரத்து செய்து நாடாளுமன்றிற்கு பொறுப்புச் சொல்லக்கூடிய பிரதமர ஆட்சி முறைமை நிறுவப்பட உள்ளது.



சுயாதீன நீதிமன்ற ஆணைக்குழு, சுயாதீன பொலிஸ் ஆணைக்குழு, சுயாதீன அரச சேவை ஆணைக்குழு, சுயாதீன லஞ்ச ஊழல் தவிர்ப்பு ஆணைக்குழு போன்றனவற்றை அமைக்கும 17ஆம் திருத்தச் சட்டம் அமுல்படுத்தப்பட உள்ளது.

இரண்டு தடவைக்கு மேல் ஜனாதிபதித் தேர்தலில் போட்டியிடுவது தொடர்பில் முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்சவினால் கொண்டு வரப்பட்ட 18ஆம் திருத்தச் சட்டத்தை ரத்து செய்வது குறித்த அரசியல் அமைப்பு திருத்தம் எதிர்வரும் 21ஆம் திகதி நாடாளுமன்றில் சமர்ப்பிக்கப்பட உள்ளது.

தற்போதைய அரசியல் அமைப்பின் திருத்தங்கள் எதிர்வரும் 21ஆம் திகதி முதல் அமுல்படுத்தப்பட உள்ளதாக ஆளும் கட்சியின் முக்கியஸ்தர் ஒருவர் சிங்கள பத்திரிகை ஒன்றுக்கு தெரிவித்துள்ளார்.

# சுதந்திரக்கட்சியின் பிரசாரங்களில் பங்கேற்கார் ஜனாதிபதி மைத்திரி

(கொழும்பு)



எதிர்வரும் பொதுத்தேர்தல் பிரசாரங்களின் போது ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன தமது சொந்தக் கட்சியான சிறிலங்கா சுதந்திரக் கட்சியின் பிரசாரங்களில் பங்கேற்கமாட்டார் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

தேசிய அரசாங்கத்தின் 100 நாள் வேலைத்திட்டத்தை முன்னெடுத்துச் செல்வதில் அதிக அக்கறை கொண்டுள்ள அவர் பொதுத்தேர்தலின் போதும் தேசிய அரசாங்கத்தின் தலைவர் என்ற வகையில் செயற்பட வுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

ஜனாதிபதி தேர்தலின் போது தமது வெற்றிக்காக உழைத்த ஐக்கிய தேசியக் கட்சி மற்றும் ஜாதிக ஹெல உறுமய என்பனவற்றின் நோக்கங்களுக்கு பிரச்சினை ஏற்படாதவாறு தமது செயற்பாடுகள் அமைய வேண்டும் என்று மைத்திரிபால கருதுகிறார்.

இந்தநிலையில் பொதுத் தேர்தல் பிரசாரங்களின் போது தாம் கட்சிக்காக தனிப்பட்ட ரீதியில் செயற்பட்டால் அது கட்சிகளுக்கிடையிலான நல்லிணக்கத்தைப் பாதிக்கும் என்று அவர் கருதுவதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

# பிரதமர் வேட்பாளராக போட்டியிடுவார் நிமால்



(கொழும்பு)

எதிர்வரும் பொதுத்தேர்தலில் சிறிலங்கா சுதந்திரக்கட்சியின் சார்பில் பிரதம மந்திரி வேட்பாளராக எதிர்க்கட்சித் தலைவர் நிமால் சிறிபால டி சில்வாவே போட்டியிடுவார் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

புதிய அரசாங்கத்தின் 100 நாள் வேலைத்திட்டத்தின் கீழ் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவின் நிறைவேற்று அதிகாரங்கள் குறைக்கப்பட்ட பின்னர் அவர் கட்சியின் பிரதம மந்திரி வேட்பாளராக போட்டியிடாமல் ஜனாதிபதி பதவியில் நீடிப்பார்.

அதேநேரம் முன்னர் கூறப்பட்டதைப் போன்று முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ச பிரதம மந்திரி பதவிக்காக போட்டியிடமாட்டார் என்றும் தகவல்கள் வெளியாகியுள்ளன.

இந்தநிலையில் சிறிலங்கா சுதந்திரக் கட்சி இந்தத் தடவை தமது சொந்த கை சின்னத்திலேயே போட்டியிடும் என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

# தேர்தலில் பரப்புரை விளம்பரம் 2 பில்லியனை செலவிட்ட மகிந்த



(கொழும்பு)

முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ச தனது தேர்தல் பரப்புரை விளம்பரங்களுக்காக, 2 பில்லியன ரூபா அரசாங்கப் பணத்தைச் செலவிட்டுள்ளதாக, நிதியமைச்சு அதிகாரிகளை ஆதாரம்காட்டி கொழும்பு ஆங்கில வாரஇதழ் ஒன்று செய்தி வெளியிட்டுள்ளது.

அதிபர் தேர்தல் பரப்புரைக்காக, அச்சு மற்றும் இலத்திரனியல் ஊடக விளம்பரங்களுக்கு மகிந்த ராஜபக்ச மில்லியன் கணக்கான பணத்தை செலவிட்டிருந்தார்.

அச்சு மற்றும் இலத்திரனியல் ஊடகங்களில் விளம்பரம் செய்வதற்காக, அவர் 2 பில்லியன் ரூபாவைச் செலவிட்டிருந்தார்.

அதேவேளை, அவரை எதிர்த்துப் போட்டியிட்ட, மைத்திரிபால சிறிசேன, 676 மில்லியன் ரூபாவை விளம்பரங்களுக்காக செலவிட்டிருந்தார்.

தொலைக்காட்சிகளில் விளம்பரங்களை ஒளிபரப்புச் செய்வதற்காக மட்டும், மகிந்த ராஜபக்ச 1 பில்லியன் ரூபாவை செலவு செய்திருந்தார்.

வானொலிகளில் விளம்பரங்களை ஒலிபரப்புவதற்கு, 330 மில்லியன் ரூபாவையும், எல்லா நாளிதழ்களிலும் முழுப்பக்க விளம்பரங்களை பிரசுரிப்பதற்கு 700 மில்லியன் ரூபாவையும் மகிந்த ராஜபக்ச செலவிட்டிருந்தார்.

தயாரிப்புச் செலவை உள்ளடக்காமல், இந்த விளம்பரங்களுக்காக செலவிடப்பட்ட மொத்த தொகை 2.03 பில்லியன் ரூபாவாகும்.

இதற்காக செலவிடப்பட்டது அரசாங்க நிதியாகும். ஜனாதிபதி செயலகம மற்றும் அமைச்சுக்களுக்கு ஒதுக்கப்பட்ட நிதியே இதற்குப் பயன்படுத்தப்பட்டது.

எனினும், தயாரிப்புச் செலவை உள்ளிடக்கியதான, விளம்பரச் செலவுகள் இவற்றைவிடவும் அதிகமாகவே இருக்கும் என்று நிதியமைச்சு அதிகாரிகள் சுட்டிக்காட்டியுள்ளனர்.

மகிந்த ராஜபக்சவுக்கு ஆதரவாக உள்ளூர் ஊடகங்களில் மட்டுமன்றி, வெளிநாட்டு, தமிழ், ஆங்கில, சிங்கள இணைய ஊடகங்களிலும் விளம்பரங்கள் வெளியிடப்பட்டிருந்தன.

தமிழ்நாட்டில் இருந்து வெளியாகும் நாளிதழ்களின் இணையங்களிலும் கூட மகிந்த ராஜபக்சவின். தேர்தல் விளம்பரங்கள் பிரசுரிக்கப்பட்டமை குறிப்பிடத்தக்கது.

# போலி வாக்குச் சீட்டுக்களை செலுத்துவதற்கு முயற்சி

## அமைச்சர் ஹர்சா குற்றச்சாட்டு

கடந்த ஜனாதிபதித் தேர்தலின் போது போலியான வாக்குசீட்டுக்களை செலுத்துவதற்கு மேற்கொள்ளப்பட்ட முயற்சி குறித்து இடைக்கால அரசாங்கத்தின் பிரதி அமைச்சர் ஹர்ச டி சில்வா தகவல்களை வெளியிட்டுள்ளார்.

இந்த வாக்குச்சீட்டுக்களை வாக்குப்பெட்டிகளில் செலுத்துவதறகாக தேர்தல் அதிகாரிகளுக்கு பணமும் வழங்கப்பட்டுள்ளது.

கொழும்பில் உள்ள 1053 வாக்குச் சாவடிகளில் உள்ள அதிகாரிகள் இவ்வாறான வாக்குசீட்டுக்களை வாக்குப் பெட்டிகளுக்குள் செலுத்தும் வகையில் தேர்தல் அதிகாரிகள் அதில் கையொப்பங்களை இட்டுள்ளனர்.இந்த வாக்குச்சீட்டுக்கள் தேர்தலுக்கு முன்னரான 48 மணித்தியாலங்களுக்குள் விநியோகிக்கப்பட்டுள்ளன.

இதற்கு ஜனாதிபதி செயலகமே முழுமையான நிதிப்பங்களிப்பை செய்துள்ளதாக ஹர்சா குற்றம் சுமத்தியுள்ளார்.

இந்தநிலையில் இது குறித்து தாம் இலஞ்ச ஊழல்களுக்கு எதிரான ஆணைக்குழுவில் முறைப்பாடு செய்யவுள்ளதாகவும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

# ஜனாதிபதியை சந்தித்தார் சர்ச்சைக்குரிய சேனுகா

## ஜே.வி.பி.விசனம் கொள்கிறது

(கொழும்பு)

சர்ச்சைக்குரிய முன்னாள் வெளி யுறவுத்துறை செயலாளர் சேனுகா செனவிரட்ன, இரகசியமாக ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவை சந்தித்துள்ளார்.

இதனை ஜே.வி.பி.யின் மாகாண சபை உறுப்பினர் வசந்த சமரசிங்க குற்றச்சாட்டாக முன்வைத்துள்ளார்.

ஏற்கனவே ஜெனீவாவில் உள்ள இலங்கைத் தூதரகத்தின் செப்பனிடும் பணிகளின்போது முறையற்ற நிதியாள்கையை மேற்கொண்டார் என்று சேனுகாவின் மீது குற்றம் சுமத்தப்பட்டிருந்தது.

அத்துடன் சேனுகா செனவிரட்ன, நாடாளுமன்ற உறுப்பினர் சஜின் வாஸ் குணவர்த்தனவுடன் வலுவான தொடர்பைக் கொண்டிருந்தார்.

இந்த அடிப்படையிலேயே சஜின்வாஸ், பிரித்தானியாவின் முன்னாள் உயர்ஸ்தானிகர் கிறிஸ் நோனிஸ் மீது தாக்குதல் நடத்தியதாகவும் தகவல்கள் வெளியாகியிருந்தன.

இந்த அடிப்படையில் சேனுகா மீது விசாரணை நடத்துமாறு குற்றப்புலனாய்வுத் துறையினரிடம் முறைப்பாடு செய்யப்பட வுள்ளதாகவும் வசந்த சமரசிங்க குறிப்பிட்டுள்ளார்.

இந்தநிலையில் சேனுகா, புதிய ஜனாதிபதியை சந்தித்த போதிலும் அவருக்கு எதிரான நடவடிக்கைகளை விலக்கிக் கொள்ளப் போவதில்லை என்று சமரசிங்க தெரிவித்துள்ளார்.

இதேவேளை சேனுகா பிரதி வெளியுறவு அமைச்சர் அஜித் பி.பெரேராவையும் அண்மையில் சந்தித்திருந்தார்.

எனினும் வெளியுறவுத்துறை புதிய செயலாளராக கனடாவின் முன்னாள் உயர்ஸ்தானிகர் சித்திராங்கனி வாகீஸ்வரா நியமிக்கப்பட்டுள்ளார் என்பது குறிப்பிடத்தக்கது.

# நாட்டில் ஏற்பட்டுள்ள மாற்றம் மகாநாயக்க தேரர்களுக்கு மகிழ்ச்சி



(கொழும்பு)

நாட்டில் ஏற்பட்டுள்ள சிறந்த சூழல் மகிழ்ச்சியளிப்பதாக அஸ்கிரிய மற்றும் மல்வத்த மகாநாயக்கர்கள் தெரிவித்துள்ளனர்.

கலாசார மற்றும் கலை நடவடிக்கைகள் தொடர்பான ராஜாங்க அமைச்சர் நந்திமித்ர ஏக்கநாயக்க, மகாநாயக்கர்களிடம் நேற்றுமுன்தினம் ஆசிர்வாதம் பெற்றுக் கொண்ட போதே அவர்கள் இதனை குறிப்பிட்டுள்ளனர்.

அமைச்சர் முதலில் அஸ்கிரிய மகாநாயக்கர் உடுகம சிறி புத்தரக்பித்த தேரரரை சந்தித்தார்.

இதன்போது, கருத்து வெளியிட்ட மகாநாயக்கர் அனைவரும் ஒன்றிணைந்து செயற்படுவதன் மூலம் நாட்டின் எதிர்காலம் சிறந்து காணப்படும் என குறிப்பிட்டார்.

இதனையடுத்து, மல்வத்த மகாநாயக்கர் திப்பட்டுவாவே சிறிசுமங்கல தேரரரை சந்தித்த அமைச்சர் நந்திமித்ர ஏக்கநாயக்க கலந்துரையாடலில் ஈடுபட்டார். இதன்போது, உரையாற்றிய சுமங்கல தேரர், நாட்டு மக்களுக்கு ஏதேனும் நன்மை ஏற்படின் தாம் மகிழ்ச்சியடைவதாக குறிப்பிட்டார்.

# இராணுவ உபகரணங்களை வடக்கிற்கு எடுத்துச்செல்ல தடை

வடக்கு, கிழக்குக்கு கொண்டு செல்லக்கூடாது என்று தடை. விதிக்கப்பட்டிருந்த சில பொருட்கள் மீதான தடை நீக்கப்பட்டுள்ளதுடன் சில பொருட்கள் மீது விதிக்கப்பட்டிருந்த தடை நீடிக்கப்பட்டுள்ளது என்று பாதுகாப்பு அமைச்சு அறிவித்துள்ளது. ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன தலைமையில் நடைபெற்ற முதலாவது பாதுகாப்பு சபை கூட்டத்திலேயே இந்த தீர்மானம் எட்டப்பட்டுள்ளது.

கிழக்கு மாகாணத்துக்கு யுத்த உபகரணங்கள் மற்றும் வெடிபொருட்கள் கொண்டு செல்வதற்கு தடைவிதிக்கப்பட்டுள்ளது.

அத்துடன் வடக்கிற்கு அந்த பொருட்களுடன் இரட்டை தொலைக்காட்டி( பைனோகியூலர்), இராணுவ சீருடைகளை ஒத்த சீருடைகள் மற்றும் துணிவகைகளை எடுத்துச்செல்வதற்கு தடைவிதிக்கப்பட்டுள்ளது.

# சனசமூக நிலைய அபிவிருத்திக்கு 25,000 ரூபா நிதி ஒதுக்கப்பட்டுள்ளது

## வடமாகாணசபை அவைத்தலைவர் தெரிவிப்பு

(யாழ்ப்பாணம்)

2015 ஆம் ஆண்டு முதல் இயங்கு நிலையிலுள்ள சனசமூக நிலையங்களின் அபிவிருத்தி மேம்பாட்டுக்கென 25,000 ரூபா நிதி ஒதுக்கப்பட்டுள்ளதாக வடமாகாண சபையின் அவைத் தலைவர் சீ.வீ.கே.சிவஞானம் அறிவித்துள்ளார்.

பொங்கல் தினத்தன்று கோண்டாவில் மேற்கில் அமைந்துள்ள "மக்கள் முன்னேற்றக்கழக" நிலையத்தின் திறப்பு விழாவிலும் பொங்கல் விழாவிலும் பிரதம விருந்தினராகக் கலந்து கொண்டு உரையாற்றும் போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அங்கு அவர் மேலும் தெரிவிக்கையில்,

வடமாகாணத்திலுள்ள பெரும்பாலான சனசமூகநிலையங்கள இயங்காத நிலையிலுள்ளன. சமூகத்திலுள்ள ஒவ்வொருவரும தனித்து வாழப்பழகிக் கொண்டுள்ளனர்.

இதனால் பொது வேலைத் திட்டத்திலிருந்து எமது சமூகம் அந்நியப்பட்டுச் செல்கிறது. எனது காலத்தில் சமூகத்தின் முன்னேற்றம் பற்றி முதியவர்கள், இளைஞர்கள் கூடிக் கதைக்கின்ற இடமாக சனசமூக நிலையங்கள் இருந்தன. சமூகத்தின் கல்வி, கலை, கலாசார விடயங்கள் பற்றி கலந்துரையாடித் திட்டங்கள் தட்டிச் செயறபட்டு சமூகத்தை மேம்பாடடையச் செயதனர்.

இந்நிலை மீண்டும் எழுச்சிபெறவேண்டும். இச் சனசமூக நிலையமும் இங்குள்ள மக்களை முன்னேற்றுவதற்குத் தேவையான திட்டங்களை வகுக்க வேண்டும். இங்குள்ள வறுமைக் கோட்டிற்குக் கீழ் உள்ள மக்களை முன்னேற்ற வேண்டும் எனத் தெரிவித்தார். (06)

# வாதமடக்கி பகுதி மாணவர்களுக்கு கற்றல் உபகரணங்கள் வழங்கல்

(யாழ்ப்பாணம்)

2015 தைப்பொங்கல் பண்டிகையை முன்னிட்டு நாம் நண்பர்கள் அமைப்பின் பொங்கல் மற்றும் கற்றல் உபகரணங்கள் வழங்கும் நிகழ்வு இளவாலை வாதமடக்கி பகுதியில் இடம் பெற்றது.

நாம் நண்பர்கள் அமைப்பின் ஏற்பாட்டில் "கல்வியில் வறுமையினை ஒழிப்போம் மகிழ்வினை ஏற்படுத்துவோம்" எனும் தொனிப் பொருளில் பல செயற்றிட்டங்கள் முன்னெடுக்கப்பட்டு வருகின்றன.

இதன் ஒரு கட்டமாகவே இளவாலை வாதமடக்கி பகுதியில் பொங்கல் தினத்தில் கற்றல் உபகரணங்கள் வழங்கும் நிகழ்வு ஏற்பாடு செய்யப்பட்டது. முன்னதாக வாதமடக்கி வைரவர் ஆலயத்தில் பொங்கல் நிகழ்வுகள் இடம்பெற்றன. தொடர்ந்து மாணவர்களுக்கான கற்றல் உபகரணங்களும் அன்பளிப்புச் செய்யப்பட்டன.

கடந்த வியாழக்கிழமை காலை இளவாலை வாதமடக்கி வைரவர் ஆலயத்தில் வைத்து இவை வழங்கி வைக்கப்பட்டுள்ளன.

இதற்கான அனுசரணையினை புலம்பெயர்ந்து லண்டனில் வசிக்கும் சண்முகநாதன் குருபரன் வழங்கியுள்ளமை குறிப்பிடத்தக்கது. (48)

# இளைஞர் இலக்கிய மன்றத்தினரின் பொங்கல்தின சிறப்பு பட்டிமன்றம்

(யாழ்ப்பாணம்)

தென்மராட்சி இளைஞர் இலக்கிய மன்றத்தினரின் ஏற்பாட்டில் பொங்கல் தின சிறப்பு பட்டிமன்றம் கடந்த வியாழக்கிழமை பிற்பகல் 3 மணிக்கு மீசாலை திருநீலகண்ட வெள்ளை மாவடிப் பிள்ளையார் ஆலய மண்டபத்தில் இடம்பெற்றது.

தென்மராட்சி இளைஞர் இலக்கிய மன்றத்தினரின் தலைவர் இ.ஷாமிலன் தலைமையில் இடம்பெற்ற நிகழ்வில் மங்கள விளக்கினை மீசாலை திருநீல கண்ட வெள்ளை மாவடிப் பிள்ளையார் ஆலய முகாமையாளர் இ.இராமலிங்கம் ஏற்றினார். கடவுள் வாழ்த்தைத் தொடர்ந்து சிறப்புப் பட்டிமன்றம் இடம் பெறறது, சண்டிலிப்பாய் பிரதேச சமூக சேவைகள் உத்தியோகத்தர் வரணியூர் வே.சிவராஜா தலைமையில் தமிழர் தம் பண்பாட்டை இன்றும் தாங்குவது மங்காத பழமையா? மாறிவரும் புதுமையா? என்னும் தலைப்பில் இப்பட்டிமன்றம் இடம்பெற்றது.



இதில் தமிழர் தம் பண்பாட்டை இன்றும் தாங்குவது மங்காத பழமையே என்னும் தலைப்பில் ஸ்ரீ.சிவஸ்கந்தஸ்ரீ, இ.ஷாமிலன், சு.ஜிந்துசா ஆகியோரும் தமிழர் தம் பண்பாட்டை இன்றும் தாங்குவது மாறிவரும் புதுமையே என்னும் தலைப்பில் ஜீ.சஜீவன், வே.எழில்வேந்தன். த.வராகினி ஆகியோர் வாதிட்டனர். இறுதியில் தமிழர் தம் பண்பாட்டை இன்றும் தாங்குவது மங்காத பழமையும் மாறி வரும் புதுமையும் என தீர்ப்பாயிற்று. தென்மராட்சி இளைஞர் இலக்கிய மன்றத்தினரின் இந் நல்ல முயற்சிக்கு அதிகளவானோர் வருகை தந்து ஆதரவு நல்கியமை குறிப்பிடத்தக்கது.(48)

# வாழ்வாதாரத் திட்டத்தின் கீழ் கடைத் தொகுதி திறப்பு



(கிளிநொச்சி)

கிளிநொச்சி கல்வி வளர்ச்சி அறக்கட்டளையினால் குடும்ப வாழ்வாதார திட்டத்தின் கீழ் நாச்சிக்குடா பிரதேசத்தில் தெரிவு செய்யப்பட்ட குடும்பம் ஒன்றுக்காக அமைக்கப்பட்ட கடைத் தொகுதி கடந்த 11 ஆம் திகதி திறந்து கையளிக்கப்பட்டது.

இந் நிகழ்வில் கல்வி வளர்ச்சி அறக்கட்டளையின் தலைவர், செயலாளர், பொருளாளர், உறுப்பினர்கள் மற்றும் பணியாளர்களுடன் அக் கிராம மக்களும் கலந்துகொண்டனர். (90)

# கட்டுகள் அற்றநிலையில் தோட்டக் கிணறுகள்

(அச்சுவேலி)

அச்சுவேலி, பத்தமேனி, கதிரிப்பாய், தம்பாலை போன்ற பகுதிகளில் உள்ள தோட்டக்கிணறுகள் மற்றும் சில வயல் கிணறுகள் கட்டுக்கள் அற்ற நிலையில் புனரமைப்பின்றி நீண்ட காலமாக காணப்படுவதாக அப்பகுதி விவசாயிகளால் தெரிவிக்கப்பட்டுள்ளது.

கடந்த காலங்களில் ஏற்பட்ட போர் வன்முறைகளால் அழிவடைந்த நிலையில் உள்ள மேற்படி தோட்டக்கிணறுகள் பல வருடங்களாகப் புனரமைப்பின்றி உடைந்தும் மேல் கட்டுகள் இன்றியும் காணப்படுகின்றன.

மழைகால்ங்களில் வெள்ள நீர் கிணற்றை மூடிக் காணப்படுவதால் கிணறுகள் உள்ள இடங்களை அடையாளம் காணமுடியாத நிலை உள்ளதாகவும் விவசாயிகள் தெரிவிக்கின்றனர். மேலும் பயிர்ச் செய்கை காலங்களில் பயிர்களுக்கு நீர் பாய்சும் வேளைகளில் தாம் ப்ல்வேறு கஷ்ட நிலைகளை எதிர் கொள்வதாகவும் விவசாயிகள் தெரிவிக்கின்றனர்.

எனவே இவ்வாறு புனரமைப்பின்றி சேதமடைந்து காணப்படும் தோட்ட, வயல் கிணறுகளைச் சம்பந்தப்பட்ட நிறுவனங்களோ அல்லது சம்மேளனங்களோ புனரமைத்து வழங்க வேண்டும் என அவர்கள் கோரிக்கை விடுத்துள்ளனர். (85)

# டெங்கு நோயின் தாக்கம் கடந்த வருடம் 1339 பேர் சிகிச்சை

(யாழ்ப்பாணம்)

கடந்த 2014 ஆம் ஆண்டு யாழ்.மாவட்டத்தின் பல்வேறு பகுதிகளில் இருந்தும் டெங்கு நோய் காரணமாக பாதிக்கப்பட்ட 1,339 பேர் யாழ். போதனாவைத்தியசாலையில் சிகிச்சை பெற்றுள்ளதாகவும் ஒருவா உயிரிழந்திருப்பதாகவும் அவ் வைத்தியசாலையின் அதிகாரி ஒருவர் தெரிவித்துள்ளார்.

இந்த வருடம் தை மாதத்திலும் இந்த நோயின் தாக்கம் காணப்படுவதாகவும் இந்த மாதம் முதலாம் திகதி முதல் நேற்று வரை 122 பேர் இவ்வாறு சிகிச்சை பெற்றுள்ளதாகவும் தெரிவித்த அந்த அதிகாரி நேற்றைய தினம் கொக்குவில், யாழ்.பண்ணை, கோப்பாய் ஆகிய பகுதிகளில் டெங்கு நோயினால் பாதிக்கப்பட்ட மூவர் சிகிச்சைக்கு அனுமதிக்கப்பட்டுள்ளதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது. கடந்த வருடம் டிசம்பர் மாதத்திலேயே அதிகளவான டெங்கு நோயாளர்கள் சிகிச்சை பெற்றுள்ளதாகவும் மேலும் சுட்டிக் காட்டப்பட்டுள்ளது. (பா)

# முரசின் இன்றைய பலன்

(19.01.2015 திங்கட்கிழமை)

ஐய வருஷம் தை மாதம் 05 ஆம் திகதி.
சதுர்த்தி / சித்தம்.
பூராட நட்சத்திரம் பின்னிரவு 03.59 வரை. பின் உத்தராடம்.
இராகு காலம 08.05 - 09.35 வரை. சுபநேரம 12.35 - 02.05 வரை.



ஜோதிர் வித்யா ரத்னா வி.ஏ.சிவராசா அவர்களால் கணிக்கப்பட்டது.

**மேடம்**
பெற்றோரின் தேகநலம் மேம்பட்டதால் கைவிட்டிருந்த பயணத்தில் கால் பதித்தல்.

**ரிஷபம்**
போலியான நகைகள் வந்து சேரும் அபாய நிலை ஏற்படலாம்.

**மிதுனம்**
கடந்த காலத்தில் ஏற்பட்ட துயரை எண்ணி மனக்கிலேச மடைதல்.

**கடகம்**
நடவாது என எண்ணி இருந்த காரியம் நடந்ததால் ஆச்சரிய மடைதல்.

**சிம்மம்**
முறையீடு செய்ததனால் நிலுவைகள் பெற சாதகமான சூழ் நிலை தக்கவைத்தல்.

**கன்னி**
கிரகசாந்திகள் செய்ய தெய்வதலத்திற்கு குடும்ப சகிதம் விஜயம் செய்தல்.

**துலாம்**
பிள்ளைகளின் ஒவ்வாத செயல்களைப் பவ்வியமான முறையால கண்டித்தல்.

**விருச்சிகம்**
பாதுகாப்பினைப் பலப்படுத்தியதால் திருடர் தொல்லை ஏற்படா திருத்தல்.


**தனுசு**
திகதிதப்பிய பொருட்களில் விழிப்புணர்வை ஏற்படுத்துங்கள்.

**மகரம்**
இழுபட்ட திருமணப் பேச்சு சுமுக நிலைக்கு வந்தடைதல்.

**கும்பம்**
பழையபகைமை மீண்டும் முளைவிடுவதினால் எச்சரிக்கையாக இருங்கள்.

**மீனம்**
நட்புவட்டாரம் சாதகமாக இருப்பதினால் நினைத்தது நிறைவேறல்.

# ஸ்ரார்க் சிறப்பு பந்து வீச்சு; ஆஸிக்கு 2ஆவது வெற்றி



(மெல்பேர்ன்)

ஸ்ரார்க்கின் சிறப்பான பந்து வீச்சின் மூலம் முக்கோண ஒரு நாள் கிரிக்கெட் தொடரில் அவுஸ்ரேலிய அணி இரண்டாவது வெற்றியைப் பதிவு செய்துள்ளது.

இந்திய, அவுஸ்ரேலிய அணிகளுக் கிடையிலான முக்கோண ஒரு நாள் கிரிக்கெட் தொடரின் இரண்டாவது போட்டி நேற்று அவுஸ்ரேலியாவின் மெல்பேர்னில் நடைபெற்றது.

நாணயச் சுழற்சியில் வெற்றிபெற்று முதலில் ஆடிய இந்திய அணி முதல் மூன்று விக்கெட்டுக்களையும் 59 ஓட்டங்களைப் பெற்றவேளை பறிகொடுத்து திணறியது. இந்நிலையில் நான்காவது விக்கெட்டுக்காக இணைந்த சுரேஷ் ரெய்னா, ரோகித் சர்மாவுடன் இணைந்து நிதானமாக ஆடினார். இந்த ஜோடி அவுஸ்ரேலிய அணியின் பந்து வீச்சாளர்களை புரட்டி எடுத்து ஓட்டங்களைக் குவித்தது. இருப்பினும் இந்த ஜோடி 126 ஓட்டங்களை இணைப்பாட்டமாகப் பெற்றவேளை (ரெய்னா) பிரிக்கப்பட்டது.

தொடர்ந்து மறுமுனையில் சிறப்பாக் ஆடிய ரோகித் சர்மா சதமடித்து அசத்தினார். இறுதியில் இந்திய அணி 50 ஓவர்கள்நிறைவில்எட்டுவிக்கெட்டுக்களை இழந்து 267 ஓட்டங்களைப் பெற்றது. இதில் ரோகித் சர்மா 139 பந்துகளை எதிர்கொண்டு நான்கு சிக்ஸர்கள், ஒன்பது பவுண்டரிகள் அடங்கலாக 138, சுரேஷ் ரெய்னா 51, டோனி 19, அஸ்வின் 14 ஓட்டங்களைப் பெற்றனர். பந்து வீச்சில் சிறப்பான முறையில் செயற்பட்ட ஸ்ரார்க் 43 ஓட்டங்களைக் கொடுத்து ஆறு விக்கெட்டுக்களைக் கைப்பற்றினார்.

பதிலுக்கு 268 ஓட்டங்களைப் பெற்றால் வெற்றி என்ற நிலையில் களமிறங்கிய அவுஸ்ரேலிய அணிக்கு டேவிட் வோர்னர், ஆரோன் பிஞ்ச் ஆகியோர் சிறந்த ஆரம்பத்தைப் பெற்றுக் கொடுத்தனர். தொடர்ந்தும் அசத்திய ஆரோன் பிஞ்ச் நான்கு ஓட்டங்களால் சதமடிக்கும் வாய்ப்பைக் கோட்டை விட்டார். நிறைவில் அவுஸ்ரேலிய அணி 49 ஓவர்கள் நிறைவில் ஆறு விக்கெட்டுக்களை இழந்து வெற்றியிலக்கை அடைந்தது. இதில் ஆரோன் பிஞ்ச் 127 பந்துகளை எதிர்கொண்டு இரண்டு சிக்ஸர்கள், ஐந்து பவுண்டரிகள் அடங்கலாக 96, டேவிட் வோர்னர் 24, வட்சன் 41, ஸ்ரீபன் ஸ்மித் 47 ஓட்டங்களைப் பெற்றனர். பந்து வீச்சில் யாதவ் இரு விக்கெட்டுக்களைக் கைப்பற்றினார். இதன் மூலம் அவுஸ்ரேலிய அணி நான்கு விக்கெட்டுக்களால் வெற்றிபெற்றது. போட்டியின் ஆட்டநாயகனாக ஸ்ரார்க் தெரிவு செய்யப்பட்டார்.



## சாதிக்க காத்திருக்கிறோம்



உலகக்கிண்ணத் தொடரில் பாகிஸ்தான் அணியின் செயற்பாடு ஆச்சரியம் அளிக்கும் வகையில் இருக்கும் என அந்த அணியின் பயிற்சியாளர் வக்கார் யூனிஸ் தெரிவித்துள்ளார்.

உலகக்கிண்ணப் போட்டிக்கு அனைத்து அணிகளும் பரபரப்பாக தயாராகி வரும் நிலையில், இந்தியாவை வீழ்த்தி பாகிஸ்தான் அணி வரலாறு படைக்கும் என அந்த அணியின் மூத்த வீரர் யூனிஸ்கான் தெரிவித்திருந்தார்.

இந்நிலையில் பாகிஸ்தான் அணி உலகக்கிண்ணப் போட்டியில் சிறப்பாகச் செயற்படக் காத்திருக்கிறது என்று கூறிய பயிற்சியாளர் வக்கார் யூனிஸ், அணியின் செயற்பாடு பற்றி மேலும் கூறுகையில், உலகக்கிண்ணப் போட்டியில் எங்களை வெற்றி வாய்ப்பு உள்ள அணியாக கருதவில்லை.

இதன் மூலம் தேவையில்லாமல் ஏற்படும் நெருக்கடி எங்கள் அணிக்கு தவிர்க்கப்பட்டிருக்கிறது. இந்த முறை நாங்கள் ஆச்சரியம் அளிக்கும் வகையில் வெற்றிகளை குவிப்போம். சுழற்பந்து வீச்சாளர் அஜ்மல் மீதான தடை பாகிஸ்தான் அணிக்கு பின்னடைவு தான். இருப்பினும் உலகக்கிண்ண போட்டிக்கான பாகிஸ்தான் அணியில் சிறந்த வீரர்கள் உள்ளனர் எனத் தெரிவித்துள்ளார்.

# சதித் திட்டம் தீட்டிய இங்கிலாந்து அணி உலகக் கிண்ணத்தொடரிலிருந்து நீக்கம்?

உலகக் கிண்ணப் போட்டிகளிலிருந்து இங்கிலாந்து அணியை நீக்க சர்வதேச கிரிக்கெட் சபை (ஐ.சி.சி.,) முடிவெடுத்துள்ளதாக தகவல்கள் வெளியாகியுள்ளன.

அடுத்த மாதம் உலகக்கிண்ணப் போட்டிகள் ஆரம்பமாகவுள்ள நிலையில், இங்கிலாந்து உலகக் கிண்ண அணியில் தெரிவு செய்யப்பட்ட வீரர்களில் பலர், பாரம்பரியமாக இங்கிலாந்தை சேர்ந்தவர்கள் அல்ல என்ற குற்றச்சாட்டு எழுந்துள்ளது.

இங்கிலாந்து உலகக்கிண்ண அணிக்கு அணித் தலைவராக, அயர்லாந்தைச் சேர்ந்த இயன் மோர்கன் நியமிக்கப்பட்டுள்ளார்.

இவரைத தவிர, கேரி பலன்ஸ் (சிம்பாப்வே), பென் ஸ்டோக்ஸ் (நியூசிலாந்து) உள்ளிட்ட வீரர்கள் வேறு நாட்டினை சேர்ந்தவர்கள். அதே போல் வேகப்பந்து வீச்சாளர் ஜோர்டன், மேற்கிந்திய தீவுகளின் பார்படோசை சேர்ந்தவர்.


சர்வதேச கிரிக்கெட் சபையின் பழைய விதியைப் பயன்படுத்தி தான் மோர்கன் உள்ளிட்ட வீரர்களை தெரிவு செய்து, இங்கிலாந்து அணி பலன் அடைய முயற்சிப்பதாக புகார் எழுந்துள்ளது.


அதாவது பழைய ஐ.சி.சி., விதி 2010, 3.3இன் படி, தெரிவு செய்யப்படும் வீரர் அந்த நாட்டில் வசிப்பவராக இருக்க வேண்டும். அதேநேரம், 7 ஆண்டுகளில் சம்பந்தப்பட்ட நாட்டில் குறைந்தது 183 நாட்கள் தங்கியிருந்தால் போதும் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

அதேநேரம், புதிய விதிப்படி, சம்பந்தப்பட்ட நாட்டில் 6 வயது, 6 மாதத்தில் இருந்து வசிப்பவராக இருக்க வேண்டும். தொடர்ந்து 12 மாதத்துக்கு மேல், வேறு நாட்டில் தங்கியிருக்கக் கூடாது என்று கூறப்பட்டுள்ளது. சமீபத்தில் அணியிலிருந்து நீக்கப்பட்ட முன்னாள் அணித்தலைவர் குக் தான், இதை வெளியில் கொண்டு வந்துள்ளார்.

இதையடுத்து, இந்தப்புகார் குறித்து சர்வதேச கிரிக்கெட் சபை (ஐ.சி.சி.,) ஏற்கனவே விசாரிக்கத் தொடங்கி விட்டது. இதில் இங்கிலாந்து அணியின் மீதான தவறு நிரூபிக்கப்பட்டால், உலகக்கிண்ணத் தொடரிலிருந்து அந்த அணி நீக்கப்படலாம் என்ற மோசமான நிலைமை ஏற்பட்டுள்ளது.

# அவுஸ்ரேலிய ஓப்பன் இன்று ஆரம்பம் முன்னணி வீரர்களிடையே கடும் போட்டி









(மெல்பேர்ன்)

ஒவ்வொரு ஆண்டும் அவுஸ்ரேலிய ஓப்பன், பிரெஞ்சு ஓப்பன், விம்பிள்டன், அமெரிக்க ஓப்பன் ஆகிய 4 கிராண்ட் ஸ்லாம் ரென்னிஸ் போட்டிகள் நடைபெறும்.

இந்த ஆண்டின் முதல் கிராண்ட்ஸ்லாம் போட்டியான அவுஸ்ரேலிய ஓப்பன் ரென்னிஸ் மெல்பேர்ன் நகரில் இன்று ஆரம்பமாகவுள்ளது. பெப்ரவரி 1ஆம் திகதி வரை போட்டி நடைபெறவுள்ளது.

முதல்நிலை வீரரான ஜோகோவிச் (சேர்பியா), இரண்டாம் நிலை வீரர் ரோஜர் பெடரர் (சுவிட்சர்லாந்து) 3ஆம் நிலை வீரர் ரபெல் நடால், (ஸ்பெயின்), நடப்பு சம்பியனும், 4ஆம் நிலை வீரருமான வாவ்ரிங்கா (சுவிட்சர்லாந்து) ஆகியோர் இடையே சம்பியன் பட்டம் பெற கடும் போட்டி நிலவுகிறது.

27 வயதான ஜோகோவிச் 7 கிராண்ட் ஸ்லாம் பட்டம் பெற்றுள்ளார். அவுஸ்ரேலிய ஓப்பன் பட்டத்தை 3 முறை (2011, 2012, 2013) கைப்பற்றினார். கடந்த தடவை காலிறுதியில் தோற்றார். கடந்த ஆண்டு அவர் விம்பிள்டன் பட்டத்தை மட்டுமே வென்றார்.

33 வயதான ரோஜர் பெடரர் 17 கிராண்ட்ஸ்லாம் பட்டம் வென்று சாதனை புரிந்திருக்கிறார். அவுஸ்ரேலிய ஓப்பன் பட்டத்தை 4 தடவை (2004, 2006, 2007, 2010) வென்றுள்ளார். கடந்த 4 முறையும் அவர் அரையிறுதியில் தோற்றார். கடந்த ஆண்டும், 2013ஆம் ஆண்டும் அவர் எந்த கிராண்ட்ஸ்லாம் பட்டத்தையும் வெல்லவில்லை.

29 வயதான நடால் 14 கிராண்ட் ஸ்லாம் பட்டம் வென்றுள்ளார். பிரெஞ்ச் ஓப்பன் பட்டத்தை 9 முறை கைப்பற்றி சாதனை புரிந்துள்ளார். அவுஸ்ரேலிய ஓப்பன் பட்டத்தை ஒரு தடவை மட்டுமே (2009) கைப்பற்றினார். கடந்த முறை இறுதிப்போட்டியில் தோற்றார். கடந்த ஆண்டு காயம் காரணமாக 3 மாதங்களுக்கு மேல் விளையாடவில்லை.

25 வயதான வாவ்ரிங்கா ஒரே ஒரு கிராண்ட்ஸ்லாம் பட்டம் பெற்றுள்ளார். அவர் சமீபத்தில் சென்னையில் நடந்த ஏடிபி போட்டியில் பட்டம் வென்றார் என்பது குறிப்பிடத்தக்கது.

பெண்கள் பிரிவில் செரீனா வில்லியம்ஸ் (அமெரிக்கா) மரிய ஷரபோவா (ரஷ்யா), ஷிமோனா ஹால்ப் (ருமேனியா) குவிட்டோ வா (செக்குடியரசு) ரட்வன்னிகா (போலாந்து), இவானோவிக் (சேர்பியா) பவுச்செர்ட் (கனடா) ஆகியோர் இடையே போட்டி நிலவுகிறது.

இதேவேளை, இப்போட்டி குறித்து கருத்துத் தெரிவித்த ஷரபோவா, இந்த ஆண்டு ஆரம்பத்திலேயே கிண்ணம் வென்றது மகிழ்ச்சி அளிக்கின்றது. ஆஸி. ஓப்பன் என்பது எப்பொழுதுமே எல்லோருக்கும் சவால் நிறைந்ததாகவே இருக்கும்.

இந்த சவால்களை பதற்றமின்றி முறியடிப்பதன் மூலம் வெற்றியைப் பதிவு செய்ய முடியும் என்னைப் பொறுத்த வரை இத்தொடரில் முத்திரை பதிக்கத் தக்க விதத்தில் செயற்படுவேன் என்ற நம்பிக்கை இருக்கிறது என்றார்.

# உலகக் கிண்ண தொடர் கப்டன்களுக்குச் சவால்

## ராகுல் ராவிட்

(புதுடில்லி)

அவுஸ்ரேலியா மற்றும் நியூசிலாந்து நாட்டில் நடைபெறவுள்ள 11ஆவது உலகக்கிண்ணப் போட்டி விறுவிறுப்பு நிறைந்ததாக இருக்கும் என முன்னாள் இந்திய அணிக் கப்டன் ராகுல் ராவிட் தெரிவித்துள்ளார்.

ஒரு இனிங்ஸில் இரண்டு புதிய பந்துகள் பயன்படுத்துவதும் ஆடுகளங்கள் வேகப்பந்து வீச்சுக்கு அனுகூலமாக இருப்பதும் உலகக்கிண்ண ஆட்டத்தை மேலும் விறுவிறுப்பு நிறைந்ததாக மாற்றும்.

எனவே இது அணித்தலைவர்களுக்குச் சவாலாக இருக்கும் என்று நான் நினைக்கிறேன். புதிய விதிமுறையின் படி இனிங்ஸின் எல்லா ஓவர்களிலும் கண்டிப்பாக 5 களத்தடுப்பாளர்கள் 30 அடி வட்டத்துக்குள் நிற்க வேண்டும்.

முதல் 10 ஓவர்களில் 2 களத்தடுப்பாளர்கள் மட்டுமே 30 அடி உள்வட்டத்திற்கு வெளியில் நிற்க முடியும். 40 ஓவர்களுக்கு முன்பு துடுப்பெடுத்தாட முடிவு செய்யும் அணி எடுக்கும் பவர் பிளேயின் போது 3 களத்தடுப்பாளர்கள் தான் 30 அடி உள்வட்டத்திற்கு வெளியில் நிற்கலாம்.

அதே போல் பந்து வீச்சாளர்கள் விக்கெட்டை வீழ்த்த தாக்குதல் தொடுக்கும் பட்சத்தில் ஆட்டத்தில் பரபரப்புக்கு பஞ்சம் இருக்காது. இந்தப் போட்டி நீண்ட காலம் நடப்பதால் ஆடுகளத்தின் தன்மை மாறக்கூடும். சுழற்பந்து வீச்சாளர்களுக்கும் அனுகூலம் கிடைக்கும் எனவும் அவர் மேலும் தெரிவித்துள்ளார்.






வவுனியா கோவில்குளம் இந்துக் கல்லூரியின் இல்ல மெய்வல்லுநர் திறனாய்வு மரதன் ஓட்டப் போட்டி நேற்று முன்தினம் நடைபெற்றது. கல்லூரி அதிபர் திருமதி நடராசா தலைமையில் நடைபெற்ற இப்போட்டி கல்லூரியின் பழைய மாணவர் சங்கத் தலைவர் நிரோசனால் கொடி அசைத்து ஆரம்பித்து வைக்கப்பட்டது. ஆண்களுக்கான போட்டி கல்லூரி முன்றிலில் ஆரம்பமாகி, மன்னார் வீதி வழியாகச் சென்று வைரவப் புளியங்குளம், புகையிரத வீதி வழியாக மீண்டும் கல்லூரி முன்றிலில் நிறைவடைந்தது. பெண்களுக்கான போட்டி கண்டி வீதியிலுள்ள மத்திய மகாவித்தியாலயத்தில் ஆரம்பமாகி கொரவப்பொத்தான வீதியூடாக கல்லூரியில் நிறைவடைந்தது. ஆண்கள் பிரிவில் எஸ்.யூட் டினேஸ் முதலாம் இடத்தையும், பெண்கள் பிரிவில் எஸ்.தேவிகா முதலாம் இடத்தையும் தட்டிச் சென்றமை குறிப்பிடத்தக்கது. (70)

விளையாட்டுச் செய்திகள்

# மதுஷன் சிறப்பான பந்து வீச்சு யாழ். மத்திக்கு இனிங்ஸ் வெற்றி

(யாழ்ப்பாணம்)

மதுஷனின் சிறப்பான பந்துவீச்சின் மூலம் யாழ். மத்திய கல்லூரி அணி இனிங்ஸ் மற்றும் 28ஓட்டங்களால் வெற்றி பெற்றது.

இலங்கை பாடசாலைகள் கிரிக்கெட் சங்கத்தினால் நடாத்தப்பட்டு வரும் பிரிவு மூன்றின் 19 வயதுப் பிரிவு அணிகளுக் கிடையிலான சூப்பர் குறுப் இரண்டு நாள் இனிங்ஸ் கிரிக்கெட் போட்டி தற் போது நடைபெற்று வருகின்றது.

இதில் யாழ். மத்திய கல்லூரி மற் றும் கொழும்பு ஹென்றி ஓல்ட்கோத் அணிகளுக்கிடையிலான ஆட்டம் கடந்த 16,17ஆம் திகதிகளில் யாழ். மத்திய கல்லூரி மைதானத்தில் நடைபெற்றது.

நாணயச் சுழற்சியில் வெற்றிபெற்ற யாழ் மத்திய கல்லூரி அணி முதலில் களத் தடுப்பைத் தீர்மானித்தது. இதற்கமைய முதல் இனிங்ஸிற்காக ஆடிய கொழும்பு ஹென்றி ஓல்ட்கோத் அணி மதுஷனின் பந்து வீச்சிற்கு ஈடுகொடுக்க முடியா-மல் மளமளவென விக்கெட்டுக்களைப் பறிகொடுத்தது. இருப்பினும் ஆரம்பத் துடுப்பாட்ட வீரராக களமிறங்கிய எச். விதன பொறுப்பாக ஆடினார். இறுதியில் ஹென்றி ஓல்ட்கோத் அணி முதல் இனிங் ஸிற்காக சகல விக்கெட்டுக்களையும் இழந்து 67 ஓட்டங்களைப் பெற்றது. இதில் எச். விதன 38 பந்துகளை எதிர் கொண்டு ஐந்து பவுண்டரிகள் அடங்கலாக 29, டில்சான் 15 ஓட்டங்களைப் பெற்றனர். பந்து வீச்சில் ஐந்து ஓவர்கள் வீசிய மதுஷன் நான்கு ஓட்டங்களைக் கொடுத்து ஏழு விக்கெட்டுக்களைக் கைப்பற்றினார்.

பதிலுக்கு முதல் இனிங்ஸிற்காக ஆடிய யாழ். மத்திய கல்லூரி அணி கிருபாகரன், கார்த்தீபன் ஆகியோரின் பொறுப்பான ஆட்டத்தின் மூலம் வலுவான ஓட்ட எண்ணிக்கையைப் பெற்றது. இறுதி யில் யாழ். மத்திய கல்லூரி அணி முதல் இனிங்ஸிற்காக சகல விக்கெட் டுக்களையும் இழந்து 218 ஓட்டங்களைப் பெற்றது. இதில் கிருபாகரன் 140 பந்து களை எதிர்கொண்டு ஆறு பவுண்டரிகள் அடங்கலாக 73, கார்த்தீபன் 33 பந்து களை எதிர்கொண்டு நான்கு பவுண்டரி கள் அடங்கலாக 40, கௌதமன் 51 பந்துகளை எதிர்கொண்டு 24, நிரோ ஜன் 21 ஓட்டங்களைப் பெற்றனர். பந்து வீச்சில் விதன இரண்டு, விக்கிரமங்க மூன்று விக்கெட்டுக்களைக் கைப்பற் றினர்.

151 ஓட்டங்கள் பின்னிலையில் இரண் டாவது இனிங்ஸிற்காக ஆடிய கொழும்பு ஹென்றி ஓல்ட்கோத் அணி மீண்டும் மதுஷனின் பந்து வீச்சிற்கு ஈடுகொடுக்க முடியாமல் விரைவாக விக்கெட்டுக்களைப் பறிகொடுத்தது. இறுதியில் ஹென்றி ஓல்ட்கோத் அணி இரண்டாவது இனிங் ஸிற்காக 40.5 ஓவர்கள் நிறைவில் சகல விக்கெட்டுக்களையும் இழந்து 123 ஓட்டங் களைப் பெற்றுத் தோல்வியைத் தழு வியது. இதில் கெற்றியாராச்சி 24 ஓட்டங்களைப் பெற்றார். பந்து வீச்சில் 18.5 ஓவர்கள் பந்து வீசிய மதுஷன் 46 ஓட்டங்களைக் கொடுத்து ஆறு விக்கெட் டுக்களைக் கைப்பற்றினார். இப்போட்டி யில் இரு இனிங்ஸிலும் 13 விக்கெட் டுக்களைக் கைப்பற்றிய மதுஷன் யாழ். மத்திய கல்லூரி அணி இனிங்ஸ் மற் றும் 28 ஓட்டங்களால் வெற்றிபெற துணை புரிந்தார். (17)



## தாச்சி மலர் வெளியீடு



(பண்டத்தரிப்பு)

தைத் திருநாளை முன்னிட்டு பண்டத் தரிப்பு சாந்தை விநாயகர் விளையாட் டுக்கழகம் தமிழர் பாரம்பரிய விளையாட் டுக்களில் ஒன்றான தாச்சிப் போட்டியை இளைய தலைமுறையினரிடையே கொண்டு செல்லும் நோக்கில் "தாச்சி மலர்" எனும் நூலினை கடந்த 15ஆம் திகதி வெளி யிட்டுள்ளது. இதில் தாச்சி விளையாட்டுப் போட்டி குறித்த விபரங்கள் மற்றும் கிராமத்தவர்கள் தாச்சிப் போட்டியில் நிகழ்த்திய சாதனைகள் போன்ற பல் வேறு விடயங்கள் உள்ளடக்கப்பட்டுள் ளன.

இந்நூலை மானிப்பாய் பிரதேச ஈ.பி. டி.பி. அமைப்பாளர் அன்ரன் ஜோன்சன் ஜீவா வெளியிட்டு வைத்தார். (54)

# கிண்ணம் வென்றது கொக்குவில் காமாட்சி




(கொம்மாந்தறை)

பொங்கல் திருநாளை முன்னிட்டு கொம்மாந்தறை விளையாட்டுக்கழகம் நடாத்திய மென்பந்து கிரிக்கெட் தொட ரின் சம்பியன் பட்டத்தை கொக்குவில் காமாட்சி அணி கிண்ணத்தைக் கைப்பற் றிக் கொண்டது.

எட்டு ஓவர்களைக் கொண்ட இப் போட்டி நேற்று முன்தினம் இரவு கொம்மாந்தறை விளையாட்டுக்கழக மைதானத்தில் மின்னொளி யில் நடைபெற்றது. இதில் குருநகர் கார்மேல் போய்ஸ் அணியும் கொக்குவில் காமாட்சி அணி யும் மோதின.

நாணயச் சுழற்சியில் வெற்றிபெற்று முதலில் ஆடிய குருநகர் கார்மேல் போய்ஸ் அணி எட்டு ஓவர்கள் நிறைவில் சகல விக்கெட்டுக்களையும் இழந்து 70 ஓட்டங்களைப் பெற் றது. இதில் தேசிகன் 23, செல் டன் 21 ஓட்டங்களைப் பெற்ற னர். பந்து வீச்சில் நிக்ஷன் மூன்று விக்கெட்டுக்களைக் கைப்பற்றினார்.

பதிலுக்கு 71 ஓட்டங்களைப் பெற்றால் வெற்றி என்ற நிலை யில் களமிறங்கிய கொக்கு வில் காமாட்சி 7.2 ஓவர்கள் நிறைவில் நான்கு விக்கெட் டுக்களை இழந்து வெற்றி யிலக்கை அடைந்தது. இதில் ஜெயரூபன் 27, சிந்து 22 ஓட் டங்களைப் பெற்று அணியின் வெற்றிக்கு துணை புரிந்தனர். பந்து வீச்சில் உதயா, அஜன் ஆகியோர் தலா இரு விக்கெட் டுக்களைக் கைப்பற்றினர். இரு விக்கெட் வித்தியாசத்தில் வெற்றி பெற்ற காமாட்சி அணி கிண் ணத்தைச் சுவீகரித்துக் கொண்டது. போட்டியின் ஆட்டநாயகன் மற் றும் தொடர் நாயகன் விருதை காமாட்சி அணியின் சிந்து பெற்றுக் கொண்டார். (48)

## பலன் தரும் தொடர்

**மத்தியூஸ்**

(ஒக்லாண்ட்)

நியூசிலாந்து அணியுடனான ஒரு நாள் கிரிக்கெட் தொடர் உலகக் கிண்ணப் போட்டிக்கு தயாராவதற்கு சிறந்ததொரு தொடராக எமக்கு அமைந்திருக்கின்றது. இதில் மூன்று போட்டிகள் நிறைவடைந் துள்ள நிலையில் இரு அணிகளுமே ஒவ்வொரு வெற்றியைப் பதிவு செய்திருக் கின்றோம். எங்களைப் பொறுத்த வரை யில் இத்தொடரை வெல்கின்றோமோ இல்லையோ இத்தொடரின் மூலம் சிறந்த அனுபவங்களைப் பெற்றுக்கொள்வோம் என்ற நம்பிக்கை இருக்கின்றது. துடுப் பாட்டம், பந்து வீச்சு என இரண்டு பிரிவு-களிலும் வீரர்கள் சிறப்பாகச் செயற்பட்டு வருகின்றனர். களத்தடுப்பில் கூடுதல் கவனம் செலுத்த வேண்டும். முதல் போட்டியில் மஹேல சதம் விளா சிய போதிலும் ஏனையவர்களால் களத் தில் நிலைத்திருக்க முடியாமையே நாங் கள் தோல்வியைத் தழுவக் காரண-மாக அமைந்துவிட்டது என இலங்கை அணியின் கப்டன் மத்தியூஸ் தெரி வித்துள்ளார்.

# இது எப்படிப்பட்ட தேவதையோ?

– துக்ளக் கட்டுரையிலிருந்து.

சிங்கள மக்களின் ஆதரவில் கிட்டத்தட்ட சரிபாதி பகுதியை சிறிசேன பெற்றிருக்கிறார். இப்படி நடந்திருக்கா விட்டால், தமிழர்கள் மற்றும் முஸ்லிம்களின் வாக்குகளை மட்டும் வைத்துக் கொண்டு அவரால் வெற்றி பெற்றிருக்க முடியாது என்பதைத் தேர்தல் முடிவுகள் காட்டுகின்றன.

தன் குடும்பத்தைச் சேர்ந்தவர்களுக்கே முக்கிய பதவிகளை அளித்து, அரசைக் குடும்ப நிர்வாகம்போல் நடத்த முனைந்து, ஊழல் புகார்களுக்கு நன்றாக இடமளித்து, பெருவாரியான மக்களின் அதிருப்தியை ராஜபக்ஷ சம்பாதித்தார்.

விடுதலைப் புலிகளை ஒடுக்கி, சாதனை புரிந்து, ஒரு பெரும் பிரச்னைக்குத் தீர்வு கண்ட ராஜபக்ஷ, தனது நிர்வாகச் சீர்கேட்டின் காரணமாக, சிங்கள மக்களின் ஆதரவிலும் கணிசமான பகுதியை இழந்ததால்தான் தோற்றிருக்கிறார்.

இப்போது வெற்றி பெற்றுள்ள சிறிசேன நமது நாட்டு வி.பி. சிங்கைத்தான் நமக்கு நினைவூட்டுகிறார். ராஜீவ் காந்தியின் அமைச்சரவையில் முக்கியமான பதவியில் இருந்து கொண்டே, அவருக்கு எதிராக வேவு பார்க்க, ஒரு அயல்நாட்டுத் துப்பறியும் நிறுவனத்துடன் மறைமுக உறவு கொண்டவர் வி.பி. சிங் ராஜீவ் காந்தியிடமிருந்து பிரிந்து பல தரப்பட்ட எதிர்க் கட்சிகளின் ஆதரவைப் பெற்று, ஓட்டுச் சிதறலைத் தடுத்து அவர் பிரதமரானார். ஆனால், இந்தச் "சாமர்த்தியமே" அவர் வீழவும், மக்களிடையே செல்வாக்கு இழக்கவும்



காரணமாயிற்று.

இதைப் போலவே சிறிசேன விஷயத்திலும் நடக்கப் போகிறதா என்பது இப்போது சொல்ல முடியாத ஒன்று. பல தரப்பட்ட கட்சிகள் அவருக்கு ஆதரவளித்துள்ளன. பாருளாதாரம் முதல் அயல்நாட்டு உறவு வரை, தமிழர்கள் பிரச்னை உட்பட - பல விஷயங்களிலும் வெவ்வேறு அணுகுமுறைகளைக் கொண்ட பல கட்சிகள், "ராஜபக்ஷ தோற்கடிக்கப்பட வேண்டும்" என்பதில் மட்டும் குறியாக இருந்து, ஓரணியில் நின்று சிறிசேன வெற்றி பெற உதவியிருக்கின்றன.

இப்படிப்பட்ட கட்சிகளை வைத்துக் கொண்டு தீர்மானமான முடிவுகளை எடுப்பது என்பது சிறிசேனவுக்குச் சிரமமாகப் போகக் கூடிய வாய்ப்புகள் நிறையவே உண்டு. இதனால் ஏற்படக் கூடிய நிர்வாகச் சிக்கல்களின் காரணமாக, அவருடைய ஆட்சி மக்களிடையே செல்வாக்கையும் இழக்கக் கூடும். ஆனால், அனுபவமும், நிதானமும் மிக்க ரணில் விக்ரமசிங்க பிரதமராகப் பொறுப்பேற்பது, சிறிசேனவுக்குப் பலம் சேர்க்கக் கூடிய விஷயம்.

இலங்கைத் தமிழர்களைப் பொறுத்தவரையில், ராஜபக்ஷ தோற்றார் என்ற திருப்தி இருக்கலாமே தவிர, தங்கள் பிரச்னைகளை எல்லாம் சிறிசேன தீர்த்து வைத்து விடுவார் என்ற எதிர்பார்ப்பு இருக்க முடியாது. அதிகாரப் பங்கீடு, தமிழர் பகுதிகளில் இருந்து இராணுவ வெளியேற்றம் போன்ற பல தமிழர்களின் கோரிக்கைகள் நிறைவேற்றப்படுகிற வாய்ப்புக் குறைவு. சிங்கள மக்களிடையே ஆதரவைப் பெருக்கிக் கொள்ள சிறிசேன முனையக் கூடும் அப்போது தமிழர்களின் கோரிக்கைகள் முன்னுரிமை பெறுவது என்பது நடக்காத காரியமாகி விடும். ஆகையால், "ராஜபக்ஷவின் தோல்வி, தமிழர்களின் வெற்றி" என்று நினைத்து விடுவது அவசர முடிவாகத்தான் இருக்கும்.

இந்தியாவைப் பொறுத்தவரையில், இலங்கையின் அணுகுமுறையில் மாற்றம் ஏற்பட வாய்ப்பு இருப்பதாகத்தான் பலர் கருத்துக் கூறியிருக்கிறார்கள். மனித உரிமைகள், போர்க் குற்றங்கள் முதலான பிரச்சினைகளைக் கையிலெடுத்து, சர்வதேச அரங்கில் இலங்கை அரசுக்குக் கடுமையான தர்மசங்கடங்களை மேலைநாடுகள் தோற்றுவித்ததும், அந்த நடவடிக்கைகளுக்கு சில சமயங்களில் இந்தியா ஆதரவளித்ததும், சீன உறவைப் பலப்படுத்திக் கொள்ள ராஜபக்ஷவைத் தூண்டின. சிறிசேனவுக்கு இந்த நிர்ப்பந்தம் கிடையாது.

# பிரபஞ்சத்தின் ஓசை!



ஜப்பானில் வாழ்ந்த ரின்சாய் அவர்கள் மிகப்பெரிய ஸென் (Zen) ஞானியாவார். இவர் போதி தர்மர் பாதையில் நடந்த மறைஞானி. இவர் சொற்கள் இல்லாமல் ஞானத்தைப் பரப்பியவர். ஜப்பானில் ரின்சாய் ஸென் தத்துவம் மிகவும் பிரபலமானது. அவற்றில் "ஒரு கை ஓசையைக் கேளுங்கள்" என்பது மிக மிகப் பிரபலமானது.

தன்னை நாடி வரும் சீடர்களுக்கு ரின்சாய் முதலில் கூறுவது "இரண்டு கைகளைத் தட்டும்போது ஓசை கிளம்புகிறது. ஒரு கையின் ஓசையை செவிமடுத்துக் கேளுங்கள்" என்பார். ஒருநாள் ஒரு சீடர் அவரிடம் வந்து தான் ஒரு கை ஓசையைக் கேட்டதாகச் சொல்ல அதை விவரிக்கச் சொல்கிறார் ரின்சாய்.

சீடன் "அது இலைகளின் ஊடே காற்று கடந்து செல்வது போன்று இருந்தது" என்கிறார். "காற்றும் இலையும் இரண்டு பொருள்கள் அவை ஒன்றல்ல" என்றார் ரின்சாய். பல மாதங்களுக்குப் பிறகு சீடன் மீண்டும் மறைஞானியைச் சந்தித்து, "கேட்டு விட்டேன். கூரையின் மீது மழைத்துளி விழும் ஓசை அது" என்றார். மறைஞானி அதையும் மறுத்தார்.

பல வருடங்கள் ஆகின. அந்தக் குறிப்பிட்ட சீடரைக் காணவேயில்லை! அந்தச் சீடரைத் தேடிக் கண்டுபிடித்து வர தனது மற்றைய சீடர்களை மறைஞானி அனுப்பினார். எங்கெங்கோ தேடி அலைந்து கடைசியில் அந்தக் குறிப்பிட்ட சீடனை அழைத்து வந்தனர். அவனைப் பார்த்ததும் ரின்சாய், "இப்போது நீர் அந்த ஓசையைக் கேட்டு விட்டீர்" என்றார்! அதற்கு அந்த சீடன், "ஆமாம்.. ஒரு கை ஓசையைக் கேட்டு விட்டேன்!" என்றான். அதற்குத் தலையை அசைத்தார். சீடன், "அது பிரபஞ்ச ஒலி. அது எவ்வித உராய்வும் இன்றி எழுகின்ற ஒலி. அது பிறப்பிடமற்றது தோற்றுவிக்கப்படாதது மனதைக் கடந்து மனமற்ற வெறுமைக்குள், மனமற்ற நிலையில், தனி ஒரு கையின் அசைவிலிருந்து வரும் ஓசையைக் கேட்டேன். கூர்மையாகக் கேட்டால் அதுபோலவே பிரபஞ்ச ஓசையும்" என்றார்.

இந்த ஒலியைத்தான் இந்துக்கள் "ஓம்" எனவும் கிறிஸ்தவர்கள் "ஆமென்" எனவும் இஸ்லாமியர்கள் "ஆமீன்" எனவும் அழைக்கின்றனரா? இதுவே உலகத்தின் பொது "ஒலி". ஆங்கிலத்தில் எங்கும் நிறைந்தவர் (ஞம்ய்ண் ல்ழ்ங்ள்ங்ய்ற்) எல்லாம் அறிந்தவர் (ஞம்ய்ண் ள்ஸ்ரீண்ங்ய்ற்) எல்லாம் வல்லவர் (ஞம்ய்ண் ல்ர்ற்ங்ய்ற்) என்று கூறும்போது அதனுள் "ஓம்", "ஆமென்", "ஆமீன்" உள்ளடங்கியிருக்கிறதுபோல் தெரிகிறது.

('அற்புதமான விஷயங்கள்' நூலில் எஸ்.குருபாதம்).

# எழுத்தாளனை இந்தச் சமூகம் எப்படி நடத்துகிறது!



எழுத்தாளனை இந்த ஊடகங்கள் எப்படி மதிக்கின்றன என்பதற்கு ஒரு உதாரணம் சொல்கிறேன். ஒரு தொலைக்காட்சியிலிருந்து எனக்கு அழைப்பு. காலையில் ஏழரை மணிக்கு நேரடி ஒளிபரப்பு. அன்றைய தினசரிகளைப் படித்து அதை அரை மணி நேரம் அலசி விமர்சிக்க வேண்டும். இதற்கு நான் காலை நான்கு மணிக்கு எழுந்து தயாராக வேண்டும். வண்டி ஐந்தரைக்கு வரும். தொலை தூரத்தில் இருக்கும் தொலைக்காட்சி நிலையத்துக்கு ஆறரைக்கு வந்து செய்தித்தாள்களைப் படித்து ஏழரைக்கு நிகழ்ச்சி. வீட்டுக்கு வந்து சேர ஒன்பதரை பத்து ஆகும். இடையில் பசி வந்து உயிர் போய் விடும். இப்படி இரண்டு வாரம் வர முடியுமா என்று கேட்டார்கள்.

ஆஹா, நம்முடைய பணப் பிரச்சினைக்கு ஒரு தீர்வு கிடைத்தது என்று எண்ணி அகமகிழ்ந்து எவ்வளவு தருவீர்கள் என்று கேட்டேன். என் கேள்வியே அவர்களுக்குப் புரியவில்லை. அப்புறம்தான் விளக்கிக் கேட்ட பிறகு அப்படியெல்லாம் தருவதில்லை என்று சொன்னார்கள். இப்படி அழைத்தால் ஓடிப் போய் நிகழ்ச்சி செய்வதற்குப் பலரும் தயாராக இருப்பதாகப் பின்னர் கேள்விப்பட்டேன். எனக்கு அப்படிப்பட்ட புகழ் தேவையில்லை.

இந்தக் காரணத்தினால்தான் தொலைக்காட்சி நிகழ்ச்சிகளை மறுதலித்து வருகிறேன். இருந்தாலும் அவ்வளவாகப் பிரபலமாகாத சனல்களில் கலந்து கொள்ளத்தான் செய்கிறேன். அங்கேயும் காசு கிடையாதுதான். ஆனாலும் கலந்து கொள்கிறேன்.

சமீபத்தில் அப்படி ஒரு சனலின் நிகழ்ச்சிக்கு அழைப்பு வந்தது. மதியம் ஒரு மணிக்கு படப்பிடிப்பு. 12 மணிக்கு வீட்டுக்குக் கார் வரும் என்றார் நிகழ்ச்சித் தயாரிப்பாளர். மனைவியிடம் மதிய உணவு வேண்டாம் என்று சொல்லி விட்டேன். ஒரு மணி வரை சத்தமே இல்லை. நானே ஃபோன் செய்தேன். இதோ அனுப்புகிறோம் என்றனர். ஒன்றரைக்கு வந்தது. இரண்டுக்கு அங்கே இருந்தேன். படப்பிடிப்பு முடிவடைய இரவு ஒன்பது ஆகியிருந்தது.

விஷயம் அதோடு நிற்கவில்லை. அடுத்த வாரம் அந்த நிகழ்ச்சி அமைப்பாளரிடமிருந்து ஃபோன். சார், அழகிய பெரியவனின் நம்பர் தர முடியுமா? கொடுத்தேன். இரண்டு நாள் கழித்து மீண்டும் அவரிடமிருந்து. சார், ஜெயமோகன் நம்பர் உங்களிடம் இருக்கா? கொடுத்தேன். அடுத்த வாரமும் ஃபோன். சார், கிராமப்புறக் கலைஞர்களின் நலிவடைந்த வாழ்க்கை பற்றி ஒரு நிகழ்ச்சி. உங்களுக்கு அப்படி யாரையாவது தெரியுமா?


நான் அப்போது சாண்டோக்ய உபநிஷதத்தை சம்ஸ்கிருதத்திலும் ஆங்கிலத்திலுமாகப் படித்து மண்டையை உடைத்துக் கொண்டிருந்தேன். நான்கு தினங்களாக அந்தப் படிப்பு ஓடிக் கொண்டிருந்தது. ஃபோனை எடுத்து அப்புறம் பண்ணுகிறேன் என்று சொல்லி வைத்து விட்டேன். இரண்டு மணி நேரம் கழித்து அவரே அழைத்தார். நான் எடுக்கவில்லை. அதோடு விடாமல் மறுநாளும் அழைத்தார். எடுத்தேன். மீண்டும் சொன்னார், நலிவடைந்த கிராமியக் கலைஞர்களின் நம்பர்.....

என் உடம்பில் உள்ள குருதி அவ்வளவும் மண்டைக்குப் போய் மண்டை வெடித்து விடுவது போல் ஆகி விட்டது. கை கால்கள் நடுங்க ஆரம்பித்து விட்டன. வந்த கோபத்தில் செத்தே போயிருப்பேன். கெட்ட வார்த்தை பயன்படுத்தவில்லை. ஒரே ஒரு கேள்விதான் நெருப்பைக் கக்குவது போன்ற தொனியில் கேட்டேன். ரஜினி, கமலிடம் இப்படிக் கேட்பீர்களா?

எழுத்தாளனை இந்தச் சமூகம் எவ்வளவு கேவலமாக நடத்துகிறது என்பதற்கு இந்தச் சம்பவங்கள் உதாரணம்.

- சாரு நிவேதிதா

# மரணதண்டனை



இலங்கையில் இன்னமும் தூக்குத் தண்டனை இருக்கிறது. ஆனால், உலகில் எழுபது நாடுகளில், தூக்குத் தண்டனை முறை ஒழிக்கப்பட்டு விட்டது. இன்னும், சில நாடுகளில் இந்தத் தண்டனை பெயரளவில் சட்டத்தில் இருக்கிறதே தவிர, மிக அபூர்வமாகத்தான் தூக்குத் தண்டனை வழங்கப்படுகிறது. கொலைக் குற்றம் ஒன்றிற்குத் தான் தூக்குத் தண்டனை விதிக்கப்படுகிறது.

கொலைக் குற்றம் புரிவோரில், 69 சதவீதம், 21லிருந்து 30 வயதுக்குட்பட்டவர்களாக இருக்கின்றனர். ஏனெனில், இந்த வயதில் தான், ஒரு மனிதனுக்கு உடல் திமிர், பால் உணர்வு, சம்பாதிக்கும் திறன், போட்டி மற்றும் பொறாமை உணர்வுகள் அதிகமாக இருக்கின்றன. பணம், பெண், பகை மற்றும் மானப் பிரச்சினை இந்த நான்கில் ஒன்று தான் பெரும்பாலும் இக்குற்றங்களுக்கு காரணமாகிறது என்கின்றனர்.

ஆனால், தூக்குத் தண்டனை என்பது, "கண்ணுக்குக் கண்" என்ற கற்கால மனிதனின் வளர்ச்சியடையாத மனோநிலையை காட்டுகிறது. ஆனால், கொலைகாரனுக்குத் தூக்குத் தண்டனை கொடுத்தால் தான், மற்றவர்கள் கொலை செய்ய அஞ்சுவர், குற்றங்கள் குறையும், என்றொரு வாதமும் உண்டு.

போர்த்துக்கல், நெதர்லாந்து, சுவீடன், சுவிட்சர்லாந்து, இத்தாலி, மேற்கு ஜெர்மனி, வெனிசுலா, இங்கிலாந்து ஆகிய நாடுகள் மற்றும் 60 சிறிய நாடுகளிலும், தூக்குத் தண்டனை ரத்து செய்யப்பட்டுள்ளது. இந்த நாடுகளில் சமீபத்தில் எடுத்த புள்ளி விவரப்படி, கொலை செய்தால் நிச்சயம் நம் உயிர் பறிபோகாது என்பதற்காக குற்றங்களின் எண்ணிக்கை கூடிவிடவில்லை.

இங்கிலாந்தில் டிமோத்தி என்பவன் தன் மனைவியைக் கொலை செய்துவிட்டான் என்று தூக்கில் போட்டனர். அவன் நண்பன் ஜோன் கிறிஸ்டியின் சாட்சியமே இந்த தண்டனைக்கு காரணம்.


பின் வேறொரு வழக்கில் ஜோன் கிறிஸ்டி கைதானபோது, டிமோத்தியின் மனைவியை அவன் தான் கொன்றான் என்ற உண்மை தெரிய வந்தது. கிறிஸ்டி தூக்கிலிடப்பட்டான். ஆனால், குற்றம் செய்யாத டிமோத்தியின் உயிரும் பறிக்கப்பட்டு விட்டதே!

# பெர்னார்ட்ஷோவும் நாடகமும்

ஆண்டிற்கு ஒரு நாவல் வீதம் 5 நாவல்கள் மட்டும் எழுதிய பெர்னார்ட்ஷோ நாவல் எழுதுவதை விட்டுவிட்டு 1890 இல் நாடகம் எழுத ஆரம்பித்தார்.

அவருடைய முதல் நாடகம் (Widower's House) மனைவியை இழந்தவரின் வீடு. 1892இல் நடிக்கப்பட்ட இந்நாடகம் தோல்வியைத் தழுவியது.

அதே ஆண்டில் வெளிவந்த (Mrs. Warren's Profession) "வோரன் அம்மையாரின் தொழில்" என்னும் நாடகம் "நடிக்கப்படக் கூடாது" என இங்கிலாந்தில் தடை விதிக்கப்பட்டது.



அமெரிக்காவிலோ அதைப் படித்தவர்கள் மேல் வழக்குத் தொடரப்பட்டது.

1894ஆம் ஆண்டில் அவர் எழுதி வெளிவந்த (Candida) "காண்டிடா" என்னும் நாடகம்தான் முதன்முதலாக நாடகமேடையில் அவருக்கு வெற்றியைத் தேடித்தந்ததாகும். இது ஜெர்மனியில்.

அதன் பிறகு அமெரிக்கா இந்த நாடகக் கலைஞரை போற்றத் தொடங்கியது.

ஆனால் 1903இல் (Man and superman) "மனிதனும் உயர்நிலை மனி தனும்" என்னும் நாடகம் மேடைக்கு வந்த பிறகே இங்கிலாந்திலும் அவர் வெற்றியைக் காண முடிந்தது.


(மு.வ. எழுதிய 'அறிஞர் பெர்னார்ட்ஷா' நூலிலிருந்து)

# ஆரோக்கியம் தரும் பழங்கள்

- அப்பிள் பழத் துண்டுகளைத் தேனில் ஊற வைத்துச் சாப்பிட்டால், கண்கள் பிரகாசம் அடையும்.
- அத்திப் பழத்தின் விதைகளைத் தனியாக எடுத்து உலர்த்தி, தூளாக்கி தேனில் கலந்து காலை, மாலை சாப்பிட்டு வந்தால் நீரிழிவு நோய் குணமாகும்.
- விளாம் பழத்தை வெல்லத்துடன் சேர்த்துச் சாப்பிட, வெள்ளைபடுதல் நிற்கும்.
- வில்வப் பழ ஓட்டை எடுத்துக் கடைந்து கஷாயம் வைத்து, தேன் கலந்து சாப்பிட்டால், சீத பேதி குணமாகும்.
- முலாம் பழம் சாப்பிட, சிறுநீர் சம்பந்தப்பட்ட அனைத்து நோய்களும் குணமாகும்.
- மஞ்சள் காமாலை உள்ளவர்கள், பம்ப்ளிமாசுப் பழத்தைத் தொடர்ந்து சாப்பிட்டால் நல்ல குணம் தெரியும்.



('சுவையான கனிகளிலே மருத்துவம்' நூலிலிருந்து.)



# எட்டென்ன எண்ணூறு நாளைக்கும் புளுகலாம்...

## வெளிவாயன் வேலாயுதன் சொல்லுவது....

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு மைத்திரிபால சிறிசேனவை ஆதரிக்க முடிவெடுத்த போது அதுக்கு ஓமெண்டு தலையாட்டாத ஒருவர், அது தொடர்பான பேச்சுவார்த்தையளிலை கலந்து சனங்களுக்கு தனது இமேஜைக் குறைக்கக் கூடாது எண்ட நோக்கோடை விலகி நிண்ட ஒருத்தர், அதேவேளை அனந்தி மாதிரி முந்திரிக்கொட்டையாய் நிண்டு எதிர்க்காத ஒருவர் – அவர்தான் சாணக்கியர் சுரேஸ் பிரேமச்சந்திரன்.

கொஞ்ச நாளைக்கு முந்தி கூட்டமைப்பை அரசியல் கட்சியாகப் பதிவு செய்ய தமிழரசுக் கட்சித் தலைமைக்கு அழுத்தம் குடுங்கோ எண்டு சனங்களைக் கூவி அழைச்சதும் இவருடைய வாய்தான். தமிழரசுக் கட்சி கூட்டமைப்பைப் பதிவு செய்தாலென்ன செய்யாட்டால் என்ன சுரேஸ் அதிலையிருந்து விலகி ஈ.பி.ஆர்.எல்.எப். கட்சியிலை எலெக்சனிலை நிக்கவே மாட்டார். நிண்டால் ஒரு நூறு வோட் கூடக் கிடைக்காது எண்டது அவருக்கு மட்டுமில்லை விரல் சூப்பிற சின்னப் பிள்ளைக்கும் தெரியும்.

இப்ப தமிழற்றை வோட்டாலை மைத்திரி வெண்டிட்டார் எண்டவுடனை நடக்கிற பேச்சுவார்த்தையளிலை அவருடைய முகம் தெரியுது. சுளையாய் கொஞ்சம் கிடைச்சதோடை ஆனந்தம் சேர்ந்திட்டுது. உடனை ஒரு இளம் பெடிப் பத்திரிகையாளனைக் கூப்பிட்டு, ஒரு பார்சல் புரியாணி குடுத்து ஆனந்தப்படுத்திப் போட்டு ஒரு கருத்தைச் சொல்லியிருக்கிறார்.

சுரேஸ் சொல்லுறார்: டக்ளஸ் அமைச்சுப் பதவி கிடைக்கும் எண்டு நினைச்சு அரசாங்கத்திலை ஒட்ட நினைக்கிறார். அது நடக்காதாம். டக்ளஸ் புதிய அரசாங்கத்தின்ரை நூறு நாள் வேலைத்திட்டத்துக்கு வெளியிலை இருந்து ஆதரவு தருவம் எண்டு அறிவிச்சாப் பிறகு இப்பிடிச் சுரேஸ் சொல்லுறது ஒருபுறம் இருக்கட்டும்.

டக்ளஸ் இணக்க அரசியல் எண்டு பிரேமதாச, சந்திரிக்கா, மகிந்த அரசாங்கங்களிலை இருந்தது சுரேசுக்குத் தெரியாதே! அதே ரணில், சந்திரிகா, மைத்திரியோடை இருந்த நல்லுறவு திடுதிப்பென இல்லாமல் போகும் எண்டு யோசிக்கிறாரோ?

சரி, போகட்டும். சுரேஸ் எப்பிடி இருந்தார்? இந்தியன் ஆமிக் காலத்திலை எத்தினை அப்பாவி இளைஞர்களின்ரை உயிர்போகக் காரணமாய் இருந்தவர்.... எந்தக் கங்கையிலையும் கழுவ முடியாத இரத்தக் கறையைத் தன்னிடத்தை கொண்டிருக்கிற சுரேஸ் எப்பிடி நாடகமாடலாம்?

அப்ப புலியளின்ரை கொலைப் பட்டியலிலை இருந்த சுரேசும், செல்வமும், சித்தரும், மாவை, சம்பந்தரும் இண்டைக்குப் புலியளின் பிரதிவிம்பமாய் காட்டப் படாதபாடு படுறதை நினைக்க அழுவதா? சிரிப்பதா?

மகிந்தவின் சர்வாதிகார ஆட்சிக்குத் துணைபோன தமிழினத் துரோகிகளான டக்ளஸ், கருணா, பிள்ளையான், றிசாத் பதியுதீன் ஆகியோருக்கு அமைச்சுப் பதவி வழங்கக்கூடாது எண்டதே இவையின்ரை பிரதானமான கோரிக்கை பாருங்கோ! சுட்டுவிரல் காட்டி இவை சொல்லேக்கை நாலு விரலும் இவையைத்தான் நோக்குது.

ரணிலை வர விடாமல் எலெக்சனைப் பகிஸ்கரிக்க வச்சது யார்? அதுக்குப் பிரதியுபகாரமாக எவ்வளவு பணமும் சாதனங்களும் வழங்கப்பட்டன? அதை ஆமோதிச்சு வக்காலத்து வாங்கினது யார்? எண்டு ஆராவது சுயமாய் யோசிச்சுக் கேள்வி எழுப்பினீங்களெண்டால் இந்தக் கூட்டமைப்பாற்றை முகமூடி கிழிஞ்சிடும்.

வாக்களிக்கப் போன கிழவனுக்கு வாளாலை வெட்டினது, வாக்களிச்ச மேலதிக அரச அதிபர் வைத்திலிங்கத்தின்ரை வீட்டை அடிச்சு நொருக்கி அச்சுறுத்தினது எல்லாம் மெல்லக் கனவாய் பழங்கதையாய்ப் போச்சுது.

தங்கடை பிள்ளையளுக்கு இந்தியாவிலை படிக்க அரச கோட்டாவை இதே மகிந்தவிடமிருந்து வாங்கினது கூட எங்கடை தமிழ்த் தலைவர்களுக்கு ஞாபகத்திலையிருந்து அழிஞ்சு போச்சுது.

சந்திரிகா அரசாங்கத்திலை மகிந்த ராஜபக்ச மீன்பிடித்துறை அமைச்சராய் இருந்தவர். அந்த அமைச்சிலை மீனைப் பற்றி ஒண்டுமே தெரியாத சுரேஸ் பிரேமச்சந்திரன் ஆலோசகராய் மகிந்தவாலை நியமிக்கப்பட்டு இருந்த அந்தத் தேனிலவுக் காலம் கூட நினைவிலையிருந்து அழிஞ்சு போச்சுதா?

சாராயக் கடைக்கான பெர்மிட்டுகளை கைலாயத்திலையிருந்து சிவபெருமான் கொண்டு வந்து குடுத்தவரோ? ஈஸ்வரா... யேசப்பா... பாவியளை மன்னிச்சருளும்.



சுரேஸ் அவர்களே! உங்கடை கோரிக்கையளிலை ஒண்டு துரோகி றிசாத்துக்கு அமைச்சுப் பதவி குடுக்கக் கூடாது எண்டது. அது நடக்கேல்லை. நடக்கவும் மாட்டுது. என்ன செய்யப் போறியள்? வடமாகாண சபைக்கு தமிழ் ஆளுநர்தான் வேணும் எண்டு அடம்பிடிச்சியள். இப்ப பளிகக்காரவை ஜனாதிபதி நியமிச்சிருக்கிறார். என்ன செய்ய உத்தேசம் எண்டு யோசிச்சன். போராட்டத்திலை குதிப்பினமோ எண்டும் பயந்து போனன். மீசையிலை மண் படாமல் வரவேற்றிருக்கிறியள்.

பயப்பிடாதையுங்கோ. கெட்டிக்காரன் புளுகு எட்டு நாளைக்கு என்பினை. சனங்கள் சரியாய் சிந்திக்க நாளெடுக்கும் எண்டால் எட்டென்ன எண்ணூறு நாளைக்கும் புளுகலாம். மகா ஜனங்கள் தலையாட்டுவார்கள்.






யாழ். ஸ்ரான்லி வீதி இலங்கைவங்கி கிளையில் இளைப்பாறிய த.சிறிஸ்கந்தராசாவுக்கு யாழ். இலங்கை வங்கி கிளையில் பிரியாவிடை விழா நேற்று முன்தினம் நடைபெற்றபோது சிறிஸ்கந்தராசாவுக்கு வங்கியின் முகாமையாளர்கள் ஊழியர்கள் பொன்னாடை போர்த்தி விருதுகள் வழங்கி கௌரவிப்பதையும் கலந்து கொண்ட வர்களையும் காணலாம். (105)

# கிராமப்புறங்களில் பொங்கல் நிகழ்வுகள் பண்பாட்டை எடுத்துக்காட்டுகின்றன

## வடமாகாண சுகாதார அமைச்சர் தெரிவிப்பு

(வவுனியா)

கிராமப்புறங்கள் மற்றும் பின் தங்கிய பிரதேசங்களில் தமிழர் பண்பாடுசார் விழுமியங்களை எடுத்தியம்பும் வகையில் பொங்கல் நிகழ்வுகள் மற்றும் இதர பண்டிகைகள் கொண்டாடப் படுவது வரவேற்கத்தக்கதாகும். அத்துடன் இத்தகைய நிகழ்வுகள் அம்மக்களை மகிழ்ச்சிப்படுத துவதாக அமையும் என வட மாகாணசுகாதாரத் துறை அமைச சர் ப. சத்தியலிங்கம் தெரிவித் தார்.

வவுனியா நீலியா மோட்டை, கிராமத்தில் 'தமிழ் விருட்சம்' சமூக ஆர்வலர்களின் ஏற்பாட்டில் கடந்த வியாழக்கிழமை இடம் பெற்ற பொங்கல் விழாவில் பிரதம விருந்தினராக கலந்து கொண்டு உரையாற்றும் போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.



அத்துடன் விருட்சத்துக்கு அனுசரணை வழங்கிய நியூசிலாந்து ஸ்ரீகணேசா ஆலய சந்துரு குருக்கள் இவாசு குருக்கள் ஆலய பொறுப்பு சபை உறுப்பினர் ரா.பாலராஜா ஆகியோருக்கும் நன்றியையும் தெரிவித்து கொண்டதோடு நீலியாமோட்டை உட்பட அனைத்து தமிழ் மக்களுக்கும் பொங்கல் வாழ்த்தையும் தெரிவித்துக் கொண்டார்.

அதன் பின்னர் இளைஞர்கள் தமது பிரச்சினைகளையும் மக்கள் தமது போக்குவரத்து, அடிப்படைத் தேவைகள் சுகாதார வசதிகள் குடி தண்ணீர் உட்பட்டசகல பிரச்சினைகளையும் சுகாதார அமைச்சரிடம் தெரிவித்தனர்.அவற்றுக்கு தான் மாகாணசபை மற்றும வவுனியா உறுபினர்களுடன் கதைத்து விரைவில் தீர்வு காண்பதாக உறுதி அளித்தார். (70)

# கிராமிய குடிநீர் விநியோகம் யாழ். மாவட்டத்தில் விரைவில்

(யாழ்ப்பாணம்)

யாழ். மாவட்டத்தில் உள்ள சாவகச்சேரி, சங்கானை ஆகிய பிரதேச செயலாளர் பிரிவுகளுக்கு உட்பட்ட பிரதேசங்களில் கிராமிய மட்ட குடிநீர்த் திட்டம் அபிவிருத்தி தேவையின் முன்னுரிமை கருதி மேற்கொள்ளப்பட உள்ளது.

வேள்ட்விசன் நிறுவன செயற்பாட்டு முகாமையாளர் ஆர்.ஜெலாட் அன்ரனி இதனைத் தெரிவித்துள்ளார். கடந்த காலங்களில் மேற்படி சாவகச்சேரி - சங்கானை பிரதேசஙகளுக்கு உப்பட்ட உள்ளூராட்சி சபைகளினால் மக்கள் பங்கேற்பு திட்டத்தில் முன்னுரிமைப் படுத்தப்பட்ட திட்டத்தில் குடிநீர் இன்றி மக்கள் அவஸ்தைப்படுவது இனம் காணப்பட்டுள்ளது.

இதனடிப்படையில் 2015 இல் மேற்படி உள்ளூராட்சி சபைக்குட்பட்ட குடிதண்ணீர் மிகவும் தேவைப்படும் மக்களுக்கு குடிதண்ணீர் வழங்க நிதியேற்பாடு செய்யப்பட்டுள்ளதாகவும், இச்செயற்பாடு படிப்படியாக முன்னெடுக்கப்படும் எனவும் அவர் மேலும் தெரிவித்தார்.

# உழுந்து செய்கை பாதிப்பு நிவாரணம் வழங்க கோரிக்கை

(வவுனியா)

வவுனியாவில் உழுந்து செய்கை பாதிக்கப்பட்டதனால் நிவாரணங்களைப் பெற்றுத் தருமாறு விவசாயிகள் கோரிக்கை விடுத்துள்ளனர். வவுனியா மாவட்டத்தில் உழுந்து செய்கை மிக மோசமாக பாதிப்படைந்த நிலையில், தமக்கு நிவாரணங்களை பெற்றுத்தர விவசாய திணைக்களம் நடவடிக்கை எடுக்க வேண்டும் என விவசாயிகள் கேட்டுக் கொண்டுள்ளனர்.

வவுனியா மாவட்டத்தில் உழுந்து செய்கை பிரதான சிறுதானிய செய்கையாக மேற்கொள்ளப்பட்டு வருகின்றது. இந்நிலையில், கடந்த மாதம் பெய்த தொடர்ச்சியான மழையின் காரணமாக உழுந்து செய்கை முற்றாக பாதிப்படைந்துள்ளதாக விவசாயிகள் தெரிவிக்கின்றனர்.

வெள்ளம் காரணமாக மக்கள் இடம்பெயர்ந்து இருந்தமையால், சிறந்த பராமரிப்பின்றி உழுந்து செய்கை பெரும் பாதிப்பை எதிர்கொண்டுள்ளது. இதனால் வாழ்வாதாரம் பாதிக்கப்பட்டுள்ள நிலையில், உரிய நிவாரணங்களைப் பெற்றுத்தர விவசாயிகள் வலியுறுத்தி வருகின்றனர்.

# கால்கோள் விழா

(யாழ்ப்பாணம்)

ஏழாலை புனித இசிதோர் றோமன்கத்தோலிக்க பாடசாலையில் புதிதாக தரம் 1இல் இணைத்துக்கொள்ளப்படவுள்ள மாணவர்களை வரவேற்கும் கால்கோள் விழா இன்று மு.ப.10 மணிக்கு நடைபெறவுள்ளது.

இந்நிகழ்வில் பிரதம விருந்தினராக வலிகாம வலய உடற் கல்வி உதவிக்கல்விப் பணிப்பாளர் கோ. குலபாலசிங்கம் கலந்து கொள்ளவுள்ளார்.

# மாணவர்களின் கல்விக்கு இளைஞர் உதவி



(தென்மராட்சி)

கல்வியை தொடர்வதற்கு சிரமமுறும் மாணவர்களுக்கு உதவி செய்யும் நன்நோக்கத்தோடு,யாழ்ப்பாணம் சாவகச்சேரியைச் சேர்ந்த சிறிதரன் புவிசுதேஸ் என்ற இளைஞர், தமிழர் முன்னேற்றக் கழகம் முன்னெடுத்து வரும் இலவச அப்பியாசக் கொப்பிகள் மற்றும் புத்தகப் பை வழங்கும் திட்டத்திற்கு தன்னுடைய பங்களிப்பினை செய்துள்ளார். 2015 ஆம் ஆண்டின் கருப் பொருளான பாடசாலை மாணவர்களின் கல்விக்கு கைகொடுப்போம் என்ற எண்ணக் கருவிற்கு மேலும் வலுசேர்க்கும் வகையில் இவ் இளைஞரின் செயற்பாடு அமைந்துள்ளதாக தெரிவிக்கப்படுகிறது. இவரது இந்தத் தன்னார்வ முயற்சியை பாராட்டுவதுடன் இவரால் புத்தகப் பைகள், அப்பியாசக் கொப்பிகள் என்பன எம்மிடம் கையளிக் கப்பட்டன. குறித்த அன்பளிப்பு பொருட்கள் தேவையான மாணவர்களுக்கு எதிர்வரும் வாரம் கையளிக்கப்டும் என தமிழர்முன்னோற்ற கழகம் தெரிவித்துள்ளது. (11)

# பஸ்தரிப்பிடம் அமைக்கப்படவில்லை சிரமத்தை எதிர்நோக்கும் பயணிகள்

(கிளிநொச்சி)

கிளிநொச்சி மாவட்டத்தின் நகரப்பகுதியில் பயணிகளுக்கான பஸ்தரிப்பிடம் அமைக்கப் படாமையால் உள்ளூர் மற்றும் வெளியூர் பிரதேசங்களுக்கு பயணத்தை மேற்கொள்ளும் மக்கள் சிரமங்களை எதிர்நோக்குவதாக விசனம் தெரிவிக்கப்படுகிறது.

வெளிமாவட்டங்களுக்கான போக்குவரத்து சேவைகள் ஆரம்பிக்கப்பட்டு நீண்டகாலமாகியும் இதுவரை இப்பகுதியில் பஸ் தரிப்பிடம் அமைக்கப்படவில்லை என பயணிகள் சுட்டிக்காட்டுகின்றனர்.

மேலும் பஸ்தரிப்பிடம் இல்லாது பயணிகள் வெயிலிலும் மழையிலும் நின்று பயணத்தை மேற்கொள்வதாகவும் சிலவேளைகளில் கடைகளுக்கு முன்பாக நின்று பேருந்தை தவறவிடும் சந்தர்ப்பங்களும் இடம்பெறுவதாக பயணிகள் சுட்டிக்காட்டுகின்றனர்.

கிளிநொச்சி நகரப்பகுதியில் யாழ்ப்பாணம் மற்றும் தென்னிலங்கைக்கான போக்குவரத்து சேவைகளுக்காக பேருந்துகள் தரித்து நிற்கின்ற நிலையில் இதனூடாக பயணத்தை மேற்கொள்வோர் சற்று நேரம் இளைப பாற முடியாது சிரமங்களை எதிா நோக்குவதாகவும் தெரிவிக்கின்றனர்.

இதேவேளை பஸ்தரிப்பிடம் அமைக்கப்படவேண்டும் என பல தரப்பினரிடம் கோரிக்கை முன் வைக்கப்பட்டதாகவும் எனினும் இதுவரை அதற்கான எவ்வித நடவடிக்கையும் மேற்கொள்ள வில்லை என தெரிவிக்கும் பயணிகள் இது தொடாபில் உரியவர்கள் கவனம் செலுத்த வேண்டும் என கோரிக்கை விடுக்கின்றனர்.

# சிறந்த பெறுபேறு



(முல்லைத்தீவு)

முல்லைத்தீவு ஐயன்கன் குளம் அ.த.க. பாடசாலையில் 2 மாணவர்கள் க.பொ.த. உயர்தரப் பரீட்சையில் சித்தி பெற்றுள்ளனர்.

கலைப்பிரிவில் கணேஷமூர்த்தி பானுதீபன் என்ற மாணவன் 3ஏ பெறுபேற்றை பெற்று மாவட்ட நிலையில் 7ஆம் இடத்தையும் அதேபிரிவில் விக்னேஸ்வரன் சஜீபா என்ற மாணவி ஏ.2பி பெறுபேற்றைப் பெற்று மாவட்ட நிலையில் 31ஆம் இடத்தையும் பெற்று பாடசாலைக்கு பெருமை சேர்த்துள்ளனர். (81)

# புலமைப்பரிசில் பரீட்சையில் மாற்றம் செய்யப்படமாட்டாது

## தேசிய கல்வி ஆணைக்குழு தெரிவிப்பு

தரம் 5 புலமைப் பரிசில் பரீட்சையில் இந்த ஆண்டில் மாற்றங்கள் செய்யப்படமாட்டாது என தேசிய கல்வி ஆணைக்குழு அறிவித்துள்ளது.

தரம் 5 புலமைப் பரிசில் பரீட்சை வினாத்தாள்களில் திருத்தம் கொண்டுவர திட்டமிடப்பட்டிருந்தது பகுதி ஒன்று பகுதி இரண்டு என வழங்கப்பட்ட பரீட்சை வினாத்தாள்களை ஒரே வினாத்தாளில் வழங்க உத்தேசிக்கப்பட்டிருந்தது. எனினும் இந்த உத்தேச திட்டம் இந்த ஆண்டில் நடைமுறைப்படுத்தப்படமாட்டாது என தேசிய கல்வி ஆணைக்குழு அறிவித்துள்ளது.

ஒன்றரை மணித்தியாலத்திற்கு காலத்தை வரையறை செய்து ஒரு வினாத்தாள் வழங்குவதற்கான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு வந்தன. எனினும் பரீட்சை முறைமையில் காணப்படும் சில பிரச்சினைகள் குறித்து சுட்டிக்காட்டப்பட்டதனைத் தொடர்ந்து இந்தப்புதிய திட்டத்தை அமுலபடுத்தும் நடவடிக்கை இடைநிறுத்தப்பட்டுள்ளது.

ஒன்றரை மணித்தியாலங்கள் தொடர்ச்சியாக பரீட்சை எழுதுவது மாணவர்களுக்கு சிரமமானது எனவும் சிறிய இடைவேளை வழங்கப்பட வேண்டுமெனவும் ஆசிரியர்கள் பரிந்துரை செய்துள்ளனர்.

இந்தப் பரிந்துரை உள்ளிட்ட ஏன்னைய சில விடயங்கள் குறித்து ஆராய்ந்து திருத்தங்களுடன் அடுத்த ஆண்டில் புதிய திட்டம் நடைமுறைப்படுத்தப்படும் என பரீட்சைகள் ஆணைக்குழு அறிவிததுள்ளது.

## எம்.ஜி.ஆரின் பிறந்த தினம்

மறைந்த முன்னாள் தமிழக முதல்வர் எம்.ஜி.ராமச்சந்திரனின் (எம்.ஜி.ஆர்) 98 ஆவது பிறந்த நாள் நிகழ்வு நேற்றுமுன்தினம் மாலை வல்வெட்டித்துறையில் இடம்பெற்றது.

இந்த நிகழ்விற்கு சிறப்பு விருந்தினராக வடமாகாணசபை உறுப்பினர் சர்வேஸ்வரன் கலந்து கொண்டார்.

வல்வை ஆலடிப் பகுதியில் அமைந்துள்ள எம்.ஜி.ஆர் சிலையின் அருகே மங்கள விளக்கேற்றலுடன் ஆரம்பமான இந் நிகழ்வில் எம்.ஜி.ஆர் இன் படம் திரைநீக்கப்பட்டு மலர் மாலை அணிவிக்கப்பட்டதுடன் கேக் வெட்டப்பட்டு இனிப்பு மற்றும் சிறுவர்களுக்கு பரிசில்களும் வழங்கப்பட்டன.

மேலும் சில சிறப்பு நிகழ்ச்சிகளுடன், இளைஞர்களின் சிலம்பாட்டமும், எம்.ஜி.ஆர் அவர்களின் உலகம் சுற்றும் வாலிபன் படமும் திரையிடப்பட்டமை குறிப்பிடத்தக்கது.

## ஆடுகளை கடித்துக்கொல்லும் கட்டாக்காலி நாய்கள்

(அச்சுவேலி)

அச்சுவேலியில் வளலாய், தம்பாலை ஆகிய பகுதிகளில் மேய்ச்சலுக்காக கட்டிவிடப்படும் ஆடுகளை கட்டாக்காலிகளாகத் திரியும் நாய்கள் கூட்டமாகச் சென்று கடித்துக்கொன்று, விடுவதாகத் தெரிவிக்கப்படுகின்றது.

தற்போது இப்பகுதிகளில் இராணுவக்காவலரண்கள் அகற்றப்பட்ட நிலையில் இராணுவத்தினரால் வளர்க்கப்பட்டுவந்த நாய்களே இவ்வாறு வளர்ப்பு ஆடுகளை கடித்து வருகின்றன. இதனால் தமக்கு பாரிய நஷ்டமேற்படுவதாகவும் பல்வேறு கஷ்டத்தின் மத்தியில் பராமரித்து வரும் தமது வளர்ப்பு மிருகங்கள் ஒருநொடிப்பொழுதில் நாய்களுக்கு இரையாவதையிட்டு அப்பகுதி மக்கள் கவலைதெரிவித்துள்ளனர்.

மேலும் சந்தைப்பகுதி, கடை என பொதுமக்கள் கூடும் இடங்களிலும் நாய்களின் நடமாட்டம் காணப்படுவதால் தாம் பல்வேறு இடையூறுகளை இதனால் சந்திப்பதாகவும் தெரிவிக்கின்றனர்.

எனவே கட்டாக்காலி நாய்களின் நடமாட்டத்தை இப்பகுதிகளில் கட்டுப்படுத்த சம்பந்தப்பட்ட தரப்பினர் நடவடிக்கை மேற்கொள்ள வேண்டும். எனவும் பொதுமக்கள் கோரிக்கை விடுத்துள்ளனர்.

(85)

## கால்கோள்விழா

கீரிமலை நகுலேஸ்வர மகா வித்தியாலயத்தின் கால்கோள் விழா இன்று காலை 9 மணிக்கு பாடசாலை மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

அதிபர் த.தயானந்தன் தலைமையில் நடைபெறும் இந்நிகழ்வில் பிரதம விருந்தினராக வலிகாமம் பிரதிக் கல்விப் பணிப்பாளர் எஸ். கந்தசாமி, சிறப்பு விருந்தினராக வலிகாமம் உதவிக் கல்விப்பணிப்பாளர் திருமதி றூ.உதயரட்ணம் ஆகியோர் கலந்து கொள்ளவுள்ளனர்.

□ □ □

வவுனியா சி.சி.ரி எம்.எஸ்.பாடசாலையின் முதலாண்டு மாணவர்களை வரவேற்கும் கால்கோள் விழா இன்று காலை 8.30 மணிக்கு நடைபெறவுள்ளது.

அதிபர் எஸ்.பஸ்தியாம் பிள்ளை தலைமையில் நடைபெறவுள்ள இந்நிகழ்வில் பிரதம விருந்தினராக உதவிக்கல்விப் பணிப்பாளர் சிதம்பரப்பிள்ளை கணேசபாதம் கலந்து கொள்ளவுள்ளார்.

## மாணவர்கள் கௌரவிப்பு



(கிளிநொச்சி)

புலமைப்பரிசில் பரீட்சையில் சித்தியடைந்த மாணவர்களுக்கு சுவிஸ் எஸ்.கதிர்காமநாதன் பணப்பரிசில் வழங்கிக் கௌரவித்துள்ளார்.

தைத்திருநாளை முன்னிட்டு கிளிநொச்சி மாவட்டம் மலையாளபுரம் பகுதியிலுள்ள அம்மன் ஆலயத்தில் மூன்றாவது வருடமாகவும் 1008 பானைகளில் பொங்கல் பொங்கும் விழா நடைபெற்றது.

இந்த நிகழ்வில் கிளிநொச்சி மற்றும் முல்லைத்தீவு மாவட்டங்களில் கடந்த ஆண்டு தரம் 5 புலமைப்பரிசில் பரீட்சையில் மாவட்ட ரீதியில் அதிகூடிய புள்ளிகளைப் பெற்ற 7 மாணவர்களுக்கு தலா 50ஆயிரம் ரூபா வீதமும், இம்மாணவர்களுக்கு கற்பித்த ஆசிரியர்களுக்கு தலா 25 ஆயிரம் ரூபா வீதமும் எஸ்.கே. முதியோர் இல்ல நிறுவுநர் எஸ்.கதிர்காமநாதன் ஆகியோரால் பணத்தொகை வழங்கிக் கௌரவிக்கப்பட்டது.




## அரச கரும மொழிகள் போதனாசிரியர்கள் (சிங்களம், தமிழ்)

அரச கரும மொழிகள் திணைக்களத்தினால் அரச கரும மொழிகள் போதனாசிரியர் பதவிகளுக்கு சிங்களம், தமிழ் பாடங்களுக்கு பகுதி நேர அடிப்படையில் ஆட்சேர்த்துக்கொள்வதற்காக

சிங்கள அரசாங்க உத்தியோகத்தர்களுக்கு இரண்டாம் மொழியாக தமிழ் மொழியை கறபிப்பதற்காகவும் , தமிழ் அரசாங்க உத்தியோகத்தர்களுக்கு இரண்டாம் மொழியாக சிங்கள மொழியை கற்பிப்பதற்காகவும் போதிய தகைமைகளையுடைய அரசாங்க உத்தியோகத்தர்களை அரச கரும மொழிகள் போதனாசிரியர்களாக பகுதி நேர அடிப்படையில் ஆட்சேர்ப்புச் செய்வதற்கான விண்ணப்பங்கள் கோரப்பட்டுள்ளன.

விண்ணப்பதாரிகள் எதிர்வரும் பெப்ரவரி மாதம் 9 ஆம் திகதிக்கு முன்னர் கிடைக்கக்கூடியதாக அரச கரு மொழிகள் ஆணையாளர், அரச கரும மொழிகள் திணைக்களம் றாஜகிரிய என்ற முகவரிக்கு பதிவுத் தபாலில் அனுப்பி வைக்கப்படுதல் வேண்டும்.

விண்ணப்பிக்கும் கடித உறையின் இடது பக்க மேல் மூலையில் 'அரச கரும மொழிகள் போதனாசிரியர் பதவிக்கு பகுதி நேர அடிப்படையில் ஆட்சேர்ப்புச் செய்தல் - 2015' எனத் தெளிவாகக் குறிப்பிடுதல் வேண்டும்.

எழுத்துப் பரீட்சை, விணணப்பிக்கும் அரச கரும மொழிகள் போதனாசிரியர் பதவிக்குரிய மொழி தொடர்பாக அரச கரும மொழிகள் திணைக்களத்தினால் கொழும்பில் நடாத்தப்படும் மூன்று மணித்தியால எழுத்துப் பரீட்சைக்கு விண்ணப்பதாரிகள் தோற்ற வேண்டும். அவ்வினாப்பத்திரமானது மொழி அறிவு, உரையாடலொன்றை அமைத்தல், மொழி

பெயர்ப்பு, சுருக்கம் மற்றும் கட்டுரை ஆகிய பகுதிகளை உள்ளடக்கியிருக்கும்.

விண்ணப்பிக்கும் அரச கருமமொழியில் கற்பிக்கும் திறமையை மதிப்பிடுவதன் பொருட்டு வாசிப்பு, பேச்சு மற்றும் கேட்டல் ஆகிய பகுதிகள் அடங்கிய வாய்மூலப் பரீட்சைக்குத் தோற்றல் வேண்டும். இதன்போது விண்ணப்பதாரியின் மற்ற அரச கரும மொழித்தேர்ச்சி குறித்தும் மதிப்பீடு செய்து விண்ணப்பதாரிகளின் ஆளுமை, பொது மக்கள் தொடர்பு ஆகியன தொடர்பாகவும் கவனிக்கப்படும் எனவும் அறிவிக்கப்பட்டுள்ளது.

இதன் மேலதிக தகவல்களை கடந்த 16.01.2015 ஆம் திகதி வெளியாகிய அரச வர்த்தமானியல் பார்வையிட்டுக் கொள்ள முடியும்.

## தொழில்நுட்ப கல்லூரிகளுக்கு மாணவர்கள் அனுமதி

நாட்டிலுள்ள தொழில்நுட்பக் கல்லூரிகளில் நடாத்தப்படும் தேசிய தொழில் தகைமை மட்டம் 5 டிப்ளோமா கற்கை நெறிகளுக்கு மாணவர்களை அனுமதிப்பதற்காக தகைமையுடைய விண்ணப்பதாரிகளிடமிருந்து விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

விண்ணப்பதாரிகள் தமது விண்ணப்பங்களை எதிர்வரும் 23 ஆம் திகதிக்கு முன்னர் கிடைக்கக்கூடிய வகையில் உரிய தொழில்நுட்பக் கல்லூரியின் பணிப்பாளருக்கு அனுப்பி வைத்தல் வேண்டும்.

விண்ணப்பிக்கும் கடித உறையின் இடதுபக்க மேல் மூலையில் விண்ணப்பிக்கும் கற்கை நெறியின் பெயர், அதன் குறியீட்டு இலக்கம் என்பன குறிப்பிடப்படுதல் வேண்டும்.

பகுதி நேரம் அல்லது மாலை நேர கற்கை நெறிகளுக்கு ஒரு வருடத்திற்கு 2 ஆயிரம் ரூபா அறவிடப்படும்.

தகுதியான பரீட்சார்த்திகள் ஒரு பொது உளச்சார்புப் பரீட்சை அல்லது நேர்முகப் பரீட்சைப் பெறுபேறுகள் மூலமும் தெரிவு செய்யப்படுவர்.

ஏதாவது ஆவணங்களையோ அல்லது அவற்றினது பிரதிகளையோ விண்ணப்பப்படிவத்துடன் சமர்ப்பிக்கக்கூடாது. தமது தகைமையை நிரூபிப்பதற்கு தேவையான ஏற்கக்கூடிய ஆவணங்களை நேர்முகப் பரீட்சையின்போது வழங்கத் தவறும் விண்ணப்பதாரிகள் தகைமையற்றவர்களாகக் கருதப்படுவர்.

முழு நேரக் கற்கை நெறிகளைத் தொடரும் மாணவர்களுக்கு தமது குடும்ப வருமான நிலைமைகளுக்கேற்ப கல்லூரிவகுப்புக்களுக்குச் சமுகமளிக்கும் நாளொன்றுக்கு ரூபா 50 வீதம் மாணவர் உதவிக் கொடுப்பனவாக மாதம் ஒன்றிற்கு ரூபா 1,000 இற்குமேற்படாது வழங்கப்படும்.

குறைந்த வருமானம் பெறும் குடும்பத்தைச் சேர்ந்த, முழுநேரக் கற்கைநெறி மாணவர்கள் வருடமொன்றிற்கு ரூபா 2,500 வீதம் மாணவர் உதவுத்தொகையைப் பெற்றுக்கொள்ள முடியும்.

சகல் ஆவணங்களின் நம்பகத்தன்மைக்கும் விண்ணப்பதாரியே முழுப்பொறுப்புடையவராவார். மாற்றம் செய்யப்பட்ட அல்லது பொய்யான அல்லது உண்மையை உறுதி செய்யத் தவறும் ஆவணங்களைச் சமர்ப்பிக்கும் விண்ணப்பதாரிகள் கடுமையாகத் தண்டிக்கப்படுவர்.

விண்ணப்பதாரிகள் மேற்படி கற்கைநெறி பற்றிய அனைத்து முழுமையான விபரங்களையும் கடந்த வருடம் டிசம்பர் மாதம் 19.12.2014 ஆம் திகதி வெளியாகிய அரச வர்த்தமானியில் பார்வையிட்டுக் கொள்ள முடியும்

தொகுப்பு:- சி.என்.எச். சாலிஸ்

# வளமான நாட்டைக் கட்டியெழுப்புவதே தற்போதைய அரசின் எதிர்பார்ப்பு

## ஜனாதிபதி மைத்திரி தெரிவிப்பு



(கொழும்பு)

தேசிய மற்றும் மதங்களுக்கு இடையிலான நல்லிணக்கத்தை கட்டியெழுப்பி, பலம்வாய்ந்த பொருளாதாரத்துடனான வளமான நாடொன்றை கட்டியெழுப்புவதே தற்போதைய அரசாங்கத்தின் எதிர்பார்ப்பு என ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன தெரிவித்துள்ளார்.

தாய்நாடு தொடர்பில் ஒப்படைக்கப்பட்டுள்ள பொறுப்புக்களை நிறைவேற்றும் போது, மகா சங்கத்தினரின் அறிவுறுத்தல்கள் மற்றும் ஆலோசனைகளை எதிர்பார்ப்பதாகவும் ஜனாதிபதி தெரிவித்துள்ளார்.

வரலாற்றுச் சிறப்புமிக்க களனி ரஜமகா விகாரைக்கு நேற்று முன்தினம் சென்று வழிபாடுகளில ஈடுபட்ட சந்தர்ப்பத்திலேயே ஜனாதிபதி இதனைக் குறிப்பிட்டுள்ளார்.

இந்தச் சந்தர்ப்பத்தில் பிரதமர் ரணில் விக்ரமசிங்க உள்ளிட்ட அமைச்சர்கள் நாடாளுமன்ற உறுப்பினர்கள் சிலர் கலந்து கொண்டிருந்தனர்.

இதன்போது மேலும் கருத்து தெரிவித்த ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன களனி புண்ணிய பூமியை அபிவிருத்தி செய்யும் திட்டத்தின் இரண்டாம் கட்டத்தை துரிதமாக ஆரம்பிப்பதாகவும் தெரிவித்தார்.

## ஆர்ப்பாட்டம்

நாடாளுமன்ற உறுப்பினர் லக்ஷ்மன் யாப்பா அபேவர்தனவை, புதிய அராசாங்கத்துக்குள் சேர்க்க வேண்டாம் எனக் கூறி மாத்தறை மற்றும் ஹக்மன பிரதேசங்களில் பொதுமக்கள் நேற்று முன்தினம் இருவேறு ஆர்ப்பாட்டங்களை மேற்கொண்டனர்.

ஊழல், மோசடிக் குற்றச் சாட்டுக்குள்ளாகியிருக்கும் இது போன்றவர்களை அரசாங்கத்திற்குள் உள்வாங்குவதன் மூலம் அரசின் நற்பெயர் கெடுவதாக அவர்கள் குற்றம் சாட்டுகின்றனர்.

# கே.பி.க்கு எதிராக இன்று வழக்குத்தாக்கல்



புலிகளின் முன்னாள் சர்வதேச தொடர்பாளர் கே.பி. என்ற குமரன் பத்மநாதனுக்கு எதிராக ஜே.வி.பி. இன்று உயர்நீதிமன்றத்தில் வழக்கொன்றை தாக்கல் செய்யவுள்ளதாக ஜே.வி.பி. யின பிரசார செயலாளர் விஜிதஹேரத் எம்.பி. தெரிவித்தார்.

கே.பி. க்கு எதிராக முன்னைய அரசாங்கம் எதுவித சட்ட நடவடிக்கையையும் மேற்கொள்ளவில்லை. அவரிடமிருந்ததாக கூறப்படும் கப்பல்கள் தங்கம் மற்றும் சொத்துக்கள் தொடர்பாக என்ன நடந்தது என்பது தெரியவில்லை. பயங்கரவாத நடவடிக்கைகளில் ஈடுபட்டமை ஆயுதப் போராட்டத்திற்கு உதவியமை தொடர்பாக கடந்த அரசாங்கம் இவருக்கு எதிராக நடவடிக்கை மேற்கொள்வதை விடுத்து சொகுசு வாழ்க்கை நடாத்த வசதிகளை செய்து கொடுத்திருப்பது மக்கள் மத்தியில் சந்தேகத்தை எழுப்பியுள்ளது.

எனவே இவருக்கு எதிராக ஜே.வி.பி. இன்று உயர்நீதிமன்றததில் வழக்கொன்றை தாக்கல் செய்யுமென்றும் அவர் தெரிவித்தார்.

# பொருளாதார கொள்கையில் மாற்றம் ஏற்படுத்தப்படும்

நாட்டின் பொருளாதார கொள்கையில் மாற்றம் ஒன்றை ஏற்படுத்துவதாக பொருளாதார நடவடிக்கைகள் பிரதியமைச்சர் ஹர்ஷ டி சில்வா தெரிவித்துள்ளார்.

பிரதமர் அலுவலகத்தில் ஸ்தாபிக்கப்பட்டுள்ள, தமது அமைச்சில் பொறுப்புக்களை கையேற்கும் நிகழ்வில் கலந்து கொண்டு உரையாற்றிய போதே அவர் இதனைக் குறிப்பிட்டுள்ளார்.

உள்ளக பொருளாதாரத்தை வலுப்படுத்த நட்வடிக்கை எடுப்பதாக அவர் தெரிவித்துள்ளார்.

## பரமர் சங்கமம்



'மதில்மேல் பூனை' எண்ட பேச்சை அடிக்கடி உங்கள் அரசியல் பேர் வழிகள் தான் சொல்லிக்கொள்வினம் ஏனெண்டால் அவையளும் அப்புடித்தானே. பூனை மதில்லை நிண்டு தனக்கு வாசியான பக்கத்துக்குப் பாயப்பாத்துக்கொண்டு நிக்கும் அந்த மாதிரித்தான் சில அரசியல் வாதிகளின் வாழக்கையும்.

நேற்று என்னோடை படுத்துக் கிடந்தவன் இண்டைக்கு மாறீட்டான் எண்டு மகிந்தர் புலம்பியதை ஒலிபரப்பு ஊடகத்திலை கேட்டன் கடைசியா அண்டைக்கு விசேட செய்தி ஒண்டிலை புதிய அரசாங்கத்துக்கு ஆதரவு தெரிவிப்பதாக அவர் சொல்லி இருந்ததும் பாத்தன். இதென்ன தாவலில்லையா?

இதுவும் மதில் மேல் பூனைன்ர நிலை தானே! இதேம் விட இன்னொரு சாரார் இருக்கினம் அவை எந்த அரசாங்கம் வந்தாலும் ஒம்தான் இராமன் ஆண்டாலென் இராவணன் ஆண்டாலென்னஎண்ட போக்குக் கொண்ட பூனைகள் ரெண்டு பேரில் எந்த ஒருவர் ஆட்சி அமைச்சாலும் அவை யள் அவ்வரசில் இருப்பினம்.

அதுவும் சும்மா இல்லே அள்ளுகாசும் தென்னம் புள்ளேம் எண்ட மாதிரி காசுக்குக் காசும் பதவிக்குப் பதவியும் குடுத்து வைச்ச பிறவியளெண்டே சொல்லலாம். சிறுபான்மை இனத்தில் முதுகில் ஏறிச்சவாரி செய்து கொண்டு சுகபோக வாழ்க்கை வாழுற உவைதான்.

ஆட்சியில் இருக்கிறவை வைக்கோ இல்லாத வைக்கோ அந்தச் சீவியமில்லை. இருந்தால் மேலை வீழ்ந்த அதள பாதாளந்தான் இதிலை இருந்து கொஞ்சம் மாற்றமாயிருக்கு மகிந்தரின் விசேட செய்தி அறிவிப்பு அதுவும் அவரின்ரை ராஜதந்திரத்தில் ஒண்டோ என்னவோ விளங்கேல்லை.

ஆனாத் தமிழர் கூட்டமைப்பின் நிலை அண்டைக் கும் இண்டைக்கும் ஒண்டாத்தானிருக்கு ஏனென்டா நீண்ட கால நாடாளுமன்ற வியூகத்தை வகுத்துச் செயற்படுவதால் அதைத்தக்க வைச்சுக் கொண்டிருக்கினம். அவை எதைச் சொல்லட்டும் வடபகுதி மக்கள் தலைமேற் கொண்டு சிரம் தாழ்த்தி சேவகம் செய்வினம்.

கோடிக் கணக்கான பணப்பரிமாற்றம் செய்வதோ பின்கதவால் பெறுகின்ற சலுகைகளைப் பெறுவதோ ஆதாரமற்ற கூற்றாக அமைச்சு விடுவதால் மக்களுக்கு விளங்கிறேல்லை. அமைச்சுப் பதவியை பெற்றால் ஆதார பூர்வமான ஒன்றல்லவா? எப்படி மக்கள் முன்பாக நின்று வாக்குப் பிச்சை வாங்குவது? அவர்களின் நீண்டகால அணுகுமுறேலை இதைக் கவனிக்கலாம். வரலாற்றில் எதிர்க்கட்சித் தலைவராக அமிர்தலிங்கம் இருந்ததைத் தவிர அக்கட்சியில் மக்களின் வாக்கைப் பெற்றுச் சென்ற எவருமே இதுவரேல்லை அமைச்சுப் பதவியைப் பெறேல்லை.

அதுகளில் எஸ்.திருச்செல்வம் அமைச்சராக இருந்ததும் மக்களால் தெரிவுசெய்யப்படாமல் தானெண்டதை உற்று நோக்கலாம். இதை வைச்சு தமிழரசுக் கட்சியையோ தமிழ்த் தேசியக் கூட்டமைப்பினரையோ மதில் மேல் பூனையெண்டு சொல்லவே முடியுதில்லை.

தமிழ்மக்களின் ஈரலைக்கொய்யும் மரநாய்களுமோ அல்ல கூட வீட்டில் நிலத்தில் வளைய வந்து தின்டு கொழுக்கும் பூனைகளெண்டு வேணுமெண்டால் வைச்சுக் கொள்ளலாம். பின்னை என்ன நான் சொல்லுறே பொய்யே, சொல்லுங்க பாப்பம்.

# மகிந்த தலைமையில் அமைக்கப்படும் அரசு

## வாசு எம்.பி. தெரிவிப்பு



முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்சவின் தலைமையில் அரசாங்கமொன்றை அமைக்கப் போவதாக முன்னாள் தேசிய மொழிகள் அமைச்சர் வாசுதேவ நாணயக்கார தெரிவித்துள்ளார்.

எதிர்வரும் பொதுத் தேர்தலில் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ தலைமையிலான அரசாங்கமொன்றை அமைக்க நடவடிக்கை எடுக்கப்படும் என அவர் குறிப்பிட்டுள்ளார்.

லங்கா சமசமாஜ கட்சி, கம்யூனிஸ்ட் கட்சி, தேசவிடுதலை முன்னணி, மஹஜன கட்சி உள்ளிட்ட கட்சிகள் இந்த திட்டத்திற்கு ஏற்கனவே ஆதரவினை தெரிவித்துள்ளதாகக் குறிப்பிட்டுள்ளார்.

தினேஸ் குணவர்தன தலைமையிலான மஹஜன கட்சி கொள்கைகளில் மாற்றம் ஏற்படுத்திக் கொள்ளாது என கருதுவதாக்த் தெரிவித்துள்ளார்.

தற்போதைய அரசாங்கத்தின் ஊடாக நாட்டுக்கும் மக்களுக்கும் பாதிப்பு ஏற்படக் கூடுமென தாம் கருதுவதாகத் தெரிவித்துள்ளார்.

தமிழ் முஸ்லிம் மக்களின் வாக்குகள் கிடைக்காத காரணத்தினால் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஸ தேர்தலில் தோல்வியைத் தழுவியதாக பிரச்சாரம் செய்யப்பட்டு வருவ தாகவும் இதன் மூலம் மீண்டும் இனவாதம் தலைதூக்கக் கூடிய அபாயம காணப்படுவதாகவும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

சிங்கள பௌத்த மக்கள் செறிந்து வாழும் பகுதிகளிலும் மஹிந்த ராஜபக்ஷவிற்கு போதியளவு வாக்குகள் கிடைக்கவில்லை என அவர் தெரிவித்துள்ளார்.

மகிந்த ராஜபக்ஷ தொடர்பில் முழு அளவில் நம்பிக்கை உண்டு எனவும், நிச்சயமாக பொதுத் தேர்தலில் வெற்றியீட்டி ஆட்சியைக் கைப்பற்றுவார் எனவும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

மகிந்த ராஜபக்ஷ நல்லாட்சி நடத்திய காரணத்தினாலேயே ஜனநாயக ரீதியான தேர்தல் ஒன்றை முன்னெடுக்க முடிந்தது எனவும் அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

# மகிந்தவின் தோல்விக்கு பொதுபலசேனா காரணமா?

## மறுக்கிறார் ஞானசார தேரர்

(கொழும்பு)

எம்மால் தான் முஸ்லிம்களின் வாக்குகள் மகிந்த ராஜபக்ஷவுக்கு இல்லாமல் போனது எனும் குற்றச் சாட்டை ஏற்க முடியாது என பொதுபல சேனாவின் செயலாளர் கலகொட அத்தேஞானசார தேரர் தெரிவித்துள்ளார்.

மகிந்த ராஜபக்ஷவின் தோல்விக்கு பொதுபல சேனா பொறுபபுச் செல்ல வேண்டும் என பல தரப்புக்களிலும் கூறப்ப்டுவது குறித்து தேரரிடம் நேற்றைய சிங்கள வார இதழொன்று வினவியபோதே இவ்வாறு கூறியுள்ளார்.

நாம் முஸ்லிம் அடிப்படைவாதிகளுக்கு எதிராகவே செயற்பட்டோம். முழு பழங்குடி முஸ்லிம்களுக்கு எதிராகவல்ல.

மைத்திரிபால சிறிசேன கட்சி மாறியது எமது செயற்பாட்டினாலா? சம்பிக்க ரணவக்க எதிர்க்கட்சியுடன் சேர்ந்தது எமது செயற்பாட்டினாலா? இவ் வாறு குற்றம்சாட்டுபவர்களிடம் நாம் சில விடயங்களுக்கு காரணம் கேட்கின்றோம். வடக் கின் வாக்குகள் முழுமையாகக் கிடைக்காமல் போனதும் எம்மாலா?

நாம் கணக்குப் போட்டுக் காட்டுகின்றோம். முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷவுக்கு பௌத்தர்களின் வாக்குகள் அனைத்தும் சுத்தமாக கிடைத்துள்ளது. இது நாம் இருந்ததனால் தான் கிடைக்கப் பெற்றது.

வேலையை சரியாகச் செயயாத கட்சியின் தொகுதி அமைப்பாளர்களே இந்த தோல்விக்குப் பொறுப்புச் சொல்ல வேண்டியவர்கள். கட்சிக்கு வெளியில் போன்று கட்சியின் உள்ளேயும் சூழ்ச்சிகள் இடம்பெற்றமை ஏற்றுக்கொள்ளப்பட வேண்டிய ஒன்றாகும்.



பௌத்தர்கள் கட்சி ரீதியில் பிரிந்து செல்லாமல் நாடு என்ற காரணத்தை வைத்து ஒன்றுபடுமாறு நான் கேட்டுக் கொள்கின்றேன். சிங்கள தலைவர்கள் பிரிந்திருப்பதன் விளைவை எதிர்கால சந்ததியினர் ஈடு கொடுக்க வேண்டியிருக்கும் எனவும் தேரர் மேலும் கூறியுள்ளார்.

(10).சரியாயின் (சரி) எனவும் பிழையாயின் (பிழை) எனவும் அடையாளமிடுக

33.வகுப்பறையை சுத்தமாக வைத்திருத்தல் வேண்டும் ( )

34.கொதித்தாறிய நீரையே பருகுவோம் ( )

35.தேனீக்கு எட்டு கால்கள் உண்டு ( )

36.இலங்கை 1948 ஆம் ஆண்டு சுதந்திரமடைந்தது ( )

37.குறட்டினால் யாதேனும் ஒன்றை இறுக்கமாக பிடிக்கலாம் ( )

38.முற்காலத்தில் செய்தி பரிமாற்றம் செய்ய குயில் பயன்படுத்தப்பட்டது ( )

(11) சுருக்கமான விடை தருக

39.பச்யைாக உண்ணக்கூடிய கிழங்கு வகை ஒன்று தருக? ........................

40.ஒருவர் உமக்கு உதவி புரிந்தால் நீர் கூறவேண்டியது ........................

41.மழைபெய்வதால் எமக்கு கிடைக்கும் நன்மை ஒன்று தருக? ........................

42.வாகனங்களில் தடுப்பை (Brake) பயன்படுத்தும் போது ஒளிரும் மின்விளக்கின் நிறம் யாது? ........................

43.தேசியக்கொடியில் காணப்படும் நிறங்கள் எத்தனை? ........................

44.கூடுகட்ட தெரியாத பறவை எது? ........................

45.இலங்கையின் தேசிய மரம் எது? ........................

46.நீரை நாம் பயன்படுத்தும் சந்தர்ப்பம் ஒன்று தருக? ........................

47.நான்கு பக்கமும் கடலாலால் சூழப்பட்ட சிறிய நிலப்பரப்பு எவ்வாறு அழைக்கப்படும்? ........................

48.மகரந்த சேர்க்கைக்கு உதவும் பிராணி ஒன்று தருக? ........................

49.வித்துக்களை நடுவதன் மூலம் புதிய கன்றுகளை பெறக்கூடிய தாவரம் எது?
1) மரவள்ளி 2)கறிவேப்பிலை 3)பூசணி

50.மிக விரைவாக முளைக்கக்கூடிய வித்து எது?
1) கடுகு 2)புளி 3)பலா

51.பச்சை நிறமான வித்து எது?
1) சாதிக்காய் 2)வேம்பு 3)பயறு

52.மா இடிப்பதற்கு பயன்படுத்தப்படும் உபகரணம் எது?
1)அம்மி 2)உரல் 3)செக்கு

53.உலகின் பெரும்பகுதி எதனால் மூடப்பட்டுள்ளது?
1) நிலத்தினால் 2)நீரினால் 3)மலைகளால்

54.பூக்களை தேசப்படுத்தும் பிராணி எது?
1) வண்ணத்துப்பூச்சி 2)தேனீ 3) வண்டு

55.நாட்காட்டியில் விடுமுறையை காட்டும் நிறம் யாது?
1)சிவப்பு 2)நீலம் 3)கறுப்பு

### நேற்று பிரசுரமாகிய வினாக்களின் விடைகள்

1. வெசாக்கூடு 2.ஈர்க்கு,டிசுத்தாள்,பசை,நூல் 3.பௌத்த மதத்தினர்/ சிங்களவர்கள்
4.வைகாசி,வெசாக்மாதம்,மேமாதம் 5.3 6.2 7.3 8.4 9.3 10.1 11.1 12.1 13.அப்பிள் 14.கூரை
15.1017 16.122 அதிகம் 17.1294 18.4500 19.1875 20.1000 21.அசோகமன்னன்
22.சீகிரியாக்குன்றம் 23.கழுவி அரிந்து,குறைவாக, அழியாமல் 24.வலப்பக்கம்,இடப்பக்கம்,வலப்பக்கம்
25.mother 26.crow 27.chair 28.அசைந்தாடும் இலைகள் 29.காற்றுவீசுவதினால் 30.பௌர்ணமி இரவுகளில்
37.ஆணி அறைவதற்கு 38.வெட்டுவதற்கு 39.பாரம் தூக்குவதற்கு 40.ஒட்டுவதற்கு 41.2 42.2 43.2

இந்தப் பயிற்சி வினாக்களின் விடைகள் நாளை வெளியாகும்



தரம் - 3 பரீட்சை முன்னோடி- 2015

பகுதி - I
1 மணி 15 நிமி

# கல்வி முரசு



(01) மிகச்சரியான விடையின் கீழ் கோடிடுக

01.உமது பாடசாலையின் ஆரம்பகாலம் பற்றிய தகவல்களை அறிய உதவுவது?
1) மாணவர் தொகை 2) புலமைப்பரிசில் 3) புகைப்படங்கள்

02.அஞ்சல் அட்டை ஒன்றின் விலை யாது?
1) ரூபா 5 2) ரூபா 10 3) ரூபா 4


03.நீரை சூடாக்கப்பயன்படுத்தப்படும் உபகரணம் எது?

1)  2)  3) 

04.முட்டை வடிவ இலையையுடைய தாவரம் எது?
1) மரவள்ளி 2) வேம்பு 3) பலா

05.எமது நாட்டைச் சுற்றி உள்ள சமுத்திரம் எது?
1) பசுபிக்சமுத்திரம் 2) இந்துசமுத்திரம் 3) ஆட்டிக்சமுத்திரம்

06.இலங்கையின் தேசிய கீதத்தை தமிழில் மொழி பெயர்த்தவர் யார்?
1) சோமசுந்தரப்புலவர் 2) நல்லதம்பிபுலவர் 3) சுப்பிரமணியபாரதியார்

07. 
இக்குறியீடு குறிப்பது
1)பஸ்தரிப்பிடம்
2)வாகனம் தரிக்கத்தடை
3)பஸ்வண்டிச்சேவை

08.தினமும் வெளிவரும் பத்திரிகை எது?
1)தினகரன் 2)விஜய் 3)செந்தூரம்

09.வருடத்தின் கடைசி மாதம் எது?
1)கார்த்திகை 2)சித்திரை 3)மார்கழி

10.உணவை சுவையூட்ட பயன்படுத்தப்படுவது எது?
1)அரிசி 2)கறிவேப்பிலை 3)இறைச்சி

11.மணமுள்ள இலை எது?
1)செவ்வரத்தை 2)கற்பூரவள்ளி 3)பூவரசு

12. 
உருவில் காட்டப்பட்டுள்ள பெரியார் யார்?
1)பாரதியார்
2)மகாத்மாகாந்தி
3)திருவள்ளுவர்

13.இலங்கையின் தேசிய அடையாளம் அல்லாதது எது?
1) நாகமரம் 2)நீலோற்பலம் 3)சங்கு

14.முச்சக்கரவண்டிக்கு பயன்படும் எரிபொருள் எது?
1)பெற்றோல் 2)மண்ணெண்ணெய் 3)டீசல்

15.காணாமற் போன பொருட்கள் தொடர்பாக முறையிட நாம் செல்ல வேண்டிய இடம்
1)பொலிஸ் நிலையம் 2)பிரதேசசபை 3)மாவட்டசெயலகம்

16. குளிர்சாதனப் பெட்டியில் வைத்து பாதுகாக்க வேண்டிய உணவுப்பொருள் எது?
1) மீன் 2) கோதுமை 3) உழுந்து

17. 

இலங்கைப்படத்தில் A யினால் காட்டப்படும் மாவட்டம் எது?
1) யாழ்ப்பாணம்
2) திருகோணமலை
3) கொழும்பு



18. உலகில் மிகப்பெரிய கண்டம் எது?
1) அவுஸ்ரேலியா 2) ஆசியா 3) ஐரோப்பா

19. தாம்புதாண்டற் கயிறை தயாரிக்க தேவையான பொருட்கள் எவை?
1) கயிறு, சிரட்டை 2) கயிறு, இறப்பர் 3) கயிறு, மூங்கில்துண்டு

20. அதிக கால்களைக் கொண்ட பிராணி எது?
1) மரஅட்டை 2) நண்டு 3) தேள்

21. காலையில் சூரியன் உதயமாகும் திசை எது?
1) மேற்கு 2) வடக்கு 3) கிழக்கு



22. பின்வருவனவற்றில் ஊன் உண்ணிப்பறவையை தெரிந்து கோடிடுக

1)  2)  3) 

23. குழந்தையை தூங்க வைக்க பாடப்படும் பாடல்
1) ஒப்பாரிப்பாடல் 2) வசந்தன்பாடல் 3) தாலாட்டுப்பாடல்

24. தபால் நிலையத்தில் உள்ள நீலநிறதபால்பெட்டி குறிப்பது
1) உள்ளூர் தபால் 2) வெளிநாட்டு தபால் 3) வெளியூர் தபால்

25. மேசன் பயன்படுத்தும் உபகரணம் எது?

1)  2)  3) 

(02) தமிழ் சொற்களுக்குரிய ஆங்கில சொற்களை எழுதுக.
01. வானம் ..........................................
02. சிலந்தி ..........................................
03. எட்டு ..........................................
04. வைத்தியசாலை ..........................................



(03) சிங்கள வாக்கியங்களின் கருத்தை தமிழில் எழுதுக
05. ஒயா கේ நம மொக்கத? ..........................................
06. மட தென்ன ..........................................
07. அத்துலட என்ன ..........................................

(04) இடைவெளிக்குள் வரவேண்டிய சொற்களை தெரிந்து எழுதுக
நாம் வீதியை கடக்கும் போது முதலில் 08. .................. பக்கமும் பின்னர் 09. .................. பக்கமும் பார்த்து மீண்டும் 10. .................. பக்கம் பார்த்து வீதியைக் கடக்க வேண்டும்.

இடது, வலது, வலது



(05) வீதிக்குறியீடுகள் குறிக்கும் கருத்தினை அடைப்பினுள் இருந்து தெரிந்து எழுதுக

11.  12.  13.  14. 


.................. .................. .................. ..................


(சிறுவர்கடவை முன்னால், வைத்தியசாலை, ஒலிஎழுப்பத்தடை, நேராகச்செல்லவும்)


(06) சரியாயின் (சரி) எனவும் பிழையாயின் (பிழை) எனவும் அடையாளமிடுக
15. மனிதனின் அடிப்படைத்தேவைகளில் உணவும் ஒன்றாகும். ( )
16. நீரின் மூலம் மின்சாரம் உற்பத்தி செய்யப்படுகின்றது ( )
17. நதிகள் யாவும் மலைநாட்டை சென்றடைகின்றன ( )
18. சூரியனை சுற்றி சந்திரன் வலம் வருகின்றது ( )
19. புளியம் பூ உணவு தயாரிக்க பயன்படுத்தப்படுகின்றது ( )
20. மூத்தோர் சொற்படி நாம் நடக்க வேண்டும் ( )

(07) சுருக்கமான விடை தருக
21. பறக்கக்கூடிய பறவைகள் இரண்டு தருக? ..........................................
22. நாம் வீட்டில் செய்யவேண்டிய வேலை ஒன்று தருக? ..........................................
23. இலங்கை மக்களால் அதிகமாக பேசப்படும் மொழி எது? ..........................................
24. விவசாயிகள் பயன்படுத்தும் உபகரணம் இரண்டு தருக? ..........................................
25. வருடம் ஒன்றில் உள்ள மாதங்கள் எத்தனை? ..........................................

(08) இடைவெளிக்கு வரவேண்டிய ஆங்கில எழுத்துக்களை எழுதுக

26. 
Ey...s

27. 
B...cy..le

28. 
Ele...han..

29. 
Do...t..r

(09) தரப்பட்ட சிங்கள சொற்களுக்கு பொருத்தமான உருக்களை தொடர்புபடுத்துக



30. பு(ட்)டுவ
31. கிரவா
32. ககுல
33. லேனா

# காவியத்தை ஓவியமாக்கும் கந்தையா சுந்தரலிங்கம்



அழகான வர்ணமை பூசும் அழகுக்கலையாம் வர்ணமை ஓவியக் கலைஞர் கலாபூஷணம் கந்தையா சுந்தரலிங்கம் அவர்கள் ஒரு அமைதியான அடக்கமான மனிதர். இவரது திறமை பல பேருக்குத் தெரியாது. குடத்துள் விளக்காய் விளங்கும் இவர் அழகான வர்ணமையைக் கொண்டு காவியத்தை ஓவியமாக்கும் தனித்துவமான கலைஞர்.

இவரது கைவண்ணத்தால் இலங்கையிலுள்ள பல கோயில்கள் அழகிய வர்ண அலங்காரத்துடன் சிறப்பாக விளங்குகின்றன.

கைவண்ணம் காட்டி பெருமையும் புகழும் கீர்த்தியும் பெற்றுள்ள இவருக்கு இலங்கை அரசு 'கலாபூஷணம்' விருது வழங்கிச் சிறப்பித்துள்ளது.

காவியங்களில் வரும் கதாபாத்திரங்களின் குணாதிசயங்கள் வெளிப்படும் வகையில் அக்கதையின் சாராம்சத்தை அப்படியே உயிரோவியமாகத் தருவதில் சிறந்த இவர் யாழ்ப்பாணம் ஆனைப்பந்தியில் வசித்து வருகின்றார்.

இவர் ஈழநாட்டில் மட்டுமல்ல வெளிநாடுகளுக்கும் சென்று தன்னுடைய ஓவியத்திறமையை வெளிக்கொணர்ந்துள்ளார்.

ஆனைக்கோட்டையைச் சேர்ந்த இவர் கந்தையா–தங்கம் தம்பதியரின் மகனாவார். இளவயதிலேயே சித்திரந்தீட்டுவதில் வல்லவராகத் திகழ்ந்த இவர் ஆனைக்கோட்டை பாலசுப்பிரமணிய வித்தியாலயத்திலும் மானிப்பாய் இந்துக் கல்லூரியிலும் கல்வி பயின்றார். அமரர் ஓவியத்திலகம் பெனடிக் என்பவரிடம் ஓவியக் கலையைப் பயின்றார் இவர் முயன்று இக்கலையில் முன்னுக்கு வந்தார். இந்தக் கலைஞர் தம்முடைய முழுத்திமையையும் உள்ளடக்கி 1971 இல் நல்லூர் முருகன் கோயிலின் வாயில் இராஜகோபுரத்துக்கு வர்ணந் தீட்டுகின்ற பெரும்பாக்கியம் கிடைத்தது. அன்று முதல் ஈழத்திலுள்ள பல கோயில்களில் அவருடைய கைவண்ணம் கதைபேசத் துவங்கியுள்ளது. 'தினமுரசு' வாசகர்களுக்காக அவரைப் பேட்டி கண்டு மகிழ்ச்சியுடன் பிரசுரிக்கின்றோம்.

இவரது ஓவியத்துறை வளர்ச்சியடைந்து வர இவருடைய ஆர்வமே துணையாக இருந்தமை குறிப்பிடத்தக்கது.



**கேள்வி-** வணக்கம், உங்களது இந்த ஓவியத்தின் சிறப்புக்கு வேறு யார் யார் உறுதுணை புரிந்திருக்கிறார்கள் என்று சொல்ல முடியுமா?

**பதில்-** எனக்கு ஓவியந்தீட்டுவதில் இருந்த ஆர்வத்தைக் கண்ட கட்டுவனைச் சேர்ந்த இளையதம்பிமாஸ்ரர், திருநெல்வேலியைச் சேர்ந்த இராசையா மாஸ்ரர் வட்டுக்கோட்டையைச் சேர்ந்த கந்தசாமி மாஸ்ரர் ஆகியோர் என்னை ஊக்குவித்து இதில் வளர்ச்சி பெற உதவியாக இருந்தார்கள். அவர்களுக்கு நான் என்றென்றும் கடமைப்பட்டவன்.

**கேள்வி-** -உங்களுடைய வாழ்க்கையில ஓவியத்துறைக்காக கிடைத்த பட்டங்கள் பற்றி....?

**பதில-** அவை நிறையக் கிடைத்திருக்கின்றன 2001 இல் வடக்கு அபிவிருத்தி புனரமைப்பு புனர்வாழ்வு தமிழ் விவகாரங்கள் அமைச்சு எனக்கு 'கலைஞான' சோதி என்ற பட்டத்தை வழங்கியது.

**கேள்வி-** வேறு என்னென்ன விருதுகள் கிடைத்துள்ளன.?

**பதில்-** வண்ணக் கலையரசு(1994) வர்ணக் கலாரூபன் (1989), ஓவியமாணி (1993), சித்திரசிகாமணி (1995), கலாரத்னா (1999), வர்ணக் கலைவேந்தன் (2001), சித்திரக்கலைஞானி (2002), சித்திரக்கலாநிதி (1995), ஓவியபாரதி (1993), கலையரசன் (2004), கலாபூஷணம் (2004) ஆகியனவும் உள்ளன.

**கேள்வி-** சரி ஓவியத்துறையில் உங்களுடைய இலட்சியம் என்ன?

**பதில்-** என்னுடைய ஓவிய வர்ணக் கலை நன்கு விருத்திபெற்று வளர்ச்சியடைய வேண்டும் என்று விரும்புகின்றேன் என்னுடைய மாணவர்கள் என்னிடம் இதைப் பயின்று இன்னும் நாலுபேர்களுக்கு இதைப்பயிற்றுவித்துள்ளனர். இதன் மூலம் நல்ல வேலைவாய்ப்பு பெற்று நல்ல விதத்தில் வாழ்கின்றார்கள்.

**கேள்வி-** உங்களுடைய ஓவியத்தின் தொழில் நுட்பம் பற்றிக் கொஞ்சம் சொல்லுங்களேன்.

என்னுடைய தொழிலில் கஷ்டமானது என்று ஒன்றும் இல்லை. கண்பார்க்க கைசெய்யும். அவ்வளவுதான். மேலும் இந்த சித்திரக் கலையானது அனுபவித்தில் வரவேண்டும். கைநுணுக்கங்கள் மிகவும் அலாதியானவை இதில் ஆத்துதல் என்று ஒன்று. இதை மிகக் கவனமாகச் செய்யவேண்டும் செய்து செய்து அனுபவப்பட்டறிவு வருந்துவிட்டால் அதுவே பெரும்பாக்கியம். இதை நன்கு 'சரியாகப் பழகிக் கொண்டால் அவர்களின் பெருமை சொல்லிமுடியாது யாழ்ப்பாணத்தில் பல இடங்களில் என்னுடைய ஓவியத்திறனுக்குச் சான்றுகள் இருக்கின்றன.

**கேள்வி** இந்த ஓவியந்தீட்டும் வர்ணக் கலையைப் பற்றி விளக்கமாகச் சொல்லுங்களேன்.

**பதில்-** இந்த ஓவிய வர்ணந்தீட்டும் கலையை பெயின்ரிங்'' என்று சொல்வார்கள். இது மிகவும் நுட்பமான கலையாகும். மிக்க ஆர்வத்துடன் பயிலவேண்டும். இதில் நல்ல பயிற்சி பெற்று ஓவியராக வந்துவிட்டால் பிறகு சொல்லத்தேவையில்லை. நல்ல வருமானம் கிடைக்கும். ஆனால் பொறுமையும் அவதானமும் ஆர்வமும் ஆசையும் இருந்தால் தான் முன்னேறலாம். என்னிடம் இதைப்பயின்ற பல மாணவர்கள் இப்போது நல்ல முறையில் பணிசெய்து முன்னேறியிருக்கின்றார்கள். அது எனக்குப் பெருமையே

**கேள்வி-** உங்களுடைய ஓவிய அனுபவத்தில் நீங்கள் கண்ட உண்மை என்ன?

**பதில்-** என்னுடைய கலைப்பணியானது இலங்கையில் மட்டுமல்ல வெளிநாடுகளுக்கும் பரவி உள்ளது. பல மாணவர்கள் வெளிநாடு சென்று அங்கும் ஓவியக்கலையை விருத்தி செய்கின்றனர். அதில் ஓர் உண்மை பொதிந்திருக்கின்றது. நான் சொல்லிக்கொடுத்த தொழில் ஓவிய வர்ணந்தீட்டும் பணி மிகக் கவனமாகச் செய்யப்பட்டு அதேபாங்குடன் மிளிர்வது பாராட்டுக்குரியது இதையிட்டு நான் மிகவும் பெருமையுறுகின்றேன்.

*பேட்டி கண்டவர்----*
**கலாபூஷணம்**
**இராசையா ஸ்ரீதரன்**

# முன்னைய அரசின் ஊழல்கள் குறித்து ஒருவாரத்தில் 1800 முறைப்பாடுகள்

முன்னாள் அரசாங்கத்தினால் மேற்கொள்ளப்பட்ட ஊழல் மற்றும் மோசடிகளை விசாரிக்கவென தற்போதைய அரசினால் அமைக்கப்பட்ட ஊழல்களை விசாரிப்பதற்கான குழுவிற்கு ஒருவாரத்தில் மட்டும் 1800 முறைப்பாடுகள் கிடைக்கப் பெற்றுள்ளதாக தெரிவிக்கப்படுகிறது.

முன்னைய அரசாங்கத்தின் ஊழல்கள், மோசடிகள் தொடர்பாக விசாரணை செய்வதற்கு குழுவொன்று அமைக்கப்பட்டு அதற்கான அலுவலகமும் கடந்த ஞாயிற்றுக்கிழமை திறந்து வைக்கப்பட்டது.

இந்த அலுவலகத்தில் அரச ஊழியர்கள், பொதுமக்கள், நிறுவனங்கள் மற்றும் எவரும் ஊழல்கள் தொடர்பான சாட்சியப்பதிவை வழங்கலாமென அரசாங்கம் அறிவித்துள்ளது.

கிடைக்கப்பெற்ற 1800 முறைப்பாடுகளும் முனனுரிமை அடிப்படையில 'விசாரணைக்கு எடுக்கப்படும்.

குறிப்பாக மின்சார சபைக்கென இறக்குமதி செய்யப்பட்ட இயந்திரங்கள் மற்றும் உபகரணங்கள் என்பன தரமற்றனவயாக உள்ளன. பெருமளவான பொருட்கள் கேள்விப் பத்திரங்கள் எதுவுமின்றியே கொள்வனவு செய்யப்பட்டுள்ளன. உதாரணமாக நுரைச் சோலை அனல்மின் நிலையத்திற்கென கொள்வனவு செய்யப்பட்டவை மிகவும் தரமற்றவை.

பொதுமக்கள் ஊழல்கள் தொடர்பாக தகவல்கள் தர விரும்பினால் 0112884583 என்ற தொலைபேசி இலக்கத்திற்கோ அல்லது 100/19 , வெலிக்கடவத்தை, ராஜகிரிய என்ற முகவரிக்க கடிதம் மூலமாகவோ அனுப்ப முடியும். ஊழல்கள் தொடர்பான தகவல்களை அனுப்ப மின்னஞ்சல் விரைவில் திறக்கப்படுமெனவும் தெரிவிக்கப் பட்டுள்ளது.

## புதிய அரசின் 100 நாள் திட்டம் 20 ஆயிரம் கோடியில் இடைக்கால பட்ஜெட்

புதிய அரசாங்கத்தின் 100 நாள் திட்டங்களுக்காக 20 ஆயிரம் கோடி ரூபாவுக்கான இடைக்கால பட்ஜெட் சமர்ப்பிக்கப்படவுள்ளது என நிதி அமைச்சின் வட்டாரங்கள் தெரிவித்துள்ளன. இந்த இடைக்கால பட்ஜெட் அமைச்சரவையின் அனுமதிக்காக எதிர்வரும் 29 ஆம் திகதி சமர்ப்பிக்கப்படவுள்ளது. இது குறித்து நிதி அமைச்சர் ரவி கருணாநாயக்க கூறுகையில் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன மக்களுக்கு வழங்கிய வாக்குறுதிகள் இடைக்கால பட்ஜெட்டில் நிறைவேற்றப்படும். ஆனால் முன்னைய அரசாங்கம் அரச கஜானாவையே காலியாக்கி விட்டது.

இதனால் வருமானத்தை இனித்தான் தேட வேண்டும். அரச ஊழியர்களுக்கு 5 ஆயிரம் ரூபா சம்பள அதிகரிப்பு வரும் ஜனவரி 30 தொடக்கம் அதிகரிக்கப்படும். மறைமுக வரிகள் நீக்கப்படும். சமுர்த்திப் பயனாளிகளுக்கு 200 ரூபா அதிகரிக்கப்படும். பல்கலைக்கழக மாணவர்களுக் கான மகாபொல புலமைப்பரிசில் அதிகரிக்கப்படும், ஓய்வூதியர்களுக்கு 3 ஆயிரத்து 500 ரூபா ஓய்வூதிய இடைக்காலக் கொடுப்பனவும் வழங்கப்படும் - என்றார்.

இதனிடையே அரசாங்கத்தின 100 நாள் திட்டங்களுக்கு 89 ஆயிரம் கோடி ரூபா தேவைப் படும் என எதிர்க்கட்சிகளில் ஒன்றான பவித்திரு ஹெல உறுமயவின் தலைவர் கம்மன் பில தெரிவித்தார்.

# 60,000 மது போத்தல்களுடன் கனரகவாகனங்கள் மீட்பு

கொழும்பு, தெமட்டகொடை பகுதியில் களஞ்சியப்படுத்தப் பட்டிருந்த 60,000 மதுபான போத்தல்களை மீட்டுள்ளதாக தெரிவித்த பொலிஸார், கனரக வாகனம் மற்றும் 3 லொறிகள் ஆகியவற்றைக் கைப்பற்றியுள்ளதாகவும் தெரிவித்தனர்.

இதேவேளை, சந்தேகத்தின் பேரில் மூவரைக் கைது செய்துள்ளதாகவும் பொலிஸார் தெரிவித்தனர். அனுமதிப்பத்திரமின்றியே இந்த மதுபான போத்தல்கள் அங்கு களஞ்சியப்படுத்தப்பட்டிருந்ததாக பொலிஸார் மேலும் தெரிவித்தனர்.



கடந்த வியாழக்கிழமை கொழும்பிலுள்ள சீனத்தூதுவர் ஜனாதிபதி மைத்திரிபாலவை சந்தித்து கலந்துரையாடியதனைக் காணலாம்


# வாழ்க வளமுடன்

சிறாரின் பெயர் :- ..............................

முகவரி :- ..............................

பிறந்த ஆண்டு :- ..............................

கூப்பன் ஐந்தும், புகைப்படமும்

..............................

பெற்றோர் கையொப்பம்

# ஒஸ்கார் விருதுக்கான தெரிவில் மாற்றங்கள் செய்யப்பட வேண்டும்

## ஒஸ்கார் விருது வழங்கும் அமைப்பின் தலைவர் தெரிவிப்பு



சிறந்த நடிகர்- நடிகைகளுக்கான ஒஸ்கார் விருதுக்கான தெரிவுப் பட்டியலில் வெள்ளை இனத்தவர்கள் மட்டுமே இடம்பிடித்துள்ள நிலையில், எதிர்வருங் காலத்தில் ஒஸ்கார் விருதுக்கான பட்டியல்களில் வெவ்வேறு பின்னணிகளைக் கொண்டவர்கள் இடம்பெற வேண்டியதன் அவசியத்தை ஒஸ்கார் விருது வழங்கும் அமைப்பின் தலைவர் வலியுறுத்தியுள்ளார்.

பல்வேறுபட்ட கருத்துக்களையும், குரல்களையும் எதிரொலிப்பதில் ஒஸ்கார் அமைப்பு பெரும் முன்னேற்றங்களை கொண்டுவர முயற்சிப்பதாக அந்த அமைப்பின் தலைவராக தேர்ந்தெடுக்கப்பட்டுள்ள முதல் கறுப்பினத்தவரான செரில் புனே ஐசக்ஸ் தெரிவித்துள்ளார்.

சிறந்த நடிகர், நடிகை மற்றும் சிறந்த துணை நடிகர்களுக்கான விருதுகளுக்கான போட்டியில் இருக்கும் 20 பேரும் வெள்ளை இனத்தவர்களாகவுள்ளனர்.

இயக்கம் மற்றும் கதை வசனம் ஆகிய துறைகளுக்கான ஒஸ்காருக்கு ஒரு பெண் கூட தேர்வு செய்யப்படவில்லை. ஹொலிவுட் திரைத்துறையினருக்கு கிடைக்கக் கூடிய மிகப் பெரும் அங்கீகாரமாக ஒஸ்கார் விருதுகள் கருதப்படுகின்றன.

2015ஆம் ஆண்டுக்கான ஒஸ்கர் விருதுவழங்கும் விழா அடுத்த மாதம் 22ஆம் திகதி நடைபெறவுள்ளமை குறிப்பிடத்தக்கது.

# மும்பாயில் தொழுநோயாளிகள் மருத்துவம் பார்க்கும் அவலம்

மும்பை மருத்துவமனையில் ஊழியர் பற்றாக்குறையால் தொழுநோயாளிகளே மருத்துவர்களாக மாறிய அவலம் நடந்துள்ளது.

மும்பை நகராட்சிக்குச் சொந்தமான அக்வோர்த் நகராட்சி மருத்துவமனையில் 100 நோயாளிகளுக்கு 4 மருத்துவர்களே உள்ளனர். இதனால், அனைத்து நோயாளிகளையும் பராமரிக்க முடியாத நிலை ஏற்பட்டுள்ளது.

இந்த மருத்துவமனை ஆசியாவின் பணக்கார உள்ளூராட்சி அமைப்பான பிரிஹன்மும்பை நகராட்சிக்கு (பிஎம்சி) சொந்தமானது என்பது குறிப்பிடத்தக்கது.இந்நிலையில், குடும்பத்தால் ஒதுக்கப்பட்டு மருத்துவமனையில் தஞ்சம் அடைந்திருக்கும் தொழுநோயாளிகள் தங்கள் சக நோயாளிகளுக்கு உதவிக் கொள்கின்றனர்.பல வருடங்களாக அங்கு சிகிச்சை பெற்று வரும் ராமன் தினமும் தரைகளை சுத்தப்படுத்தி வருகிறார். மேலும், மருத்துவர்கள் செய்ய மறுக்கும் தொழுநோயாளிகளின் காயத்திற்கு கட்டுப் போடும் வேலையை சாவந்த என்ற நோயாளி செய்து வருகிறார்.

# சீனாவில் படகு கவிழ்ந்ததில் 22பேர் நீரில் மூழ்கிப் பலி

(பீஜிங்)

சீனாவில் படகு கவிழ்ந்து விபத்துக்குள்ளானதில், இந்தியர் உட்பட 22 பேர் உயிரிழந்தனர். சீனாவின் கிழக்கு ஜியாங்சு மாகாணத்தில், 25 பயணிகளை ஏற்றிக் கொண்டு படகு ஒன்று, யாங்சே ஆற்றில் கடந்த வெள்ளிக்கிழமை சென்று கொண்டிருந்தது.

அதில், சிங்கப்பூரைச் சேர்ந்த 4 பேர், இந்தியா, இந்தோனேஷியா, மலேசியா, ஜப்பான் ஆகிய நாடுகளைச்சேர்ந்த தலா ஒருவரும், சீனாவைச்சேர்ந்த 17 பேரும் இருந்தனர். ஜிங்ஜியாங்ரு ஜாங்ஜியாங் நகரங்களுக்கு இடையே, சென்றபோது, திடீரென தலைகீழாக கவிழ்ந்து படகு விபத்துக்குள்ளானது.

இதனால், படகில் இருந்து பயணிகள் வெளியே வரமுடியாமல் தத்தளித்தனர். அவர்களை மீட்பதற்காக, 30 படகுகள் மீட்புப்பணியில் இறங்கின. நீண்ட நேர முயற்சிக்குப் பின்னர், 25 பயணிகளில் 3 சீனர்கள் மட்டுமே உயிருடன் மீட்கப்பட்டனர்.

கடும் குளிர், ஆற்றின் வேகமான நீரோட்டம் காரணமாக படகை நேராக நிமிர்த்துவதில், மீட்புப் படையினருக்கு சிரமம் ஏற்பட்டது. இந்த நிலையில், ராட்சத கிரேனின் உதவியோடு, நேற்றுக்காலையில் படகு நேராக நிமிர்த்தப்பட்டது. அதில், மீதமிருந்த 22 பேரும் சடலமாக மீட்கப்பட்டனர்.

# போதைப் பொருள் விவகாரம் ஆறு பேருக்கு தூக்குத்தண்டனை

இந்தோனேஷியாவில் போதைப் பொருள் விவகாரங்களில் குற்றவாளிகளாக தீர்ப்பளிக்கப்பட்ட ஆறு பேர் மீதான மரணதண்டனை நிறைவேற்றப்பட்டுள்ளது.

இவர்கள் துப்பாக்கியால் சுட்டுக் கொல்லப்பட்டு மரணதண்டனை நிறைவேற்றப்பட்டுள்ளது. இவர்களில் இரு பெண்களும், நான்கு ஆண்களும் அடங்குகிறார்கள்.

பிரேஸில், நெதர்லாந்து, வியட்னாம், மாலாவி, நைஜீரியா ஆகிய நாடுகளைச் சேர்ந்த ஐந்து வெளிநாட்டவர்களும் இதில உள்ளடங்குகிறார்கள். தமது பிரஜைகள் மீது கருணை காட்டுமாறு விடுக்கப்பட்ட கோரிக்கையை இந்தோனேஷிய அரசாங்கம் நிராகரித்ததைத் தொடர்ந்து, அந்நாட்டுக்கான தமது உயர்ஸ்தானிகர்களை பிரேசிலும், நெதர்லாந்தும் திருப்பி அழைத்துள்ளன.

இதேவேளை பாலி-நைன் என்றழைக்கப்படும் குழுவின் சார்பில் அவுஸ்ரேலியாவிற்கு ஹெரோயினைக் கடத்த முனைந்ததாக குற்றம் சாட்டப்பட்ட அவுஸ்ரேலியப் பிரஜைகளான மயூரன் சுகுமாரன், அன்ட்ரு சான் ஆகியோர் மரணதண்டனைக்காக காத்திருக்கிறார்கள்.

உலகச் செய்திகள்

# பறவைக்காய்ச்சல் சீனாவில் 2பேர் பலி

சீனாவின் புஜியான் மாகாணத்தில் பரவி வரும் பறவைக் காய்ச்சலால் 2 பேர் உயிரிழந்ததாக அதிகாரிகள் தெரிவித்துள்ளனர். இதுதவிர, மேலும் 15 பேருக்கு அந்த நோய் இருப்பது உறுதி செய்யப்பட்டுள்ளது. ஹெச்.7.என்.9 என்ற இந்த உயிர்க் கொல்லி நோய், இந்த ஆண்டுத் தொடக்கத்திலிருந்து அந்த மாகாணத்தில் பரவி வருவதாக மருத்துவ அதிகாரிகள் கூறினர்.

# 5வயது சிறுவனுக்கு 65 அறுவை சிகிச்சைகள்

(பியோரியா)

இந்தியாவின் அரிசோனா மாநிலத்தில் உள்ள பியோரியா நகரத்தில் வசித்து வரும் எம்மெட் தவழும் குழந்தையாக இருக்கும் போது டிவிடி ரிமோட் பற்றறியை விழுங்கியதால் சிறுவன் பேச முடியாமல் அவதிப்பட்டு வந்தான் பின்னர் தொண்டையில் சிறு துளையிட்டு குழாய் மூலம் செயற்கை சுவாசம் செலுத்தப்பட்டது. மேலும் பற்றறியில் உள்ள அசிட கசிந்ததால் எம்மெட்டுக்கு உணவுக்குழாயில் கடுமையான எரிச்சல் ஏற்பட்டது.



இரண்டு வயதிற்குள்ளே 200 முறை எக்ஸ்ரே சோதனையும், 65 அறுவைச் சிகிச்சைகளும் எம்மெட்டுக்கு செய்யப்பட்டுள்ளன. அசிட்டால் எரிந்து போன உணவுக்குழாய் நீக்கப்பட்டு தொடர்ந்து சிகிச்சை பெற்று வந்த எம்மெட், நான்கு வருடங்களுக்கு பிறகு இயற்கையாக மூச்சுவிடவும், பேசவும் தொடங்கியிருக்கிறான்.

தங்கள் அலட்சியத்தால் மகனுக்கு நேர்ந்த நிலைமையை நினைத்து வருந்திய பெற்றோர் பெரும் மகிழ்ச்சியடைந்தனர்.

## நாட்டிற்கு....

தமிழரசுக் கட்சியின் ஒழுங்காற்று நடவடிக்கை தொடர்பாக ஜனவரி 11இல் அனந்தி சசிதரனுடன் தேசம்நெற் தொடர்பு கொண்ட போது தமிழரசுக் கட்சியின் தலைவர் மாவை சேனாதிராஜா தன்னை கடுமையாகத் திட்டியதாகவும் அதனால் தான் மயங்கி வீழ்ந்ததாகவும் தன்னுடைய விட்டுக்கு தமிழரசுக் கட்சியின் மாகாண சபை உறுப்பினர்களே கல்லெறிந்ததாகவும் தெரிவித்தார். தான் மகிந்த அரசுடன் நெருக்கமாகச் செயற்படுவதாகவும் துரோகியெனத் தன்னை தூற்றுவதாகவும் அனந்தி தன்னுடைய மனவருத்தத்தை பகிர்ந்துகொண்டார்.

அனந்தி சசிதரனின் அரசியல் பிரவேசத்தின் ஆரம்பத்திலேயே அவருக்கும் மாவை சேனாதிராஜாவுக்கும் இடையே முரண்பாடுகள் ஏற்பட்டன. முதலமைச்சர் ஆசனத்திற்கு இரா. சம்பந்தன் சி.வி. விக்கினேஸ்வரனைத் தெரிவு செய்ததனால், ஏனைய உறுப்பினர்களை நியமிக்கும் பொறுப்பு மாவை சேனாதிராஜாவுக்கு வழங்கப்பட்டது. சிறீதரன் அனந்தி சசிதரனை அரசியலுக்கு வரத் தூண்டியுள்ளார். மாவை சேனாதிராஜாவுக்கு அனந்தி சசிதரனைப் பற்றிச் சொல்லி இருக்கிறார்.

மாவை சேனாதிராஜா முன் அறிவித்தல் இல்லாமலேயே பிஸ்கற் பெட்டியும் கைக் கடிகாரம் ஒன்றும் வாங்கிக் கொண்டு அனந்தி சசிதரனைச் சந்திக்கச் சென்றுள்ளார். அங்கு அனந்தி சசிதரனிடம் மாகாண சபையில் போட்டியிடுவதற்கான விருப்பத்தை கேட்டிருக்கிறார். சிறீதரனுடன் மட்டுமே இது பற்றிக் கதைத்திருந்த நிலையில் சிறீதரனுடன் கலந்தாலோசிக்காமல் மாவை சேனாதிராஜாவுக்கு பதில் சொல்ல முடியாத நிலையில், அனந்தி சசிதரன் மாவை சேனாதிராஜாவுக்கு உடனடியாக தன் சம்மதத்தை தெரிவிக்கவில்லை. மாவை சேனாதிராஜா சென்ற பின், அனந்தி சசிதரன் சிறிதரனுடன் கலந்துரையாடி தன்னுடைய சம்மதத்தை தெரிவித்தார். அந்தத் தகவலை தனக்கு நேரடியாக அனந்தி சசிதரன் தெரிவிக்காததால் கோபமடைந்த மாவை சேனாதிராஜா, சிறீதரன் அனந்தி சசிதரனுடைய சமமதத்தை தெரிவித்த போது அவருக்கு ஒரு ஆசனத்தை ஒதுக்க மறுத்துவிட்டார்.

ஆனால் குறிப்பிட்ட வீதமான பெண்களைத் தேர்தலில் போட்டியிட வைக்க வேண்டும் என்ற சட்டம் இருந்ததை தலைமைப்பீடம் சுட்டிக்காட்டியதால் அனந்தி சசிதரன் மாகாண சபைத் தேர்தலில் நின்று முதலமைச்சருக்கு அடுத்ததாக அதிகப்படியான வாக்குகளைப் பெற்று அமோக வெற்றியைப் பெற்றார். இவரது வெற்றி தமிழரசுக் கட்சிக்குள்ளேயே பலருக்கு பொறாமையை ஏற்படுத்தியது.

அனந்தி சசிதரனுக்கு எதிராக ஒழுக்காற்று நடவடிக்கை எடுப்பதற்கு தமிழரசுக் கட்சிக்கு தகைமையுள்ளதா? என்ற கேள்வியை தமிழரசுக் கட்சியின் தலைமைப் பீடம் மீள்பரிசீலிப்பது தமிழரசுக் கட்சிக்கு அவசியமானது.

# தனது மகளை உயிருடன் புதைக்க முயன்ற தந்தை

## வங்கதேசத்தில் சம்பவம்

(திரிபுரா)



திரிபுரா மாநிலத்தில், இந்தியா - வங்கதேசம் எல்லையை ஒட்டிய கிராமத்தைச் சேர்ந்தவர் அபுல் உசேன். இவருக்கு, 10 வயதில் ஒரு மகள் உள்ளார். பெண் குழந்தையை விரும்பாத அபுல் உசேன், தன் மகளை கொல்ல விரும்பினார். அதனால், மனைவி வெளியே சென்றிருந்த நேரத்தில், வீட்டின் பின்புறத்தில் குழி ஒன்றைத் தோண்டினார். அதில், தன் மகளை கைகள் மற்றும் வாயைக் கட்டி உள்ளே இறக்கினார். பின், மண்ணை மூடத் தொடங்கினார். சிறுமியின் மார்பு வரை அபுல் உசேன் மண்ணை மூடியிருந்த நிலையில், வெளியே சென்றிருந்த, அவரின் மனைவி வீட்டிற்கு திரும்பி விட்டார். கணவனின் செயற்பாடுகளில் சந்தேகமடைந்த, மனைவி கூச்சல் போட்டார். உடன் ஓடி வந்த அக்கம் பக்கத்தினர் சிறுமியை மீட்டனர். அத்துடன், அபுல் உசேனுக்கு தர்ம அடி கொடுத்து பொலிஸில் ஒப்படைத்தனர்.

# மோசடிகளுக்கு எதிராக நடவடிக்கை அரசிடம் கோருகிறது ஜே.வி.பி.

கடந்த காலத்தில் ஊழல் மோசடிகளில் ஈடுபட்டவர்களுக்கு எதிராக கடுமையான நடவடிக்கை உடனடியாக எடுக்கப்பட வேண்டுமென ஜே.வி.பி. அரசிடம் கோரியுள்ளது.

புதிய அரசாங்கம் உருவாக்கப்பட்டு ஒருவார காலம் கடந்துள்ள நிலையிலும் குற்றச் செயல்கள், ஊழல் மோசடிகளில் ஈடுபட்டவர்களுக்கு எதிராக எவ்வித நடவடிக்கையும் எடுக்கப்படவில்லை என ஜே.வி.பி. குற்றம் சுமத்தியுள்ளது.

புதிய அரசாங்கம் ஊழல் மோசடிகளில் ஈடுபட்டவர்களுக்கு எதிராக நடவடிக்கை எடுக்காவிட்டால் வீதியில் இறங்கி போராட்டங்களை நடாத்த நேரிடும் என ஜே.வி.பி. தெரிவித்துள்ளது.

நாள் தோறும் கடந்த அரசாங்க உறுப்பினர்களுக்கு எதிராக பாரியளவில் குற்றச்சாட்டுக்கள் சுமத்தப்பட்டு வருகின்றமை குறிப்பிடத்தக்கது.

முன்னாள் ஜனாதிபதியின் சகோதரர் பசில் ராஜபக்ஷ உள்ளிட்ட இலஞ்ச ஊழல் குற்றச்சாட்டு சுமத்தப்பட்ட ஐந்து முக்கியஸ்தர்கள் நாட்டை விட்டு வெளியேறிச் சென்றுள்ளதாக ஜே.வி.பி. சுட்டிக்காட்டியுள்ளது.

இலஞ்ச ஊழல் மோசடிகள் தொடர்பில் குற்றம் சுமத்தப்பட்டவர்கள் நாட்டின் பிரதான விமான நிலையத்தின் ஊடாகவே நாட்டை விட்டு வெளியேறிச் சென்றுள்ளதாகத் தெரிவித்துள்ளது.

அரசாங்கத்தினால் நிறுவப்பட்டுள்ள ஆலோசனை சபைக் கூட்டத்தில் தொடர்ச்சியாக ஜே.வி.பி. இது குறித்து கேள்வி எழுப்பும் என அறிவித்துள்ளது.

பொதுமக்கள் பணத்தைச் சுரண்டிய நபர்களுக்கு எதிராக கடுமையான நடவடிக்கை எடுக்கப்பட வேண்டுமென புதிய அரசாங்கத்திற்கு மக்களுடன் இணைந்து அழுத்தம் கொடுக்கப் போவதாக ஜே.வி.பி. தெரிவித்துள்ளது.

# இருபத்தைந்து நாள் திருவிழா மருதடியில் இந்த ஆண்டு முதல்

அடியார்களின் விருப்பத்திற்கமைய மானிப்பாய் மருதடி விநாயகர் ஆலயத்தின் வருடாந்த திருவிழாக்கள் இவ்வாண்டு தொடக்கம் 18இல் இருந்து 25ஆக அதிகரிக்கப்படவுள்ளது. இதற்கான சகல ஏற்பாடுகளையும் தர்மகர்த்தா சபையினர் மேற்கொண்டுள்ளனர்.

சுண்ணாம்பினால் அமைக்கப்பட்டிருந்த பழமை வாய்ந்த மானிப்பாய் மருதடி விநாயகர் ஆலயம் 2004 ஆம் ஆண்டு முற்றாக இடிக்கப்பட்டு இந்தியாவிலிருந்து வரவழைக்கப்பட்ட சிற்பக்கலைஞர்களின் உதவியுடன் சுமார் 25 கோடி ரூபா செலவில் கருங்கற்களைப் பயன்படுத்தி கண்களைக் கவரும் வகையில் சிற்ப வேலைகளுடன் அமைக்கப்பட்டு வருகின்றது.

பத்து வருடங்களுக்கு மேலாக இடம்பெற்று வந்த புனரமைப்பு வேலைகள் அடியார்களின் ஆவலை பூர்த்தி செய்யும் வகையில் தர்மகர்த்தாசபையின் விடாமுயற்சியினால் நான்கு திசைகளிலும் கோபுரத்துடன் அமைக்கப்பட்டு வரும் ஆலயத்தின் கும்பாபிஷேகம் அடுத்த மாதம் 2 ஆம் திகதி நடைபெறும் என்று அறிவிக்கப்பட்டதை தொடர்ந்து தற்பொழுது கட்டட வேலைகள் இரவு பகலாக இடம்பெற்று வருகின்றன.

ஆலயத்தின் வருடாந்த திருவிழாக்களின் எண்ணிக்கையை அதிகரிக்குமாறு அடியார்கள் கேட்டுக் கொண்டதற்கு இணங்க 2015 ஆம் ஆண்டு தொடக்கம் திருவிழாவின் எண்ணிக்கையை அதிகரிக்க முன்வந்துள்ள தர்மகர்த்தா சபையினர் இதுவரை காலமும் இடம்பெற்று வந்த 18 திருவிழாக்களை 25 ஆக அதிகரிப்பதற்கான ஒழுங்குகளை மேற்கொண்டு வருகின்றனர்.

## பயணிகள் பஸ்வண்டி தீ விபத்தில் சிக்கியது


யாழ்ப்பாணத்திலிருந்து கொழும்பு சென்ற பஸ் நேற்று அதிகாலை வத்தளைப்பகுதியில் தீ பற்றி எரிந்துள்ளது.

கொழும்பு - கட்டுநாயக்க அதிவேக நெடுஞ்சாலையில் வத்தளை பகுதியில் பயணித்துக்கொண்டிருந்தபோதே இந்தச் சம்பவம் இடம்பெற்றுள்ளது.

இயந்திரக் கோளாறு காரணமாக பஸ் தீப்பற்றிக்கொண்டுள்ளது. இதனையடுத்து பஸ்ஸிலிருந்த பயணிகள் அனைவரும் உடனடியாக இறக்கப்பட்டுள்ளனர். பஸ்ஸில் 36 பயணிகள் இருந்தனர் என்றும், அவர்கள் எவருக்கும் ஆபத்து ஏற்படவில்லை என்றும் பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

# ஆயுதக் கப்பல் காலி துறைமுகத்தில்

## 3000 துப்பாக்கிகள் சிக்கின



(கொழும்பு)

காலி துறைமுகத்தில் நிறுத்தி வைக்கப்பட்டிருந்த மஹநுவர கப்பலில் உள்ள 12 கொள்கலன்களில் ஆயுதங்கள் இருப்பதாக பொலிஸாருக்கு இரகசிய தகவல்கள் கிடைத்துள்ளன.

இந்த ஆயுத களஞ்சியசாலை தனியார் நிறுவனத்துக்கு சொந்தமானது எனக் கூறப்படுகின்றது.

கப்பலில் களஞ்சியப்படுத்தியுதாக வெளியான தகவல்களையடுத்தே பொலிஸார் அங்கு தேடுதலை மேற்கொண்டுள்ளனர்.

இது தொடர்பில் பொலிஸ் தலைமையகம் விடுத்துள்ள ஊடக அறிக்கையில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது, காலி துறைமுகத்தில் நங்கூரமிடப்பட்டுள்ள கப்பலில் சந்தேகத்துக்கிடமான பொருட்கள் இருப்பதாக காலி பிரதி பொலிஸ் மா அதிபர் ஏ.எஸ்.டீ.எஸ்.குணவர்தனவுக்கு நேற்று நண்பகல் தகவல் கிடைத்தது.

அந்தத் தகவலின் அடிப்படையில் நங்கூரமிடப்பட்டிருந்த மஹநுவர கப்பல் சோதனைக்கு உட்படுத்தப்பட்டது. அந்தக் கப்பல், எவன்காட் என்ற தனியார் பாதுகாப்பு நிறுவனத்தினால் குத்தகைக்கு பெறப்பட்டதாகும். அந்தக் கப்பலில் ஆயுதங்கள் பல இருந்தன.

ரி-56 ரக துப்பாக்கிகள், மெசின் கண், 84 எஸ் ரைபில் எனும் ஆயுதம் மற்றும் தன்னியக்க ஆயுதங்கள் மற்றும் அரை தன்னியக்க ஆயுதங்கள் உள்ளிட்ட 3,000 ஆயுதங்கள் இருந்ததாக அந்தக் கப்பலுக்கு பொறுப்பாக இருந்தவர் தெரிவித்துள்ளார்.

பாதுகாப்பு அமைச்சிடமிருந்து அனுமதி பெற்றுக் கொள்ளப்பட்டதாகவும் கப்பலுக்கு பாதுகாப்பு வழங்குவதற்காக அதற்குள் மிதக்கும் ஆயுத களஞ்சியசாலையும் இருந்ததாக அவர் தெரிவித்துள்ளார்.

# இணைத்தலைவராக பிரதியமைச்சர் விஜயகலா?



(யாழ்ப்பாணம்)

புதிய அமைச்சரவையில் மகளிர் விவகாரப் பிரதி அமைச்சராகப் பொறுப்பேற்றுள்ள விஜயகலா மகேஸ்வரன் யாழ்ப்பாணம், கிளிநொச்சி ஆகிய மாவட்டங்களின் ஒருங்கிணைப்புக்குழுக் கூட்டங்களின்போது இணைத் தலைவராக நியமிக்கப்படுவதற்கு சாத்தியம் இருப்பதாக தெரியவருகிறது.

அவ்வாறு நியமிக்கப்பட்டால் அடுத்த பொதுத் தேர்தல் வரையான காலப்பகுதிவரை வடக்கு மாகாண முதலமைச்சர் க.வி.விக்னேஸ்வரனுடன், பிரதி அமைச்சர் விஜயகலாவும் இணைத் தலைவராகச் செயற்படுவார் என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

## படை விலகல்...

வடக்கில் இருந்து படையினரை விலக்கிக் கொள்ளப் போவதாக செய்திகள் வெளியாகின. எனினும் அதில் உண்மையில்லை என்றும் அமைச்சர் தெரிவித்துள்ளார்.

அதேவேளை நாட்டின் தேசிய பாதுகாப்பிற்கு ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன தலைமையிலான புதிய அரசாங்கம் முன்னுரிமை கொடுத்து செயற்படும் என்றும் புதிய அரசாங்கத்தின் பாதுகாப்பு இராஜாங்க அமைச்சர் தெரிவித்துள்ளார்.

நாட்டை பிளவுபடுத்த எந்தவொரு சந்தர்ப்பத்திலும் இடமளிப்பதில்லை என்று புதிய ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன பதவியேற்ற முதல் நாளே மிகத் தெளிவாகக் குறிப்பிட்டிருந்ததாகவும் பாதுகாப்பு அமைச்சர் விஜேவர்தன சுட்டிக்காட்டியுள்ளார்.

ஜனாதிபதித் தேர்தல் காலத்தில் புதிய ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன ஆட்சிபீடம் ஏறியதும் வடக்கில் நிலைகொண்டுள்ள இராணுவத்தை அங்கிருந்து அகற்றிக்கொள்வார் என எதிர்த்தரப்பினர் பொய்ப் பிரசாரங்களை மேற்கொண்டிருந்ததாக குறிப்பிட்ட விஜேவர்தன, எனினும் அந்தப் பிரசாரங்களில் எந்தவித உண்மையும் இல்லை என்பதை நிரூபித்துள்ளதாகவும் தெரிவித்துள்ளார்.

இந்தச் சந்திப்பின் போது மேலும் கருத்துத் தெரிவித்த அமைச்சர், படைவீரர்களின் குடும்பங்கள் தொடர்பில் அரசாங்கம் கூடிய கவனம் செலுத்தும் என்று கூறியதுடன், குறிப்பாக போரின் போது அவயவங்களை இழந்த படையினர் மற்றும் குடும்பங்களின் நலனுக்காக பல திட்டங்களை மேற்கொள்ள நடவடிக்கை எடுப்பதாகவும் உறுதியளித்துள்ளார்.

அத்துடன் சிவில் பாதுகாப்பு படையணியைச் சேர்ந்தவர்கள் எதிர்நோக்கும் பிரச்சினைகள் தொடர்பிலும் கூடிய கவனம் செலுத்தப்படும் என்று தெரிவித்துள்ள அமைச்சர் விஜேவர்தன, அவர்களை நேரில் சந்தித்து அவர்களின் பிரச்சினைகள் தொடர்பில் ஆராயத் திட்டமிட்டுள்ளதாகவும் குறிப்பிட்டுள்ளார்.

## பொன்சேகா...

தீர்மானத்தை மேற்கொண்டதாக ஜயந்த கெடகொட குறிப்பிட்டுள்ளார்.

ஜனநாயகக் கட்சி சார்பாக நாடாளுமன்றத்துக்கு தெரிவு செய்யப்பட்ட சரத் பொன்சேகாவின் குடியுரிமை இரத்தானதை அடுத்து, அவரது நாடாளுமன்ற உறுப்பினர் பதவி ஜயந்த கெடகொடவிற்கு வழங்கப்பட்டமை குறிப்பிடத்தக்கது.

இந்த நிலையில் எதிர்வரும் நாடாளுமன்ற அமர்வில் நாடாளுமன்ற உறுப்பினராக சரத் பொன்சேகா சத்தியப்பிரமாணம் செய்து கொண்டால் அவர் அமைச்சரவை அந்தஸ்த்துள்ள பிரதிப் பாதுகாப்பு அமைச்சராக நியமிக்கப்படுவார் என எதிர்பார்க்கப்படுகிறது.

## சுஷ்மாவுடன்...

மங்கள சமரவீர, இன்று பிரதமர் நரேந்திர மோடியை சந்திக்கவுள்ளார். இலங்கையில் புதிய அரசாங்கம் பொறுப்பேற்ற ஒரு வார காலத்திற்குள், அந்நாட்டு வெளியுறவுத்துறை அமைச்சர் இந்தியாவிற்கு பயணம் மேற்கொண்டுள்ளதால் இது முக்கியத்துவம் வாய்ந்த சுற்றுப்பயணமாக கருதப்படுகிறது.

மேலும் மங்கள சமரவீர மற்றும் சுஷ்மா சுவராஜ் இடையேயான சந்திப்பின் போதும் கூட, தாங்கள் இந்தியாவுடனான உறவுக்கு முக்கியத்துவம் அளிப்பதாக மங்கள சமரவீர, இந்திய அமைச்சரிடம் கூறியதாகவும் தகவல்கள் தெரிவிக்கின்றன.

இலங்கையில் மகிந்த ராஜபக்ஷ தலைமையிலான அரசாங்கமும் இந்தியாவுடனான நல்லுறவை வலுப்படுத்தி வந்தபோதும் கூட சீனா, பாகிஸ்தான் போன்ற நாடுகளிடமும் சமமான உறவை ஏற்படுத்தி வந்தது. இந்தியாவுக்கு அச்சுறுத்தல் ஏற்படுத்தும் நோக்கத்தில் தான், இத்தகைய செயல்களில் இலங்கை ஈடுபடுவதாக அப்போது இந்திய தரப்பில் விமர்சனங்கள் எழுப்பப்பட்டன.

இந்நிலையில் இலங்கையில் பொறுப்பேற்றுள்ள புதிய அரசாங்கம், இந்தியாவுக்கு முதல் முக்கியத்துவம் அளிப்பதாக வெளிப்படுத்தியுள்ளது. இருநாட்டுக்கும் இடையேயான நல்லுறவை மேம்படுத்தும் என்கிற எதிர்பார்ப்பை உண்டாக்கியுள்ளதாக அரசியல் அவதானிகள் கருத்து வெளியிட்டுள்ளனர் என்று பி.பி.சி. தெரிவித்துள்ளது.

நேற்றைய சந்திப்பின்போது மீனவர்கள் விவகாரம், தமிழர்கள் நல்வாழ்வு, வர்த்தகம் உள்ளிட்ட பல்வேறு விவகாரங்கள் குறித்து விவாதிக்கப்பட்டுள்ளன. அதே சமயத்தில் இலங்கையின் புதிய ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவின் இந்தியப் பயணம் குறித்தும் அப்போது ஆலோசனைகள் நடைபெற்றதாகவும் கூறப்படுகிறது.

## இடைக்கால...

சமர்ப்பிக்கப்படவுள்ளது. இது குறித்து நிதி அமைச்சர் ரவி கருணாநாயக்க கூறுகையில், ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன மக்களுக்கு வழங்கிய வாக்குறுதிகள் இடைக்கால பட்ஜெட்டில் நிறைவேற்றப்படும். ஆனால் முன்னைய அரசாங்கம் அரசக்ஜானாவையே காலியாக்கி விட்டது.

இதனால் வருமானத்தை இனித்தான் தேட வேண்டும். அரச ஊழியர்களுக்கு 5 ஆயிரம் ரூபா சம்பள அதிகரிப்பு எதிர்வரும் 30 ஆம் திகதி தொடக்கம் அதிகரிக்கப்படும். மறைமுக வரிகள் நீக்கப்படும். சமுர்த்திப் பயனாளிகளுக்கு 200 ரூபா அதிகரிக்கப்படும். பல்கலைக்கழக மாணவர்களுக்கான மகாபொல புலமைப்பரிசில் அதிகரிக்கப்படும், ஓய்வூதியர்களுக்கு 3 ஆயிரத்து 500 ரூபா ஓய்வூதிய இடைக்காலக் கொடுப்பனவும் வழங்கப்படும் என்றார்.

இதனிடையே அரசாங்கத்தின் 100 நாள் திட்டங்களுக்கு 89 ஆயிரம் கோடி ரூபா தேவைப்படும் என எதிர்க்கட்சிகளில் ஒன்றான பவித்திரு ஹெல உறுமயவின் தலைவர் கம்மன்பில தெரிவித்தார்.

## தேர்தல்கால...

நடவடிக்கைகள் குறித்து நாங்கள் மகிழ்ச்சியடைந்துள்ளோம்.

இலங்கையில் ஜனநாயகம் தொடர்பாக வழங்கப்பட்ட உறுதியான தீர்ப்பை நாங்கள் வரவேற்கிறோம். ஆட்சி மாற்றம் அமைதியான முறையில் இடம்பெற்றுள்ளது.

புதிய அரசாங்கம் ஆட்சிப் பொறுப்பை ஏற்று, தனது தேர்தல் பிரசாரத்தின் போது அளிக்கப்பட்ட பல வாக்குறுதிகளை நிறைவேற்றத் தொடங்கியுள்ளது. நாங்கள் புதிய அரசாங்கத்துடன் இணைந்து பணியாற்ற எதிர்பார்த்துள்ளோம் என அவர் தெரிவித்துள்ளார்.

# கடல் கடந்த சேவை அதிகாரிகள் 31 பேரை திருப்பி அழைக்கிறது அரசு

முன்னைய ஆட்சிக் காலத்தில் உயர் ஸ்தானிகர்கள் மற்றும் தூதுவர்களாக நியமிக்கப்பட்ட 31 பேரை உடனடியாக நாடு திரும்புமாறு புதிய வெளிவிவகார அமைச்சர் மங்கள சமரவீர உத்தரவிட்டுள்ளார்.

வெளிவிவகார அமைச்சின் கீழ் உலகம் முழுவதும் 66 உயர் ஸ்தானிகர் அலுவலகங்களும், தூதுவராலயங்களும் அமைக்கப்பட்டுள்ளன. இதில் 31 அலுவலகங்களுக்கான தலைமை இராஜதந்திரிகளாக இராஜதந்திர சேவைக்கு வெளியில் இருந்து பலர் நியமிக்கப்பட்டுள்ளனர்.

அரசியல் செல்வாக்கில் உயர்ஸ்தானிகர்கள் மற்றும் தூதுவர்களாக நியமிக்கப்பட்ட 31 பேரையுமே உடனடியாக நாடு திரும்புமாறு வெளிவிவகார அமைச்சர் மங்கள உத்தரவிட்டிருக்கின்றார்.

இதேபோல் அரசியல் நியமனத்துடன் இராஜதந்திர சேவையில் இருக்கும் ஏனைய நிலை அதிகாரிகள் சுமார் 200 பேரையும் திருப்பி அழைக்க நடவடிக்கை எடுக்கவும் வெளிவிவகார அமைச்சர் தீர்மானித்துள்ளதாக அமைச்சின் உயர் அதிகாரியொருவர் தெரிவித்தார்.

இனிவரும் காலங்களில் வெளிநாடுகளிலுள்ள இலங்கையின் தூதரகங்களுக்கு அதிகாரிகளை நியமிக்கும் போது இராஜதந்திர சேவையில் உள்ளவர்களுக்கே அதிக வாய்ப்புகளை வழங்கவும் புதிய அமைச்சர் உத்தரவிட்டுள்ளதாக அந்த அதிகாரி கூறினார்.

இதற்கமைய இராஜதந்திர சேவையிலுள்ள 70 வீதமானோருக்கு உரிய பதவிகள் வழங்கப்படும் என்றும், கள நிலைமைகளைக் கருத்தில் கொண்டு அதற்கேற்ப வெளியில் இருந்து துறைசார் நிபுணர்களும் சேவையில் இணைத்துக் கொள்ளப்படுவார்கள் என்றும் அந்த அதிகாரி மேலும் தெரிவித்தார்.

# போலியான முறைப்பாடு கிளி.பொலிஸார் விசாரணை

(கிளிநொச்சி)

கிளிநொச்சி கல்வி வலயத்தில் கடமையாற்றும் ஆசிரியர் ஒருவர் தன்னை ஊடகவியலாளர் ஒருவர் தாக்கிய முறைப்பாட்டில் எந்தவிதமான உண்மைகளும் இல்லையென பொலிஸ் முறைப்பாட்டில் தெரியவந்துள்ளது.

கிளிநொச்சி கல்வி வலயத்தின் கீழ் உள்ள கரைச்சி கல்விக் கோட்டப் பாடசாலை ஒன்றில் உதவி ஆசிரியராகவும் தற்போது ஆசிரியர் பயிற்சிக் கலாசாலையில் பயிற்சி பெற்று வரும் ஆசிரியர் ஒருவர் தேர்தலுக்கு பின்னர் அதாவது கடந்த 10 ஆம் திகதி 4.30 மணிக்கு கிளிநொச்சி நகர்ப்பகுதியில் வைத்து ஊடகவியலாளர் தன்னைத் தாக்கியதாக கிளிநொச்சிப் பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு ஒன்றை ஊடகவியலாளர் ஒருவருக்கு எதிராக செய்திருந்தார்.

குறித்த முறைப்பாடு தொடர்பாக நேற்று விசாரணை மேற்கொண்ட கிளிநொச்சிப் பொலிஸார் குறித்த முறைப்பாட்டில் எந்தவித மான உண்மையும் இல்லையெனவும் ஊடகவியலாளருக்கு எதிராக சாட்டப்பட்ட பொய்யான குற்றச்சாட்டு எனவும் விசாரணைகளில் தெரியவந்துள்ளது.

# கொள்கலன்கள் இரண்டு மீட்பு

ஜனாதிபதி மாளிகையிலிருந்த சில பொருட்கள் அடங்கிய இன்னும் இரண்டு கொள்கலன்கள் கைப்பற்றப்பட்டுள்ளதாக பொலிஸ் தலைமை அலுவலகம் அறிவித்துள்ளது.

பேலியகொடை பொலிஸ் நிலையத்துக்கு கிடைத்த தகவல்களை அடுத்தே இந்தக் கொள்கலன்கள் இரண்டும் கைப்பற்றப்பட்டுள்ளன என்றும் பொலிஸார் தெரிவித்தனர்.

பேலியகொடை-நீர்கொழும்பு வீதியிலுள்ள ஓரிடத்தில் வைத்தே இவ்விரு கொள்கலன்களும் கைப்பற்றப்பட்டுள்ளன.

# கிழக்கிலும் புதிய ஆளுநர்? இது சம்பந்தனின் நம்பிக்கை

(மட்டக்களப்பு)

இலங்கையின் வடக்கு மாகாணத்தில் இராணுவ பின்புலம் கொண்ட ஆளுநருக்குப் பதிலாக, மூத்த சிவில் அதிகாரியான பலிஹக்காரவை புதிய ஆளுநராக நியமிக்கும் புதிய அரசாங்கத்தின் நடவடிக்கையை வடக்கில் ஆட்சியதிகாரத்தைக் கொண்டுள்ள தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு வரவேற்றுள்ளது.

கடந்த மகிந்த ராஜபக்ஷ அரசாங்கம் ஆளுநரை மாற்றுவதாக வாக்குறுதி அளித்திருந்த போதிலும், அந்த வாக்குறுதியை நிறைவேற்றத் தவறிவிட்டதாகவும் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தலைவர் இரா. சம்பந்தன் பி.பி.சி. தமிழோசையிடம் கூறினார்.

புதிய ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன பதவியேற்றவுடன், அவரைச் சந்தித்து நடத்திய பேச்சுவார்த்தையின் போது ஆளுநர் மாற்றம் பற்றி த.தே.கூ. கோரிக்கை விடுத்திருந்ததாகவும் சம்பந்தன் தெரிவித்தார்.

வெளியுறவுச் சேவையிலும் ஐ.நா.வின் பணிகளிலும் நீண்ட கால அனுபவம் கொண்டவரும், நல்லிணக்க ஆணைக்குழுவின் உறுப்பினருமான எச்.எம்.ஜி.எஸ் பலிஹக்கார வடக்கு மாகாண ஆளுநராக நியமிக்கப்படுவதை தாம் வரவேற்பதாகவும் அவர் கூறினார்.

வடக்கைப் போலவே கிழக்கு மாகாணசபையிலும் ஆளுநர் மாற்றத்தை தமது கட்சி கோரியிருப்பதாகவும் அந்த மாற்றமும் விரைவில் நடக்கும் என்று நம்புவதாகவும் த.தே.கூ தலைவர் தெரிவித்தார்.

இதனிடையே, ஜனாதிபதித் தேர்தலைத் தொடர்ந்து கிழக்கு மாகாணசபையில் ஆட்சி மாற்றம் ஏற்படுவதற்கான சந்தர்ப்பம் உருவாகியுள்ளதாகவும் அதற்காக சம்பந்தப்பட்ட கட்சிகளுடன் பேச்சுவார்த்தை நடத்திவருவதாகவும் இரா.சம்பந்தன் கூறினார்.

# இனமுரண்பாட்டுக்கு இனி இடமில்லை



(கொழும்பு)

இனி நாட்டுக்குள் இன முரண்பாடுகள் ஏற்பட இடமளிக்கப்பட மாட்டாது என, சுகாதார அமைச்சர் ராஜித சேனாரத்ன தெரிவித்துள்ளார்.

அனைத்து இனங்கள் மற்றும் மதங்களுக்கும் சம உரிமையைப் பெற்றுக் கொடுக்க அரசாங்கம் நடவடிக்கை எடுத்துள்ளதாக அவர் குறிப்பிட்டுள்ளார்.

பேருவளை பகுதியில் இடம்பெற்ற நிகழ்வொன்றின் போதே, அமைச்சர் இவ்வாறு கருத்து வெளியிட்டுள்ளார்.

# கண்காணிப்பு கமராக்களின் பதிவுகளை ஆராய முயற்சி

(கொழும்பு)

ஜனாதிபதித் தேர்தல் தினத்துக்கு அடுத்த நாளான ஜனவரி 9 ஆம் திகதியன்று அதிகாலை, அலரி மாளிகையில் யார்? யார் பிரசன்னமாகியிருந்தனர் என்பதைக் கண்டறியும் நோக்கில் அங்கிருந்து சி.சி.ரீ.வி. கமராக்களை, குற்றப்புலனாய்வு பிரிவினர் ஆராயவுள்ளனர்.

அதேநேரம், அலரிமாளிகையில் குறித்த தினத்தில் மேற்கொள்ளப்பட்ட உள்வரும் மற்றும் வெளிவரும் தொலைபேசி அழைப்புக்கள் தொடர்பிலும் விசாரணைகள் நடத்தப்படவுள்ளன.

தேர்தலில் தோல்வி ஏற்படப் போவதை அறிந்த முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ, இராணுவப்புரட்சி ஒன்றுக்கு திட்டமிட்டார். இதற்காக சட்டமா அதிபர் மற்றும் இராணுவ, பொலிஸ் தலைமைகளை அலரி மாளிகைக்கு அழைத்தார் என்று குற்றம்சுமத்தப்பட்டிருந்தது.

எனினும், அவர் அதற்கு உடன்படவில்லை என்றும் தகவல்கள் வெளியாகியிருந்தன. இந்தக் குற்றச்சாட்டை வெளிவிவகார அமைச்சர் மங்கள சமரவீர குற்றப் புலனாய்வுத்துறையினரிடம் முறைப்பாடாக தாக்கல் செய்துள்ளார்.

# அநீதி இழைக்கப்பட்டவர்களுக்கு நீதி கிடைக்க வேண்டும்

## ஆசிரியர் சங்கம் கோரிக்கை

கல்வித்துறையில் அரசியல் செல்வாக்குகள் மூலமும், அரசியல் அழுத்தங்களுக்கு ஊடாகவும் இதுவரை காலமும் செய்யப்பட்ட அனைத்து நியமனங்களும், பதவியுயர்வுகளும் உடனடியாக இரத்துச் செய்யப்பட வேண்டுமென்றும், பழிவாங்கல்கள் மூலம் அநீதி இழைக்கப்பட்டவர்களுக்கு நீதி வழங்கப்பட வேண்டுமென்றும் மத்திய கல்வி அமைச்சிடம் இலங்கைத் தமிழர் ஆசிரியர் சங்கம் வேண்டுகோள் விடுத்துள்ளது.

கடந்த காலங்களில் முறையற்ற நியமனங்களும், தகுதியே இல்லாதவர்களுக்கு பதவியுயர்வுகளும் வழங்கப்பட்டதோடு, அரசியல் ரீதியாக பலர் பழிவாங்கப்பட்டுள்ளனர். ஒருசிலர் சேவையில் இருந்து நீக்கப்பட்டும் உள்ளனர்.

இவை அனைத்திற்கும் உடனடி விசாரணைகள் ஆரம்பிக்கப்பட்டு உரியவர்களுக்கு நீதி வழங்கப்படவேண்டுமென்று இலங்கைத் தமிழர் ஆசிரியர் சங்கம் மத்திய கல்வி அமைச்சிடம் வேண்டுகோள் விடுத்துள்ளது.

இவை தொடர்பான முறைப்பாடுகளைத் தமக்கு உடனடியாக தெரிவிக்குமாறு இலங்கைத் தமிழர் ஆசிரியர் சங்கத்தின் தலைவரும், பொதுச் செயலாளரும் கூட்டாக கல்வியாளர்களிடம் வேணகோள் விடுத்துள்ளனர்.

# கோயில் கேணியிலிருந்து ஆணின் சடலம் மீட்பு

பருத்தித்துறை, புற்றளைப் பிள்ளையார் கோயில் கேணியில் இருந்து காயங்களுடன் ஆணின் சடலம் ஒன்று நேற்று இரவு மீட்கப்பட்டுள்ளது.

மாமுனை செம்பியன்பற்றைச் சேர்ந்த விஜயகுமார் விஜேந்திரன் (வயது-22) என்பவரது சடலமே மீட்கப்பட்டுள்ளது.

நேற்று மாலை தொடக்கம் குறிப்பிட்ட கேணிக்கு அருகில் CY 8858 என்ற இலக்க பல்ஷர் ரக மோட்டார் சைக்கிள் ஒன்றும், அதன் அருகில் 'ரிசேட்' ஒன்றும் அநாதரவாகக் காணப்பட்டது.

இது குறித்து உடனடியாக பருத்தித்துறை பொலிஸாருக்கு அறிவிக்கப்பட்டது.

சம்பவ இடத்திற்கு விரைந்த பொலிஸார் கடற்படையினரின் உதவியுடன் கேணியில் தேடுதலில் ஈடுபட்ட போது காயங்களுடனும், கண்களிலிருந்து இரத்தம் வடிந்த நிலையிலும் சடலம் மீட்கப்பட்டுள்ளது.

மேலதிக விசாரணைகள் இடம்பெற்று வருகின்றன. (18)

# 'தேசத்துக்கு மகுடம்' இனி சாத்தியமில்லை

## உள்நாட்டு அலுவல்கள் அமைச்சு அறிவிப்பு

2015 ஆம் ஆண்டு தேசத்திற்கு மகுடம் எனும் கண்காட்சி நடத்தப்படமாட்டாது என்று உள்நாட்டு அலுவல்கள் அமைச்சு அறிவித்துள்ளது.

இந்தக் கண்காட்சி, சுதந்திர தினத்துக்கு பின்னர் ஐக்கிய மக்கள் சுதந்திர கூட்டமைப்பு அரசாங்கத்தினால் கடந்த 2007ஆம் ஆண்டு முதல் 2014ஆம் ஆண்டு வரையும் நடத்தப்பட்டது.

2007, 2008 மற்றும் 2009ஆம் ஆண்டுகளில் பண்டாரநாயக்க சர்வதேச மாநாட்டு மண்டபம் மற்றும் வளாகத்திலும், 2010 ஆம் ஆண்டு கண்டியிலும், 2011 ஆம் ஆண்டு மொனராகலையிலும், 2012ஆம் ஆண்டு அநுராதபுரத்திலும், 2013ஆம் ஆண்டு கிழக்கு மாகாணத்திலும், 2014 ஆம் ஆண்டு குளியாப்பிட்டியவிலும் நடத்தப்பட்டது. 2015ஆம் ஆண்டு மாத்தறையில் நடத்துவதற்கு ஐக்கிய மக்கள் சுதந்திர கூட்டமைப்பு அரசாங்கம் ஏற்கனவே தீர்மானித்திருந்தமை குறிப்பிடத்தக்கதாகும்.

# மகிந்த பாலசூரிய வெளிநாடு பயணம்

(கொழும்பு)

சட்டம் ஒழுங்கு அமைச்சின் முன்னாள் செயலாளர் மகிந்த பாலசூரிய வெளிநாட்டுக்குப் பயணமானதாகத் தெரிவிக்கப்படுகிறது.

நேற்றுக் காலை அபுதாபி நோக்கி மகிந்த பாலசூரிய புறப்பட்டுச் சென்றுள்ளார்.

கடந்த 7ஆம் திகதி இவர் சந்தேகத்திற்கு இடமான முறையில் சில பொலிஸ் அதிகாரிகளை அழைத்து கூட்டமொன்றை நடத்தியதாகத் தெரிவிக்கப்படுகிறது.

இது குறித்து விசாரணை நடத்துமாறு சட்ட மா அதிபர் புலனாய்வுப் பிரிவினருக்கு அறிவுறுத்தல் விடுத்துள்ள நிலையில், மகிந்த பாலசூரிய நாட்டை விட்டுச் சென்றுள்ளமை குறிப்பிடத்தக்கது.

இப்பத்திரிகை இல.373 பிரதான வீதி, யாழ்ப்பாணம் என்னும் முகவரியில் அமைந்துள்ள அற்புதன் அச்சகத்தில் 2015 ஜனவரி 19 ஆம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது.